# தமிழரசு

1·3·1981 50 காசு
(மாசி 18, ரௌத்ரி,
ருவள்ளுவர் ஆண்டு 2012)

Licence No... N/MS(C)/PP-23





கலப்புத் திருமணத்
தம்பதியருக்கு
தங்கப் பதக்கமும்
பண உதவியும்

# ஆதிதிராவிட மக்கள் நலம் பேணும் அரசு



ஆதிதிராவிட மக்களுக்கு
இலவச மனைப் பட்டா
வழங்குதல்



ஆதிதிராவிட மக்கள் குடியிருப்பு



மாணவியர் விடுதி



ஆதிதிராவிட மகளிருக்கு
தையற் கருவி வழங்குதல்



டெல்லியில் பிப்ரவரி 13,14—ம் நாட்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுடன் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்களும், மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் அமைச்சர் திரு பி.சி.சேத்தி அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு இரா.நெடுஞ்செழியன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எச்.இராமச்சந்திரன் உடன் உள்ளனர்.

# மாநிலங்களுக்கு உதவிட மத்திய அரசு முன் வர வேண்டும்

**டில்லியில் பிப்ரவரி 13, 14-ஆம் நாட்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆற்றிய உரையின் சாரம் :**

மத்திய அரசு மாநிலங்களுக்குச் செய்யும் உதவிகள், அந்த மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தொகை அடிப்படையில் அமைய வேண்டும்.

காட்கில் முறைப்படி, மக்கள் தொகை அடிப்படையில் உதவிகளைக் கணக்கிடுவது என்பது, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றும்மாநிலங்களைத் தண்டிப்பது போலாகும்.

**சட்டத் திருத்தம்:**

மாநிலங்கள் தங்களுடைய நிதி ஆதாரங்களை விரிவுபடுத்த அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரலாம்.

மேலும் பல்வேறு பொருட்கள் மீது மாநிலங்கள் விற்பனை வரி விதிக்க மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும்.

ரெயில்வே பயணக் கட்டணங்களுக்காக அளிக்கப்படும் மானியத்தினை அதிகரிக்க வேண்டும்.

சிறுசேமிப்பு நிதியில் தற்போது மாநிலங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு திருப்பியளிக்கும் கடனாக அளிக்கப்படுகிறது. இதனை 80 சதவிகிதமாக அதிகரிக்க வேண்டும்.

தேசிய மின்சார இணைப்பு ( Grid ) திட்டத்தை மத்திய அரசு உருவாக்க வேண்டும்.

தமிழரசு
மலர் 11 இதழ் 17
1-3-1981
[மாசி 18-ஆம் நாள்-ரௌத்திரி ஆண்டு-திருவள்ளுவர் ஆண்டு 2012]

**பி. அண்ட். சி. மில்லை ஏற்கவும்:**

தமிழகத்தில் உள்ள பி. அண்ட். சி. மில் மூடப்பட்டிருப்பதால் 13 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். ஆகவே மத்திய அரசு பி. அண்ட். சி. மில்லை ஏற்று நடத்த விரைவாக ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் விவசாயிகளின் கடன் ஏறத்தாழ 80 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சிறுவிவசாயிகளின் கடனை ரத்து செய்வதில் மத்திய அரசு தமிழக அரசுக்குக் கணிசமான அளவுக்கு நிதி உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும்.

**முழு ஆதரவு தரும்:**

வறுமை, பின்தங்கிய நிலைமையை அகற்ற மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு தனது முழு ஆதரவைத் தரும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள், முறைகள் ஆகியவற்றில் எங்களுக்கு முழு உடன்பாடு உண்டு. என்றாலும் திட்டங்களை மாநிலத்தில் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரம் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளைத் தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் தெரிவிக்காவிடில் நாங்கள் கடமை தவறியவர்கள் ஆவோம்.

6-வது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 97,500 கோடியில் தீட்டப்படுகிறது. இதில் ரூபாய் 47,250 கோடி மத்திய துறையின் வாயிலாகவும் ரூபாய் 50,250 கோடி மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள் மூலமாகவும் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலங்களின் பங்கு 51.54 சதவீதம்தான் வருகிறது. மாநிலத்தின் பங்கு குறைந்தபட்சம் ரூபாய் 55,000 கோடியாக உயர்த்தப்பட வேண்டும்.

வறுமையை அகற்றும் திட்டத்திற்கு, தனி நபர் வருமான அடிப்படையில் திட்டமிடுவதைத் தவிர்த்து வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளோர் சதவீதத்தின் அடிப்படையில் திட்டமிட வேண்டும்.

வெளிநாட்டு உதவியுடன் தொடங்கப்படும் திட்டங்களுக்கான வெளிநாட்டுக் கடன் உதவிகளை முழு அளவில் சுலபமான விதிமுறைகள் அடிப்படையில் வழங்க வேண்டும்.

**திட்டம்—பற்றாக்குறை:**

திட்டங்களைச் செயல்படுத்த விலைவாசிகளையும் பணவீக்கத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம். திட்டங்களைச் செயல்படுத்தும்போது சிமிண்டு, இரும்பு, நிலக்கரி போன்றவற்றின் விலைகள் உயர்ந்து விடுமேயானால், திட்டம் பற்றாக் குறையில் முடிகிறது. எனவே அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் அவசியம்.

விவசாயிகளின் பிரச்சினைகளை முக்கியமாகக் குறிப்பிட தமிழ்நாடு அரசு விரும்புகிறது. விவசாயிகளுக்குக் கட்டுப்படி ஆகிற மாதிரி உற்பத்திப்பொருட்களுக்கான விலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். அப்படி நிர்ணயிக்கிற விலைகள் சில சமயங்களில் விவசாயிகளுக்குப் போய்ச் சேராத நிலையும் உள்ளது. எனவே இந்த நிலைமையில் விவசாயத் துறைக்கு வழங்கப்படும் மானியங்கள் ரத்து செய்யப்படக்கூடாது. தமிழ்நாட்டில் புயல் வெள்ளச் சேதங்கள் ஏற்பட்டபோதெல்லாம் விவசாயிகளுக்கு மாநில அரசு தனது நிதியிலிருந்து உதவிகளை வழங்கியுள்ளது. முழுக்க முழுக்க மாநில அரசே இதைச் செய்வது கடினம்.

**தேசிய நிவாரண நிதி**

எனவே, அவ்வாறு இயற்கையின் கொடுமை ஏற்படுகிறபோது விவசாயிகளுக்கு உதவ ''தேசிய நிவாரண நிதி'' அமைப்பது அவசியம்.

அத்தியாவசியப் பண்டங்கள் மலிவு விலையில் கிடைக்கத் தமிழகமெங்கும் 17 ஆயிரம் நியாய விலைக் கடைகள் உள்ளன. இதற்கு வழங்கப்படும் மானியத்தில் பாதியையாவது மத்திய அரசு ஏற்க 6-வது திட்டத்தில் வகை செய்ய வேண்டும்.

ஆறாவது திட்டத்தில் கிராமப்புற வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது வரவேற்கத் தக்கது. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் சிறப்பானது. இத்திட்டத்திற்கு உதவும்போதும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகை அடிப்படையில் உதவ வேண்டும். அரிசியை உட்கொள்ளும் மக்களைக் கொண்ட தமிழகத்துக்கு இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவு அரிசி உடனுக்குடன் கிடைத்திட வகைசெய்ய வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் நலத்துக்கான திட்டங்கள் தீட்டும்போது மாநிலத்துக்கு ஏற்ற மாதிரி திட்டங்களைச் செயல்படுத்த அனுமதிக்க வேண்டும்.

**தூத்துக்குடி அனல் மின் திட்டம்:**

சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடி அருகே அனல் மின் திட்டம் ஆகியவற்றையும் ஆறாவது திட்டத்தில் சேர்த்து நிறைவேற்ற வகை செய்ய வேண்டும். கடலிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம், காவிரி படுகையில் எண்ணெய் வளம் கண்டுபிடிப்பது, போன்றவற்றின் பரிசீலனையை இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

தூத்துக்குடி அகல ரயில்பாதை திட்டம், கரூர்-திண்டுக்கல் அகல ரயில்பாதை, முதலியவற்றையும் செயல்படுத்த வேண்டும். சென்னை கன்னியாகுமரி கடற்கரை தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும். தமிழகத்திலுள்ள முக்கியச் சுற்றுலாத் தலங்களுக்கு விமானப் போக்குவரத்து வசதி செய்து தரும் திட்டத்தையும் சேர்க்க வேண்டும். பெட்ரோலிய-ரசாயன-உரத் தொழிற்சாலைத் திட்டத்துடன் 2-வது சுத்திகரிப்பு ஆலை அமைக்கும் திட்டத்தையும் சேர்க்க வேண்டும்.

**பினாமி நிலம்:**

பினாமி நிலங்களைக் கைப்பற்றி ஏழைகளுக்கு விநியோகிக்க வகை செய்யும் தமிழக அரசின் நிலச்சீர்திருத்தச் சட்டத்துக்கு மத்திய அரசு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும்.

நமது இந்திய சமுதாயம் வேத காலத்திலிருந்து தொழிலை அடிப்படையாக கொண்டு இயங்கி வருகிறது. வரலாற்றுப் போக்கில் ஒரு குறிப்பிட்ட பலமுள்ள சமுதாய தலைவனைக்கொண்டு இயங்கும் சமுதாயமாக மாற்றப்பட்டது. இத்தகைய சமுதாய மாற்றம், மதக்கொள்கைகள் பின்பற்றப்பட்ட பல சாதி பிரிவினராகக் கொண்ட சமுதாயமாகப் பிற்காலத்தில் மாறுவதற்கு வழிகோலியது. இவ்வகையான மாற்றத்தினால் சாதி அடிப்

# ஆதி திராவிடர் நலப்பணிகள்



**மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை அமைச்சர்**

## திரு. எம். விஜயசாரதி

படையில் இயங்கிய சமுதாயத்தின் ஒரு பிரிவினர் சமுதாயத்திலிருந்து தனியாக வைக்கப்பட்டனர். இப்பிரிவினர் நாளடைவில் தாழ்த்தப்பட்டோர் என அழைக்கப்படலாயினர்.

பொருளாதாரச் சுரண்டலாலும் மற்றும் சமுதாயக் கொடுமைகளாலும் இப்பிரிவினர் உயர் சாதி என்று கருதுபவர்களினால் துன்புறுத்தப்பட்டனர். இந்திய மக்கட்தொகையில் 15 விழுக்காடும் தமிழ்நாட்டின் மக்கட்தொகையில் 17.76 விழுக்காடும் ஆதிதிராவிடர்கள் இருந்த போதிலும் நாட்டில் உள்ள ஏழைகளில் இவர்களின் விழுக்காடு அதிகமாகவே உள்ளது. இவர்களில் பெரும்பாலோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

1919-ஆம் ஆண்டு முதற்கொண்டு அப்போதிருந்த மாநில அரசினால் ஆதிதிராவிட சமுதாயத்தினரின் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்காகக் குறைந்த நிதி ஒதுக்கீட்டில் சில பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தது. 1949-ஆம் ஆண்டு முதல் இந்திய அரசும் தமிழக அரசும் இப்பிரிவினரின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டும், ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தும் இச்சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகப் பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றனர்.

ஆதிதிராவிட மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட அரசின் நடவடிக்கைகளினால் ஏற்படும் பலன்கள் இந்த பிரிவினரின் பெரும்பாலோருக்கு நாளடைவில் மெதுவாக அடையத் தொடங்கியது. இப்பிரிவினருக்கு நீதி கிடைத்திடும் வகையில் கொள்கை ஒன்றினைத் தமிழ்நாடு அரசு வகுக்கத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள இடைவெளியை குறைக்க வேண்டி கொள்கைகளும் நடவடிக்கைகளும் கண்டறிய அரசு ஆராய வேண்டியதாகிவிட்டது.

தீண்டாமை ஒழிப்பு மற்றும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் சுகாதாரம், குடியிருப்புத் திட்டங்கள் ஆகிய வளர்ச்சிப் பணிகளில் தனிக்கவனம் செலுத்திடும் இந்நேரத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலத்திற்குத் தமிழக அரசு புரிந்துள்ள சாதனைகளைச் சுட்டிக்காட்டுவது சாலப் பொருத்தமாக இருக்கும்.

சமுதாயம் உயர்த்தப்பட வேண்டுமானால் அடிப்படைத் தேவை கல்வியே! இதை முற்றிலும் உணர்ந்து நமது நிதி ஒதுக்கீட்டில் மூன்றில் இரண்டு பங்கு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வித் திட்டங்களுக்குச் செலவிடப்படுகின்றது. 1046 பள்ளிகளில் ஒரு இலட்சத்துஎழுபத்திரண்டாயிரம் மாணவர்கள் படிப்பதுடன் இலவச மதிய உணவு, சீருடை போன்ற பயன்களையும் பெற்று வருகின்றனர். மேலும் 753 உணவு விடுதிகளில் 46,732 மாணவர்கள் தங்கி இலவச சீருடைகளைப் பெற்றும் வருகின்றனர். இத்துடன் மான்ய உதவி பெற்று தனியார் நடத்தும் 45 உணவு விடுதிகளும் நடத்தப்படுகின்றன. பள்ளி மேல்நிலைப் படிப்பு, பள்ளி உயர்நிலைப் படிப்புக்காகக் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளத்தின் கீழ் சுமார் 8 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். பள்ளி உயர்நிலைப் படிப்புக்காக வழங்கப்படும் உபகாரச் சம்பளம் ரொக்கமாகக் கொடுக்கப்படாமல் இலவசப் புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றன.

தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மாணவர் இல்லங்களுக்கும் குறிப்பிட்ட கால அட்டவணை முறையில் உறுதியான கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அண்மைக் காலத்தில் அரசு மாணவர்கள் இல்லங்களிலும், மான்யம் பெற்று நடைபெற்று வரும் தனியார் மாணவர் இல்லங்களிலும் கொடுத்த உணவுச் செலவின் விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. 1966-ஆம் ஆண்டு முதல்



ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., போன்ற அகில இந்தியப்பணிகளுக்கான போட்டித்தேர்வுகள் எழுத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்வுக்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம் தொடங்கப் பெற்று நடைபெற்று வருகிறது. இதுவரை 41 மாணவர்கள் தேர்வு பெற்று ஐ. ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் மைய அரசுப்பணிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். சமீப காலத்தில் மாணவர் இல்லங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடின் அளவு பாராட்டத்தக்க அளவு உயர்த்தப்பட்டிருக்கிறது. உழவு மாடுகள் வாங்க, நீர்ப்பாசனக் கிணறு வெட்ட மான்யம், இலவசத் தொழிற்கருவிகள் வழங்கல், சிறு வியாபாரம் செய்ய வட்டியில்லாக்கடன் வழங்கல், பால்வழங்கும்கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் மூலம் பண உதவி வழங்கல் ஆகிய இத்தனை வழக்கமான உதவிகள் கொடுப்பதுடன் ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலைமையில் பெரிதும் முன்னேற்றம் காணும் பெருநோக்குடன் ஒரு சிறப்பு கூட்டமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நலனில் அக்கறை கொண்டு அரசு துறைகள் சில எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஆதிதிராவிடர் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ பயனடையுமாறு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சில அரசுப் பொதுத்துறைகளில் குறிப்பிட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டில் ரூ.71 கோடியும்; 1981-82ஆம் ஆண்டில் 82 கோடியும் அரசு பொதுத் துறையிலிருந்து ஆதிதிராவிடர்களின் நலனுக்காகச் செல்லும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1980-85-ல் உட்பட்ட ஐந்தாண்டு காலத்திற்குள் 9 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமைக்கோட்டினைக் கடக்க ரூ. 722 கோடியை உள்ளடக்கிய ஐந்தாண்டுத் திட்டமாக இச்சிறப்புக் கூட்டமைப்புத்திட்டம் அமைந்துள்ளது. மைய அரசும் இதற்காக மாநில அரசுக்கு நிதி உதவியளிக்க முன் வந்துள்ளது. எல்லா மாநிலங்களுக்கும் இச்சிறப்புக் கூட்டமைப்புத் திட்டத்திற்காக நிதி உதவியளிக்க உத்தேசித்துள்ள மைய அரசின் 1980-81ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடான ரூபாய் 100 கோடியில் நமது மாநிலத்திற்கு இதுவரை மைய அரசு 6.65 கோடி ரூபாயை சிறப்பு நிதி உதவியாகக் கொடுத்துள்ளது. ஆதிதிராவிட வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக இவ்வாண்டு இந்திய அரசு 49 விழுக்காடும், தமிழ்நாடு அரசு 51 விழுக்காடும் முதலீட்டில் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் ஆட்டோரிக்ஷா போன்ற வாகனங்கள், பனைப்பொருட்கள் உற்பத்தி, தோல் பொருட்கள் உற்பத்தி, பால்மாடுகள் வழங்குதல் போன்ற பல திட்டங்களுக்கு ஆதிதிராவிட வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 25 விழுக்காடு வட்டி இல்லாத கடனாகவும் எஞ்சியிருக்கும் தொகையை தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளிலிருந்து அவர்கள் கேட்கும் வட்டி விகிதத்தோடு திரும்பக் கட்டப்பட வேண்டும். இத்திட்டத்தினால் ஆதிதிராவிட மக்களும், பழங்குடி மக்களும் பொருளாதார முன்னேற்றம் காணுவதற்கு ஏதுவாகும்.

வீட்டு மனைகள் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு இலவசமாகக் குடியிருப்பு மனைகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்காக இலவசமாக வீடுகள் கட்டப்படுகின்றன. இதுவரையில் பழைய கடன் மான்யத் திட்டத்தின் கீழ் 21,560 வீடுகளும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 41,000 வீடுகளும் கட்டப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தருவதில் அரசின் இதர அங்கங்களான ஊராட்சி ஒன்றியங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்றவைகளின் முயற்சிகளுடன் இத்துறையும் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இன்னும் குடிநீர் வசதி செய்யப்பட இருக்கின்ற காலனிகள் 1,646தான். இக்காலனிகளுக்கும் விரைவில் குடிநீர் வசதி செய்து

தரப்படும். சுயதேவைப் பூர்த்தித் திட்டத்தின் கீழ் அரசின் இதரத் துறைகள் எடுத்து வரும் நடவடிக்கைகள் போல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுத்துள்ள நிதி உதவி மட்டுமின்றி நடப்பு ஆண்டில் குடிநீர் வசதி செய்து தரவும், இணைப்புச் சாலைகள் போடுவதற்கும், சிறு பாலங்கள், மயானத்திற்குச் செல்ல பாதை போடுதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக ரூ. 75இலட்சத்தை செலவழிக்க இத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

**தீண்டாமை ஒழிப்பு :**

''குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955''ஐ, வழக்கமான காவலர்களுடன் சேர்த்து தனிக்காவல் படை மூலமாகத் தீவிரமாக அமலாக்கப்பட்டு வருகிறது. இதில் சம்பந்தப்பட்ட மாவட்ட அரிசன நல அலுவலர்களும் இணைந்து செயலாற்றி வருகிறார்கள்.

இறுதியாக சாதி-சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்கமளிக்கும் ஒரு நடவடிக்கையாக, கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டுள்ள தம்பதிகளுக்கு பொருத்தமான உற்சாகப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு 14 காரட்டில் 1 பவுன் எடையுள்ள தங்கப்பதக்கமும் ரொக்க உதவியாக ரூ. 300-ம் ஏதேனும் ஒரு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியில் தம்பதிகளின் பெயரில் கூட்டாக முதலீடு செய்ய ரூபாய் 4,000-ம் வழங்கப்படுகிறது. தவிர, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும் கிராமங்களில் வழங்கப்படுகிறது.

பல்வேறு சாதியினரும் ஒருவரோடு ஒருவர் கலந்துறவாடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்புக்காக முயன்று, நன்றாகப் பராமரிக்கப்பட்டு வரும் ஆதிதிராவிட காலனிகளுக்கும், கிராமங்களுக்கும், வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு அலுவலகங்கள், பள்ளிகள், மருந்தகங்கள் மற்றும் இதரப் பொது நிறுவனங்கள் ஆகியவைகளை இயன்றவரையில் ஆதிதிராவிட காலனிகள் அல்லது ஆதிதிராவிட காலனிகளுக்கு அண்மையில் அமைக்க தற்பொழுது அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு இழைக்கப்படும் வன்முறைக் கொடுமைகளைக் கட்டுப்படுத்த குடிமையுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தீவிரமாக அமல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் போன்ற இப்பணிகளைச் செய்வதற்கு ஒரு துணைக் காவல்துறைத்தலைவர் தலைமையில் மாநில அளவில் ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக இத்துணைக் காவல்துறைத் தலைவரின் கீழ் 13 சுற்றுக் காவல்படைகள் இயங்கி வருகின்றன.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையிலிருந்து, ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கு இலவசச் சட்ட உதவி அளிக்கப்படுகிறது. மேலும் அவர்கள் மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்தின் தாலுக்கா மற்றும் மாவட்டத் தலைமையிட மையங்களின் வாயிலாகவும் இவ்வுதவியைப் பெறுகின்றனர்.

ஏழை ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த குடும்பங்களில் யாரேனும் இறந்துவிட்டால் அவர்களது இறுதிச் சடங்கிற்காக இறந்தவரின் உறவினருக்கு மான்யமாக ரூ. 50 வழங்கும் புதிய திட்டமொன்றை 1978-79-ஆம் ஆண்டில் அரசுகொண்டு வந்துள்ளது.

**மாநில ஆதிதிராவிட நலக்குழு :**

ஆதிதிராவிடர் நலம் தொடர்பான எல்லா விஷயங்களிலும் அரசுக்கு ஆலோசனை வழங்கிட மாநில ஆதிதிராவிட நலக்குழு ஒன்று உள்ளது. இக்குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் அல்லாதோர் உறுப்பினர்களாக உள்ளனர். இதே போன்று பழங்குடியினர் நலனுக்காகவும் மாநில அளவில் ஒரு குழு உள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட ஆதிதிராவிட நலக்குழுக்கள் உள்ளன.

இந்த நலிந்த பிரிவினரின் நல்வாழ்வுக்கென மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் பல்வேறு வகையான புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார் என்பது தமிழக மக்கள் அறிந்த ஒன்றே.




இதுகாறும் கூறிய நடவடிக்கைகளாலும் அவ்வப்பொழுது ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலனுக்காகத் தீட்டப்படும் புதிய திட்டங்களினாலும், இம்மக்களின் சமூக அந்தஸ்து மற்றும் பொருளாதார மேம்பாடு முதலியவற்றில் ஒரு வரவேற்கத்தக்க மாற்றம் இருக்குமென நம்பப்படுகிறது.

எல்லாம் பேசப்பட்டும் செயல்படுத்தப்பட்டும் வரும்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரல்லாதோர் இம்மக்கள் மீதான தங்களது போக்கையும் மாற்றிக் கொள்ள வேண்டும். மக்கள் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக, ஒத்துழைத்து, ஒன்று திரண்டு போராடாவிட்டால், தீண்டாமைக் கொடுமைகளை ஒழிக்க வெகுகாலம் ஆகும். எனவே, இச்சமூகப் பிரச்சனையைக் கருத்திற்கொண்டு, இம்மக்கள் மீதான தங்கள் போக்கை மாற்றிக்கொண்டு ஒன்றி வாழுமாறு நான் தமிழக மக்களை மனப்பூர்வமாக வேண்டுகிறேன்.

*(சென்னை வானொலி உரை' 30-1-81.)*

# சிறுவாணி குடிநீர்த் திட்ட ஆக்கப் பணிகள்

ஈ. ஆர். கிருஷ்ணன்
குடிநீர் வடிகால் வாரியத் தலைவர்



வளர்ந்து வரும் நகரம் கோவை. தமிழகத்தில் சென்னை, மதுரை ஆகிய மாநகராட்சிகளுக்குப் பின்னர் மாநகராட்சியாக உருவாகும் பெருமை பெற்றது கோவை. செல்வந்தர்களும், தொழிலாளர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் ஒருங்கிணைந்து வசிக்கும் நகரங்களில் கோவையும் ஒன்று, தொழில் வளம் இங்கு மிகுந்து வளர்வதால் - பலமாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் இங்கு வந்து, தங்கி, தொழிற்கூடங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே நகரின் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போவதில் வியப்புக் கிடையாது. நகரம் வளர்ச்சியுறுகிறது என்று பெருமைப்படும் நேரத்தில் நம்மையறியாமலேயே மற்றொரு பிரச்சினையையும் சமாளிக்க வேண்டியுள்ளது. அங்கு வாழும் மக்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்துதர வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் பெரும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. தமிழக அரசின் சார்பில் குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் வழங்கும் பணியைச் செய்து வருகிறது. கோவை 'நகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் வாரியம் தன்னை முழுதாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது.

கோவை நகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்காக, கேரள எல்லையில் உள்ள சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை ஒன்றினைக் கட்டி, நீரைச் சேமித்து, கோடை காலத்திலும் சீராக விநியோகம் செய்யும் வகையில் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றிட ஆயுள் காப்பீட்டுக் கழக நிதி உதவியுடன் அரசு ரூ. 16.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

சிறுவாணி நீர்த் திட்டம் 1931-ஆம் ஆண்டிலிருந்தே செயலாக்கம் பெற்று வருகிறது. என்றாலும் கோவை நகரம் நித்த நித்தம் வளர்வதால் அனைவருக்கும் நீர் கிடைப்பதற்கு அரசு பலப்பல திட்டங்களை உருவாக்கிச் செயலாற்ற வேண்டியிருக்கிறது.

சிறுவாணி ஆறு கேரள மாநிலத்திலிருந்துஉற்பத்தியாவதால்இதை நிறைவேற்றுவதற்குக் கேரள அரசின் ஒத்துழைப்பும் தேவைப்படுவது இயல்புதானே! அதனால் தமிழ்நாடு அரசு கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

அதன்படி சிறுவாணி ஆற்றின் குறுக்கே 650 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள அணை ஒன்று கேரள அரசின் பொதுப்பணித் துறையினரால் தமிழக அரசின் நிதி ஒதுக்கீடான ரூ. 701 இலட்சத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தத்தின்படி, கேரள அரசு ஆண்டொன்றிற்கு 1,300 மில்லியன் கன அடி நீரைத் தமிழகத்திற்குத் தருவதற்கு ஒப்புதலளித்துள்ளது. 878.50 மீட்டர் உச்சமட்ட நீர் கொள் அளவுள்ள அணையில் 8.60 மீட்டர் அளவிற்கு அணை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இங்கு தொழிலாளர்களின் தொழில் தகராறு காரணமாக கட்டுமானப்பணியில் சிறிது தடங்கல் ஏற்பட்டிருந்தது. கேரளப் பொதுப் பணித் துறையின் முயற்சியின் காரணமாகத் தற்பொழுது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டன. பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாளிலிருந்து அணை கட்டும் பணிகள் மறுபடியும் துவக்கப்பட்டுள்ளன.

சிறுவாணி அணையில் தேக்கப்படும் நீர், சுரங்க வழிப்பாதையின் மூலம் தமிழக எல்லையில் உள்ள ஆனையாற்றுக்குக் கொண்டு வரப்படுகிறது. பின்னர், சிறுவாணி மலையடிவாரத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாக சுத்திகரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட நிலையில் 1,000 மில்லி மீட்டர் விட்டமுடன் 31.33 கிலோ மீட்டர் நீளமுமுள்ள குழாய்கள் மூலமாகக் கோவை நகராட்சி எல்லைக்குள் பாரதி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள 38 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள 2 அடுக்கு நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கொண்டு வரப்படுகிறது. அங்கிருந்து நீர் விநியோகத்தைச் சீராக்கும்பொருட்டு கோவை நகராட்சியிலுள்ள பாரதி பூங்கா, ஆர். எஸ். புரம், டாடாபாட், சித்தாபுதூர், நேரு விளையாட்டு அரங்கம், காந்தி பூங்கா, வைசியாள் தெரு, நக

கடைசி அட்டைப் படக் கட்டுரை

ராட்சி அலுவலகம், புலியகுளம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்ற நீர்த்தேக்கத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு, அங்கிருந்து 140 கி. மீட்டர் நீளத்திற்குப் போடப்பட்டுள்ள பகிர்வுக் குழாய்கள் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப் படவிருக்கிறது.



தற்பொழுது மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோவை நகரில் இதுவரை 110 கிலோ மீட்டர் தூரத்திற்குப் புதியதாக விநியோகக் குழாய்கள் பதிக்கப் பட்டுள்ளதில், 50 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பதிக்கப்பட்ட குழாய்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதமுள்ள 60 கிலோ மீட்டர் நீளத்திற்கு விநியோகக் குழாய்கள் விரைவில் பொருத்தப்படவிருக்கின்றன.

மேலும் கோவையின் சுற்றுப் பகுதியில் உள்ள சிங்காநல்லூர், தெலுங்குபாளையம், குமாரபாளையம், சங்கனூர், கணபதி, கோவை ஊரகப் பகுதி, விளாங்குறிச்சி, சூலூர், குறிச்சி, குனியமுத்தூர், கவண்டம் பாளையம், பேரூர், பூலுவாப்பட்டி, ஆலாந்துறை, தொண்டாமுத்தூர், தாளியூர், வடவள்ளி, வீரகேரளம், மாதவராயபுரம், செம்மேடு, தீத்திப்பாளையம், பேரூர் செட்டிப்பாளையம், நரசீபுரம், தேவராயபுரம், வேடபட்டி போன்ற பகுதிகளில் வாழும் உச்சகட்ட மக்கட் தொகையான 6 இலட்சம் மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இத்திட்டத்தின் மூலம் வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

எனவே, இம்மேம்பாட்டுத் திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப்படும்பொழுது கோவை நகர மக்களுக்கு மட்டுமல்லாமல் சுற்றுப் பகுதிகளிலுமுள்ள மக்களின் நீண்டநாள் குறையும் அகலும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இத்திட்டம் நிறைவேற்றப் பட்ட பிறகு, கோவை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகள், திருப்பூர் அதன் சுற்றுப்புறப் பகுதிகள், பல்லடம், அவினாசி போன்ற 31 பேரூராட்சிகள் மற்றும் 48 ஊராட்சிப் பகுதிகளிலுள்ள வளர்ந்து வரும் மக்கள் தொகையின் கூடுதல் தேவை நிறைவேற்றப்படும். ஏறக்குறைய 250 மில்லியன் லிட்டர் நீர் வழங்க பவானியும், சிறுவாணியும் ஒன்றுகூடுமிடத்திலிருந்து சுமார் 4.5கிலோ மீட்டர் நீளம் குகை வழி மூலமாக 39.5 கிலோ மீட்டர் நீளத்திற்குக் குழாய்கள் மூலம் நீர் கொணர ரூ. 21 கோடி செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுப் பரிசீலனையில் உள்ளது. இந்தத் திட்டமெல்லாம் நிறைவேற்றப் படும்போது கோவை நகரமும் மாவட்டமும் தேவையான அளவு பாதுகாக்கப்பபட்ட குடிநீரைப் பெறுவது உறுதி.





# பட்டிமன்றத்தில் கிட்டிய முத்துக்கள்

பட்டிமன்றம் சுவையான்து: சூடு நிறைந்தது, வாதிடுவோர் அனைவரும் தத்துவங்களை அள்ளி வீசுவது வழக்கம்; அவை வாதத்தில் பயன்படுத்தப்பட்டாலும் கூட பொன் மொழிகள் போல விளங்க வல்லவை. அவற்றில் ஒரு சிலவற்றைத் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

உலகத் தமிழ் மாநாட்டில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றத்திலிருந்து

* அறத்தின் நிலை எங்கெல்லாம் துண்டிக்கப் படுகிறதோ அங்கெல்லாம் துக்கம்தான் தொடர்கதையாகும்.

* யாரெல்லாம் பட்டினி கிடந்தார்களோ அவர்கள் எல்லாம் அறத்தை வலியுறுத்தி யுள்ளார்கள்.

* வள்ளுவரின் காமத்துப்பாலில் கூறப்பட் டுள்ள செய்தியைத் தந்தை மகளுக்குச் சொல்லலாம்; வித்தியாசமாகத் தோன் றாது.

—திரு அறிவொளி
(அறிவியலே அணி)

* சிலப்பதிகாரம் என்னும் காதல் காவி யத்தை எழுதியவர் ஒரு துறவி. துறவிக்குத் தான் காதலைப் பற்றிய பெருமை தெரி யும் என்பதை இக்காவியம் சொல்கிறது.

* இன்பம் வேறு-பால் உணர்வு வேறு. காமத் துக்குச் சூத்திரம் கண்டது வடநூல்; காத லுக்கு இலக்கணம் சொன்னது தமிழ் நூல். இன்ப நோக்கம் செல்லவில்லை என்றால் அறமும் பொருளும் பயன்படாது. அறம் வாழ்வுக்குத் துணை செய்யும்; ஆனால் இன்பம் வாழ்வாகவே இருக்கும்.

—திரு ஞானசுந்தரம்
(இன்பச் செழுமை அணி)

* பணம் மட்டுமல்ல; இயற்கையில் வாய்த்த அனைத்துமே பொருள்தான்.

* தனியுடைமைச் சமுதாயத்தினால் அறம் வளர முடியாது

* பொருளை எப்படிப் பயன்படுத்துகிறான் என்பதைப் பொறுத்துத்தான் மனிதன் நாகரிகமுடையவனாகக் கருதப்படுகிறான்.

—திரு மறைமலை
(பொருளியலே அணி)

* வளத்திற்கு நிலம்தான் ஆதாரம். வாழும் மனிதனுக்குப் பொருள் ஆதாரம். நிலம் பங்கிடப்பட்டதும் அவன் பொருளைத் தான் சிந்தித்தான்.

* சமுதாய மேன்மைக்குப் பாடுபட்ட அறி ஞர்கள் அனைவரின் சிந்தனையும் பொருள் வளத்தைச் சுற்றித்தான் வந்தது.

* ராஜராஜன் திருக்கதவம் திறவாதிருந்தால் திருமறைகள் கிடைத்திருக்குமா? சடை யப்பன் ஆதரவு கிடைக்காதிருந்தால் கம்ப னின் ராம கதை தோன்றியிருக்க முடி யுமா?

—செங்கோட்டை சனார்த்தனம்
(பொருளியல் அணி)

* இன்பம் மக்களுக்கு மட்டுமல்ல மாக் களுக்கும் உண்டு;

* காதல்தான் உலகிற்கு அடிப்படையானது!

திரு அறிவுமணி
(இன்பச் செழுமை அணி)

* புறநானூற்றில் அவனை அவர் பாடியது என்னும் குறிப்பு வருகிறதே-அதன் சிறப்பு என்ன? ஆளும் மன்னனை அவன் என்றும் அறம்கூறும் புலவரை அவர் என்றும் அழைக்கிறார்கள்.

* வெறும் பொருளை வைத்து எதையும் சாதித்துவிட முடியாது.

—திரு தா. கு. சுப்பிரமணியம்
(அறிவியலே அணி)

* அறம் நாட்டுக்கு நாடு மாறுபடலாம். பொருள் எங்கும் ஒன்று தான். நெருப்பு என்பது இங்கும் ஒன்றுதான். இங்கிலாந் திலும் ஒன்றுதான்.

* செல்வம் என்பது சிந்தையின் விளைவு. இன்பம் தேவை இல்லையென்றால் உலக வாழ்க்கை எதற்காக?

—திருமதி அரசு மணிமேகலை
(இன்பச் செழுமை அணி)

* வயிற்றுக்குச் சோறிட வேண்டும்; அது தான் அறம்.

* தனிமனிதனும் சமுதாயமும் போற்றி வளர்க்கும் ஒழுக்கம்தான் அறம். இப்படித் தான் வாழவேண்டும் என வலியுறுத்துவது அறம். செய்யாததை எல்லாம் செய்ய வைக்கும், செல்வம். இன்பம் தன்னை மறக்கச் செய்யும்; அறம் நம்மை வாழ் வாங்கு வாழச் செய்யும்.

—திருமதி ராஜம் மரகதம்
(அறவியலே அணி)

* திறந்த மேனியுடன் மனிதன் வாழ முடி கிறது ; திறந்த புத்தகமாக வாழ அவ னால் முடிவதில்லை.

* தவறான வழியில் தேடும் பொருள் அறத் திற்குப் பயன்படாது; அதுமட்டுமல்ல— கவலையும் தோன்றும். சோதனைக்காரர் வந்து விடுவாரோ என்று பயந்துகொண்டு இருக்க நேரும். அச் செல்வம் அவனை அச்சப்படுத்துகிறது—அவலப்படுத்துகிறது.

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தொகுப்பு; தமிழ்ப்பித்தன்

ஒரு நாட்டின் வளர்ச்சி-அந்நாட்டு கிராமங்களின் வளர்ச்சியைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. எனவே, கிராமங்களின் வளர்ச்சியில் மத்திய அரசும் மாநில அரசுகளும் பெரும் அக்கறை கொண்டு திட்டங்களைத் தீட்டி வருகின்றன.

நம் கிராமங்களில் பெரும்பாலோர் உழவுத் தொழிலையே நம்பியுள்ளனர். உழவுத் தொழிலில் ஆண்டு முழுவதும் வேலை இருப்பதில்லை. வேளாண்மைப் பருவ காலங்களில் மட்டுமே நம் விவசாயிகளுக்கு வேலை இருக்க, மற்ற காலங்களில் அவர்கள் வேலையின்றி இருக்கின்றனர். நிலம் சொந்தமாகக் கொண்ட விவசாயிகள் மட்டுமின்றி - நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் நிலையும் இதேதான். எனவே, வேலை இல்லா நிலையும் போதிய வேலை இல்லாக் குறையும் நம் கிராமங்களின் பிரச்சனைகளாக மாறி வந்தன. இந்த பிரச்சனைகளை நீக்குவதற்காகத் தீட்டப்பட்ட திட்டம்தான், ''தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டம்.''

உழைப்புக்கு உணவுத் திட்டம் என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டு வந்த இத்திட்டம் தற்போது சில மாற்றங்களுடன் ''தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்'' என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் மூன்று:

(1) கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி -அதன் வழியாக மக்களின் வருவாயை அதிகரித்தல்.

(2) கிராமப்புற மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல்

(3) அதிகமாக உள்ள உணவு தானியங்களை நாட்டில் நல்ல வேலைகள் செய்து முடிப்பதற்காக வழங்குதல்.

இந்த மூன்று அடிப்படை நோக்கங்களைக் கொண்டு இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

தமிழ்நாட்டில் இத்திட்டம் 1979-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

கிராமங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படைவசதிகளையும் ஏற்படுத்தித் தரும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் வேலைகளில் பங்கேற்கும் தொழிலாளர்களுக்கு ஊதியமாக அரிசியும், ஒரு பகுதி பணமாகவும் வழங்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பு.

**எச். பி. என்.ஷெட்டி,ஐ.ஏ.எஸ்.,**
**ஆணையாளர் மற்றும் அரசு செயலர்**
**ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித்துறை.**

1979-80-ஆம் ஆண்டில் மட்டும் 55,000 டன் அரிசி தொழிலாளர்களுக்குக் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த அரிசியை வழங்கி, 42,390 வேலைகள் செய்து முடிக்க எடுத்துக் கொள்

# தேசிய கிராம வேலை வாய்ப்புத்திட்டம்



# தமிழ்நாடு அரசு எண்ணெய்வித்துத் துறை

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துக்களின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி மேம்படுத்துவதற்காக தனியாகத் துறை ஒன்றினை நிறுவியுள்ளது. சமையல் எண்ணெய்யின் பற்றாக்குறை ஒரு தேசிய முக்கியமாகக் கருதப்பட்டு, 1979—80 ஆண்டு சமையல் எண்ணெய் இறக்குமதி செய்த தன் அளவு 1000 கோடி ரூபாயை எட்டியது.

இந்தியாவில் குஜராத்துக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் எண்ணெய் வித்து உற்பத்தியாளர்கள் அதிகமாய் உள்ளனர்.

தென்னை மரங்களைப் பொறுத்தவரை இப்போதுள்ள பண்ணையிலிருந்து 14 இலட்சம் வளர்ந்த தென்னை மரங்களையும் புதிதாகப் பண்ணைகளிலிருந்து 15 இலட்சம் மரங்களையும் வழங்குவதற்கும் சுமார் ஒரு லட்சம் எக்டேர் அளவுள்ள இடங்களில் தென்னை மர உற்பத்தியை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, சுமார் T & D 4.5 உயர்ரக தென்னங் கன்றுகளை வினியோகிப்பதற்காக உற்பத்தி செய்யப்படும். வளர்ந்த உயர்ரகத் தென்னங் கன்றுகளை பெருமளவு உற்பத்தி செய்து வழங்கவும், இன்னும் பத்தாண்டு முடிவில் தேங்காய் உற்பத்தியை இருமடங்காக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆறாவது திட்டக் குறிக்கோளின் அடிப்படையில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வந்த எண்ணெய் வித்துப் பிரிவிலிருந்து இப்புதிய துறை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக எண்ணெய் வித்துக்களை இன்னும் அதிகமான இடங்களில் உற்பத்திசெய்யவேண்டும் என்பதுதான் முக்கியக் குறிக்கோள். அத்துடன் சமையல் எண்ணெய்க்குப் பயன்படும் எண்ணெய் வித்துக்களைப் பயிரிடுவதற்கு ஊக்கமளித்து பிரபலப்படுத்துவதில் இத்துறை தனிக்கவனம் செலுத்தும்.

மேலும் எண்ணெய்வித்து உற்பத்தியாளர் மேற்கொள்ளும் மணிலா விதை (நிலக்கடலை) உற்பத்தியிலும், நேஷனல் டயரி டெவல்ப்மென்ட் போர்ட்கீழ் மேற்கொள்ளப்படும். 2.5லட்சம் எக்டேரில் மணிலா விதை (நிலக்கடலை) உற்பத்தியிலும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

ளப்பட்டன. இந்த ஆண்டில் இதுவரை சுமார் நாற்பத்தைந்து ஆயிரம் டன் அரிசி - வழங்கப் பட்டுள்ளது. இதனைக் கொண்டு 35,000 வேலைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. அரிசியைத் தவிர்த்து - கூலியில் ஒரு பங்கு பணமாகவும் வழங்கப்படுகிறது.

1979-80 மட்டும் ஏறத்தாழ 126 இலட்ச ரூபாய் பணமாக வழங்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டில் இதுவரை பணமாக வழங்கப்பட்டுள்ள தொகை மட்டும் ரூபாய் 165 இலட்சம். இவ்வாறு கூலியின் ஒரு பகுதி பணமாக வழங்கப்படுவதற்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது. இந்த ஆண்டில் மத்திய அரசு தொழிலாளர்களுக்கு ரொக்கமாகக் கொடுக்க ரூ. 186.5 இலட்சம் நிதி உதவி செய்துள்ளது. இது தவிர வேலைகளுக்குத் தேவையான பொருள்கள்வாங்க ரூ. 352 இலட்சம் மத்திய அரசு கொடுத்துள்ளது. எனினும் மாநில அரசும் தன் சொந்த நிதியிலிருந்து உழைக்கும் தொழிலாளர்களுக்கு ஊதியம் சற்று அதிகமாக வழங்கப்பட வழி செய்துள்ளது.

குறிப்பிடத்தக்க அளவில் வழங்கப்பட்ட இந்த அரிசியாலும் பணத்தாலும், கிராமப்புறங்களில் வேலையில்லா நிலைமை ஓரளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. 1979-80-ஆம் ஆண்டில் மட்டும் 142 இலட்சம் மனித உழைப்பு





நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இதுவரை உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 133 இலட்சம் என்ற புள்ளி விவரம் உண்மையிலேயே ஒரு பெரும் சாதனைதான் என்பதை மறுக்க இயலாது.

இத்திட்டத்தின் குறிக்கோள், கிராமப்புறங்களில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதே என முன்னர் கண்டோம். இணைப்புச் சாலைகள் அமைத்தல், சிறு பாசன அமைப்புகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு திறம்பட நிறைவேற்றப்பட்டுள்ளன. இணைப்புச் சாலைகள்தான் கிராமங்களுக்குள் தொடர்பை ஏற்படுத்தத் துணை புரிகின்றன. தமிழ்நாடு முழுவதிலும் ஏறத்தாழ 3,000 இணைப்புச் சாலைகள் பல்வேறு கிராமங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சீர் குலைந்திருந்த பல்வேறு இணைப்புச் சாலைகள் நன் முறையில் செப்பனிடப்பட்டு வண்டிகளும் பிற வாகனங்களும் செல்லத்தக்க வழியில், மேம்படுத்தப்பட்டுள்ளன.

மழை நீரைத் தேக்கி அவை விவசாயத்திற்கும் - கால்நடைகளுக்கும் பயன்படும் வகையில் இத்திட்டத்தின் கீழ் சுமார் இரு நூறு குளங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. இக்குளங்களால் சுமார் ஏழாயிரம் ஹெக்டேர் நிலம் கூடுதலாக பயன்பெறும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடன் புதிதாக பல பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 73 பள்ளிக் கட்டடங்கள் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டன.

மகளிர் நலமும் -குழந்தைகள் நலமும் காப்பதற்காகப் பல்வேறு தாய்சேய் மருத்துவ நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. ஏற்கெனவே இருந்த நிலையங்கள் செப்பனிடப்பட்டுள்ளன.

கிராமப்புறப் பெண்கள் வாழ்வில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்காக 'மகளிர் மன்றங்களும் கட்டப்பட்டுள்ளன. மேலும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியைகளுக்கான குடியிருப்புகள் கட்டும் திட்டமும் இத்திட்டத்தில் இடம் பெற்று, நிறைவேற்றப்பட்டுள்ளது.

மக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்யவும்-பாசன வசதிகளை ஏற்படுத்தித் தரவும்- இத்திட்டத்தின் கீழ் புதிதாக 113 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பல கிணறுகளை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மொத்தத்தில் கிராமங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இத்திட்டத்தின் மூலம் செய்து முடிக்கப்படும் வகையில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் இந்திய நாடு முழுவதும் நிறைவேற்றப்பட்டு வரும் ஒரு திட்டமாகும். இது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டும் வருகிறது. எனவே, விவசாய வேலைகள் இல்லாத காலங்களில் வீணாகப் பொழுதைக் கழிக்காமல் இத்திட்டத்தைப் பயன்படுத்தி வேலை இல்லா கஷ்டத்தையும் - போதிய வேலை இல்லா நிலையையும் நீக்கிக் கொள்ள இது மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு. எனவே, இந்த வாய்ப்பினை மக்கள் நன்முறையில் பயன்படுத்திக் கொண்டால்- மக்கள் மட்டுமல்ல - நாடும் முன்னேறும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

கிராமங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதற்கு அவர்களின் யோசனைக் கேட்டு அறிந்து, வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதற்காக ஒவ்வோர் ஊராட்சிக்கும் மக்கள் குழுக்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.

எந்தவொரு திட்டமும் மக்களின் ஒத்துழைப்பைப் பொறுத்தே வெற்றி பெறும். இத்திட்டத்திற்கு மக்கள் அளிக்கும் வரவேற்பை நோக்கும்போது— நமது கிராமங்கள் எவ்விதக் குறையுமில்லாத நிலையை அடையும் நாள் வெகு தூரத்தில்இல்லை என்பது நிச்சயம்.

[சென்னை வானொலி :
7—2—81]

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில;

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111



# செவிகேளாதோர் நடத்தும் சிற்றுண்டிச்சாலைகள்

பி.எல்.ராஜேந்திரன்

உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவிடல் என்பது மிக உயர்வான தொண்டாகமதிக்கப்படுவதாகும்.

அரசு மட்டுமல்ல, தனியார் அமைப்புகள் சிலவும் அரசின் உதவி பெற்று அத்தகைய அருந்தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட அமைப்புகளில், சென்னை மாநகரில் தனிப்பட்ட சிறப்புக்குரியது, 'சிறுமலர் பள்ளி' (Little Flower Convent) எனக்கூறப்படும் செவிகேளாதோர், பார்வையற்றோர் பள்ளி.

இங்குள்ள மாணவிகளைக் கொண்டு-அல்லது படிப்பு ஏறாது என்றநிலையிலுள்ள பெண்களைக் கொண்டு சென்னை மாநகரின் நான்கு முக்கிய இடங்களில் சிற்றுண்டி விடுதிகள் (Canteen) நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு அலுவலகம் (Tamil Nadu Public Service Commission) சென்னைப் பல்கலை கழக இணைப்பு சமூக நலத்துறை அலுவலகத்தின் எதிர்ப்புறம், வீட்டு வசதி வாரிய அலுவலகம் ஆகிய இடங்களில் அத்தகைய சிற்றுண்டிச்சாலைகள் அமைக்கப்பட்டு சிறப்புற நடைபெற்று வருகின்றன. இந்த நான்கிலும் மொத்தம் முப்பது செவி கேளாத பெண்கள் பணியாற்றி வருகிறார்கள்.



### கொடுக்கல் வாங்கல்

வருவோரின் தேவைகளைக் கேட்க, அடையாள வில்லை (Token) தர, அதற்குரிய தொகையைப் பெற என்று ஆங்காங்கே ஒவ்வொரு பேசத் தெரிந்த பெண் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அத்தனைப் பேருமே வேலை நேரத்தில் பம்பரம் போலச் சுழன்று சுழன்று பணியாற்றக் கூடியவர்களாகத் 'துரு துரு' வென்றிருக்கிறார்கள். கூட்டம் அதிகமாகிற நேரத்தில், செவி கேளாத பெண்களும் வருவோரின் உதட்டசைவைக் கொண்டு, கேட்பதைத் தருவதில் திறமையாகச் செயல்படுகிறார்கள்.

அந்தந்தச் சிற்றுண்டிச் சாலைகளுக்குப் புதிதாக வருவோர் யாரானாலும், (செவி கேளாத பெண்கள் சிற்றுண்டிச் சாலை என்ற பெயர்ப் பலகையைக் காணாத பட்சத்தில்) அங்குள்ள பெண்கள் கேட்கும் சக்தியும், பேசும் சக்தியும் பலவீனப்பட்ட பெண்கள் என்பதை நம்பவே மாட்டார்கள். அவ்வளவு சாதுர்யமான கொடுக்கல் வாங்கல்!

### பேசுவோர் பேட்டி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குக்குழு அலுவலகம், பல்கலைக் கழகம் ஆகிய இடங்களில் இப்படி அமைக்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோர் சிற்றுண்டிச் சாலைகள் இயங்கும் விதத்தினைக் கண்டறியச் சென்றோம். அங்குள்ள பேசத் தெரிந்த பெண்களான செல்வி ஆஞ்சலா, செல்வி தயானா, செல்வி வசந்தி ஆகியோரை அணுகி எங்கள் நோக்கம் தெரிவித்தோம். அவர்கள் மூலம்

திரட்டிய தகவல்களை இங்கே தொகுத்தளிக்கிறோம்.

''இந்த இரண்டு இடங்களிலுமே ஒவ்வொரு நாளும் நல்ல வசூல் இருக்கிறது. ஆனால், ஒவ்வொரு நாளைய செலவும் மொத்த வருமானத்தில் இருநூறு முந்நூறுக்குக் குறைந்ததாகத்தான் இருக்கிறது. உதாரணமாக ஒரு நாளைய விற்பனை சுமார் ஐநூறு ரூபாய் என்றால், அதற்கான பொருட்களின் தயாரிப்புச் செலவு ஏறக்குறைய முந்நூறு முந்நூற்றைம்பது ரூபாய். இட வாடகை, இயலாத பெண்களால் நடத்தப்படுவது என்கிற மனதாபிமானத்தோடு இருபத்து ஐந்து ரூபாய் அளவில்தான். சமூகநல வாரியம், வீட்டு வசதி வாரியம் கான்டீன்களின் வாடகை அதிகம். மேஜை நாற்காலிகளும் இவர்களே தருகிறார்கள். இந்த ஆண்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டு ஆகையால் அரசு மூலம் நிறைய உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். தினசரி வசூல் மொத்தத்தைப் பகிர்ந்து எங்களுக்குச் சம்பளம் தரப்படுகிறது. கிட்டத்தட்ட முந்நூறு ரூபாய் அளவில் எங்களுக்குச் சம்பளம் கிடைக்கும்.''

—இவ்வாறு தெரிவித்தார்கள் அவர்கள்.



சுவையான சிற்றுண்டி

**அவர்கள் நோக்கம்**

'சிறுமலர் பள்ளி' யில் முதநிலை உதவியாளராகப் பணியாற்றும் செல்வி எஸ். அமிர்தவல்லி அவர்களைச் சந்தித்து இது பற்றிக் கேட்டோம்: ''நகரின் முக்கியப் பகுதிகளிலெல்லாம் இன்னும் இப்படிப்பட்ட காதுகேளாதோர் சிற்றுண்டிச் சாலைகளை நிறுவலாமே?''

''முக்கியமாக வருமானம் கருதி நாங்கள் இதை நடத்தவில்லை. மற்றவர்கள்பேசுவதைக் கேட்க முடியாததையும் மற்றவர்கள்போலப் பேசமுடியாததையும் பெரிய குறைபோலக் கருதி பிறரோடு பழகவே கூச்சப்படுகிற இவர்கள் சுபாவம் நீங்க வேண்டும் என்பதற்காகவே எங்கள் பள்ளிக் குழந்தைகளை இவ்வாறான பணிகளில் ஈடுபடுத்துகிறோம். மேலும், எங்கள் லிட்டில் ஃப்ளவர் கான்வெண்டுக்கு அரசு மானியம் உண்டே தவிர, இப்படிப்பட்ட கான்டீனுக்கெல்லாம் கிடையாது. ஆனால் நாங்கள் இதற்கும் அரசு உதவ வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். சீக்கிரமே அது கிடைக்கும் என்றும் நம்புகிறோம். அப்படி கிடைத்தால் மேலும் சிற்றுண்டிச் சாலைகள் அமைப்பது பற்றி எங்கள் பள்ளி முதல்வர் முடிவு செய்வார்.

செவிகேளாதோர் நடத்தும் இவ்வாறான சிற்றுண்டிச் சாலைகளில் விற்கப்படும் பண்டங்கள் விலை குறைவாகத் தரப்பட்டாலும், தரம் குறைந்ததாகத் தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊராட்சி ஒன்றியத்தின் பெரிய பள்ளிக் கட்டடம்

சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தில் (வேலைக்கு உணவுத்திட்டம்) கட்டப்பட்ட பெரிய தொடக்கப் பள்ளிக் கட்டடம், சிவதாபுரம் ஊராட்சியில் உள்ளது.

இவ்வூராட்சியில் தற்போதுள்ள 2 பள்ளிகளில் ஒன்று ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடத்திலும், இன்னொன்று வாடகைக் கட்டடத்

இப்பள்ளியில் 300 மாணவர்களும், 150 மாணவிகளும் கல்வி கற்கின்றனர். இவர்களில் 120 பேர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது.

ரூ. 99,500 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தில் 100 அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்டு அமைந்துள்ளது மட்டுமின்றி, 6அடி அகலத்திற்கு ஒரு நீண்ட தாழ்வாரத்தையும் கொண்டுள்ளது.

இதில் 6 வகுப்புகள் வசதியாகச் செயல்பட வழிவகை செய்துள்ளனர்.





# ஓவியத்தில் இல்லை ஊனம்!

அதோ, அந்த எட்டு வயதுச் சிறுவன் என்ன செய்கிறான்?

அவனைச் சுற்றிப் பலபேர் நின்றிருந்தும், அவன் காரியத்திலேயே கண்ணாயிருக்கின்றானே!

அவன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு, வெள்ளைத் தாளில் ஏதோ வரைந்து கொண்டிருக்கிறான்.

அவன் பக்கத்தில் வண்ணங்கள் இருக்கின்றன. அவன் எண்ணங்களோ எங்கேயோ மிதந்து கொண்டிருக்கின்றன....

உற்றுப் பார்க்கிறோம்: தலையை இப்படியும் அப்படியுமாகச் சாய்த்துச் சாய்த்துச் சித்திரம் அல்லவா தீட்டிக் கொண்டிருக்கிறான்...

அவன் யார் ?

அவன்தான் சென்னை அண்ணா நகரிலுள்ள 'மித்ரா' என்னும் கல்வி நிலையத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்னும் எட்டு வயதுச் சிறுவன். அவன் தன் பிஞ்சு விரல்களால் சித்திரம் வரையவில்லை. நம் நெஞ்சை நெகிழ வைக்கும் வண்ணம் தன் ஒரு காலால் சித்திரம் வரைந்தான்! ஆம். அவனுக்கு இரண்டு கைகளும் பிறவியிலேயே இல்லை.

அப்படி அவன் காலால் வரைந்த ஓவியம்தான் முதல் பரிசு பெற்றது!

சென்னை, அண்ணாசலையிலுள்ள விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட், உலக ஊனமுற்றோர் ஆண்டையொட்டி முதன் முறையாக ஊனமுற்ற சிறுவர்கள் சித்திரப் போட்டி ஒன்றை பிப்ரவரித் திங்களில் நடத்தியது.

இந்தப் போட்டியில் 92 ஊனமுற்ற சிறுவர், சிறுமிகள் கலந்து கொண்டனர். 6லிருந்து 14 வயது வரையிலான 61 சிறுவர்களும், 31 சிறுமிகளும் இப்போட்டியில் பங்கு கொண்டனர். 20 கல்வி நிலையங்கள் தம் குழந்தைகளைப் பங்கு பெறச் செய்தன. இப்போட்டிக்காக வி. டி. ஐ. ரூ. 50 ஆயிரம் ஒதுக்கியுள்ளது- ஆண்டுதோறும் தொடர்ந்து இம்மாதிரியான போட்டிகளை நடத்தி, ஊனமுற்ற சிறுவர்களுக்கு உற்சாகமூட்டி, அவர்கள் நல்வாழ்வுக்கு வழிகோலும் திட்டம் ஒன்றையும் இது வகுத்துள்ளது.

சென்னை எழும்பூரிலுள்ள கில்டு ஆப் சர்வீஸ் கூடத்தில் (Guild of Service) ஊனமுற்ற குழந்தைகள் கூட ஆரம்பித்து விட்டார்கள். இவ்வளவு குழந்தைகள் ஓவியப் போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொள்ள வந்திருப்பது கண்டு ஒரு பக்கம் மகிழ்ச்சி அடைகிறோம். இவர்களில் ஊமை, நடக்க முடியாதவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள், பார்வை சரியில்லாதவர்கள் என்று பார்க்கும்போது, ஒரு பக்கம் நம் நெஞ்சம் வேதனையுறுகிறது.

பி. வி. கிரி.

குழந்தைகள் ஓவியம் வரைவதற்கு முன், அவர்களுக்குச் சூடான பால் வழங்கப்படுகிறது. போட்டி தொடங்குகிறது.

அந்தக் குழந்தைகளுக்குத் தான் எத்தனை உற்சாகம்!

எண்ணத்தை வண்ணத்தில் குழைத்து, எழில்மிக்க சித்திரங்களைத் தீட்டுகின்ற காட்சி, இன்னும் மனத்திரையில் படமாய்ப் பதிந்திருக்கின்றது. சின்னஞ்சிறு விரலில் பிறக்கின்ற அந்தச் சித்திரங்களைப் பார்க்கிறபோது, வருங்கால ஓவியர்கள் இங்கே உருவாகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கண்ணால் பார்த்து, கையால் அல்ல—காலால் வரைந்த சுப்பிரமணியனுக்குத்தான் இந்தப் போட்டியில் முதல் பரிசு ரூபாய் 500 கிடைத்தது!

காலிலுள்ள இரு விரல்களுக்கு இடையில் பென்சிலைப் பற்றிக் கொண்டு முதலில் படம் வரைந்து



கொள்கிறான். பிறகு, வண்ணத்தைக் குழைத்து மெல்ல மெல்ல அதன் மீது தீட்டுகிறான். இப்போது சித்திரம் தயார்! அப்படி அவன் வரைந்த சித்திரம்தான் என்ன?



அண்ணாசாலை! ஆம். அந்தச் சாலையில் கட்டடங்கள், பஸ், கார் போவதைப் பார்க்கிறோம். சூரியனும் ஒரு பக்கம் தெரிகிறது. படத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறோம். கையால் வரைந்தாலே படம் நன்றாக அமைவதில்லை. காலால் வரைவதற்கு, அந்தவயதில் எத்தனை ஆற்றல் இருந்திருக்க வேண்டும்!

காலால் வரைந்த இந்தச் சிறுவன், சாப்பிடுவதும் காலால் தானாம். அதாவது, ஸ்பூனை கால் விரலில் இடுக்கிக் கொண்டு சாப்பிடுகிறான். இவன் பரிசை எப்படிப் பெற்றுக் கொண்டான்?

காலை 9 மணியிலிருந்து பகல் ஒரு மணி வரை நடந்த இந்தப் போட்டிக்கு நால்வர் நடுவர்களாக இருந்தார்கள். சென்னை அரசினர் கலை கைத்தொழில் கல்லூரி முதல்வர், சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் நுண்கலைத் துறையின் தலைமைப் பேராசிரியை, ஓவியக் கலைஞர் திரு. வி. மாதவன் பிள்ளை, புகைப்படக் கலைஞர் திரு. ஓ. டி. ரவீந்திரன் ஆகியோர் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

வி. டி. ஐ. யின் தலைவரும், சென்னை உயர்நீதிமன்ற தற்காலிகத் தலைமை நீதிபதியுமான மாண்புமிகு பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள், வெற்றிபெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கினார். அப்போதுமுதல்பரிசு பெற்ற அந்தச் சிறுவன் வந்தான். அவனுக்கு இரு கைகளும் இல்லாததைக் கண்ட நீதிபதி அவர்கள், பரிசை அவன் சட்டைப் பைக்குள்ளாவது போட்டு விடலாம் என்று பார்த்தார். அதற்குள் அந்தச் சிறுவன் அவர் தந்த கவரை, கக்கத்தில் சிறிது நீட்டிக் கொண்டிருந்த சதைக்கு இடையில் இடுக்கிக் கொண்டான்!

இரண்டாவது பரிசு ரூபாய் 300 மூவருக்குக் கிடைத்தது.

பதினோரு வயதுச் சிறுவன் நூர் முகம்மது. அவனுக்கு இரண்டு கைகளிலும் விரல்களே இல்லை. கலர் பென்சிலை இரு கைமுனைகளால் பற்றிக்கொண்டு வரைந்திருக்கிறான். அவன் வரைந்த படம்: குளம்-தென்னை மரங்கள் - மேகம் - பறவைகள்.

எட்டு வயதுச் சிறுவன் செல்வ்ராஜ். பிறவிலேயே மனவளர்ச்சி குன்றியவன். அவன் வரைந்த சித்திரம் வீடு, செடி, ரயில், கப்பல் இப்படி ஒரே ...... கைவண்ணம் காட்டியிருக்கிறான்.

பதினான்கு வயதுச் சிறுவன் ரவிகுமாருக்கு என்ன குறை? பார்வை தெரியும். ஆனால் என்ன நிறம் என்று மட்டும் தெரியாது—அதாவது இதை ஆங்கிலத்தில் Colour Blind என்று சொல்வார்கள். இவன் வரைந்தது அழகிய மலர்களை!

மூன்றாவது பரிசு ரூ. 200 ஆறு பேர்களுக்கும், ஆறுதல் பரிசு ரூ. 100 ஒன்பது பேர்களுக்கும், உற்சாகமூட்டும் பரிசாக ரூ. 50 ஐந்து பேர்களுக்கும் கிடைத்தது. பரிசுத் தொகையோடு ஒவ்வொருவருக்கும் சான்றிதழும் வழங்கப்பெற்றது.

பரிசளிப்பு விழா முடிகிறது. போட்டியில் பங்கு கொண்ட எல்லாக் குழந்தைகளும் 'ஜன கண மன' பாடலைப் பாடியது நம் நெஞ்சைத் தொட்டது. அதே சமயம் 'ஊனம் அவர்கள் உடலில்—ஓவியத்தில் அல்ல' என்பதையும் சொல்லாமல் சொல்லியது அந்த அரிய நிகழ்ச்சி!

## பாப்பாவுக்கு ஒரு பாட்டு

பயத்தைப் போக்க வேண்டும் — பாப்பா
படிப்பில் கவனம் வேண்டும் — உன்
பருவம் வளர, வளர — உயர்
பண்பும் வளர வேண்டும்!

ஓடி, ஆட வேண்டும் — பாப்பா
உறவைப் பெருக்க வேண்டும் — ஒரு
கோடி பொருள்கள் போல — நீ
அன்பு காட்ட வேண்டும்!

நல்ல பிள்ளை என்று — பாப்பா
நாட்டில் சொல்ல வேண்டும் — அந்த
வெள்ளை நிறத்தைப் போல — உன்
உள்ளம் இருத்தல் வேண்டும்!

ஆற்றல் மிகுக்க வேண்டும் - பாப்பா
அறிவில் சிறக்க வேண்டும் - நீர்
ஊற்றின் சுரப்புப் போல - நீ
உயர்ந்து விளங்க வேண்டும்!

பழித்தல் பாபம் என்று - பாப்பா
மனதில் நிறுத்தல் வேண்டும் - உன்
விழியின் இமையைப் போல - தாய்
நாட்டைக் காக்க வேண்டும்!

ப. சுப்பிரமணியம் (பசுமணி)



# திருக்குறள் அரங்கம்

உலகத்தமிழ் மாநாட்டில் பல கருத்தரங்குகள் நடைபெற்றன. அவற்றில் திருக்குறள் கருத்தரங்கம் குறிப்பிடத்தக்கது.

திருக்குறளார் முனுசாமி அவர்களின் தலைமையில் இந்தக் கருத்தரங்கு 6.1.81ல் நடைபெற்றது.

தலைமை உரையில் அவர் குறிப்பிட்டார்.

''தமிழ்ச் சமுதாயத்தை உலகுக்குக் காண்பித்தவர் திருவள்ளுவர்; உலகம்போற்றும் நூலைத் தந்த திருவள்ளுவர் நம்மை உலகுக்கு அறிமுகம் செய்திருக்கிறார். அந்நூல் உலகம் எல்லாம் பரவுவதற்கு வழியைச் செய்யவேண்டும்.'

''தங்கத்தை உரைத்துப் பார்க்கலாம்; பித்தளையை உரைத்துப் பார்க்கலாம்: ஆனால் வைரத்தை அப்படிப் பார்க்க முடியாது. திருக்குறள் வைரத்தைப் போன்றதுதான்.

''புகை வண்டியில் அமர்ந்து கொண்டு நிலையத்தின் பெயரை பலகையில் பார்த்த ஒருவன் - ஊரைப்பார்த்துவிட்டேன் என்று சொல்வதும் - குறளின் பொழிப்புரையைப் படித்துப் பொருள் அறிந்துகொண்டதாகச் சொல்வதும் ஒன்று.

''திருக்குறளில் உள்ள மருந்து, மருத்துவக் கல்லூரிகளில் கற்றுத் தரப்படவேண்டும்; அதில் உள்ள உணவு - வேளாண்மைக் கல்லூரியில் சொல்லித்தரப்படவேண்டும்; ஒற்றாடல் - காவல் துறையில் சொல்லித்தரப்படவேண்டும்.

''அகர முதல எழுத்தெல்லாம் என்று சொல்வதில் எழுதப்படும் எழுத்தை மட்டும் குறிப்பிடவில்லை, வாயைத்திறந்து ஒலிப்பதைக் குறிப்பிடுகிறார். ஆங்கில மொழியில் பேசுவதானாலும் கூட வாயைத் திறந்துதான் பேசவேண்டும்.''

அடுத்து உரையாற்றிய புலவர் ந.ரா.முருகவேள் குறிப்பிட்டார்:

''சிறந்த நூல் எனச் சொல்லப்பட்ட நூல் எளிமையாக - எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் இருக்கிறது; அதே நேரத்தில் அறிஞர்கள் போற்றும் வகையில் அருமையான கருத்துக்களும் அதில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே எளிமையும் அருமைப்பாடும் உடையது திருக்குறள்''

இலங்கையைச் சேர்ந்த பண்டித கா. பொ. ரத்தினம் அவர்கள் பேசுகையில் புலவர்களின் நூலாக விளங்கி வந்த திருக்குறளை மக்கள்நூலாக மாற்றியவர்கள் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர். அண்ணா அவர்களின் ஆட்சி வந்த பின்புதான் இந்த மாநிலம் தமிழ்நாடாகியது. திருவள்ளுவரின் 2000 ஆண்டு கொண்டாடப்பட்டது. திருக்குறள் ஆராய்ச்சிக்கும் பணம் வழங்கப்பட்டது.

''திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று பல்கலைக்கழக முத்திரையுடன்-அனைத்து நாட்டினரும் ஒப்புக் கொள்ளும் வகையில் வெளியிடப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய திருமதி இராஜம்மாள் தேவதாஸ் அவர்கள், ''அன்பு, தூய்மை ஆகியவை வாழ்வின் அடிப்படையாக இருக்கவேண்டும். அதற்கு அறவாழ்வு தேவை என்பதைக் குறள் குறிப்பிடுகிறது. குறளை சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தினால் நாடு முன்னேறும்'' என்று குறிப்பிட்டார்.

பின்னர் உரையாற்றிய, அருள் திரு ஞானப்பிரகாசம், ''ஏசுவின் மொழியை தமிழகத்துக்கு எடுத்துரைப்பதற்காக வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த வீரமாமுனிவர் - தமிழகத்தில் வள்ளுவரின் குறளைச் சுவைத்து - அதனை ஆங்கிலத்தில் பெயர்த்து தமது நாட்டாருக்கு எடுத்துக் கொடுத்தார். அவரது மொழி பெயர்ப்பு குடத்துக்குள் விளக்காக இருக்கிறது. அதை அனைவரும் உணரும் வகை செய்ய வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, பேராசிரியர் அன்பு கணபதி அவர்கள் உரையாற்றும் போது ''பெரியார் அவர்களும் அண்ணா அவர்களும் சீர்திருத்தத்தை வலியுறுத்தினார்கள். உழைப்பும் வேண்டும் - முயற்சியும் வேண்டும்; இவ்விரண்டும் இருந்தால் விதியையும் புறமுதுகிடச் செய்யலாம்; வெற்றி கிட்டும் என்பதை 2000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் சொல்லியுள்ளார், 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்னும் குறளில் தெரிவித்தார்'' என்று குறிப்பிட்டார்.

பின்னர் உரையாற்றிய டாக்டர் ந. பிச்சமுத்து, ''பல நூற்றாண்டுகளுக்கு முன்னே மன்னனை எதிர்த்துக் குரல் எழுப்பியவர் திருவள்ளுவர் என்பது தெரிகிறது. எவ்வளவு முற்போக்கான கருத்தைச் சொல்ல வேண்டுமோ அதை வள்ளுவர் சொல்லியிருக்கிறார்'' என் குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய டாக்டர் சாரங்கபாணி, ''குறளுக்குப் பலபேர் உரை எழுதியுள்ளனர்; அவ்வுரைகளைப் படித்தால், படிப்போருக்குக் குழப்பம் வருகிறது. உரையைப் படிக்காமல் குறளைப் படித்துப் புரிந்து கொள்வது நல்லது'' என்று குறிப்பிட்டார்.

டாக்டர் சுப. அண்ணாமலை குறிப்பிட்டார்:

''ஆபயன் குன்றும்
அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

என்னும் குறள் முக்கியமானது.

பஞ்ச பூதங்கள் சேர்ந்து செய்வது மழை; மழையில்லை என்றால் புல் முளைக்காது. புல் வரவில்லை என்றால் பசுக்கள் வாழ முடியாது. வைக்கோலைத் தின்று பால் தருகிறது பசு; மழை இல்லை என்றால் வைக்கோல் கிடைக்காமல் போகும். அதனால் பாலும் கிடைக்காது போய்விடும், பால், கிடைக்கக் கூடாத அரிய பொருளாகி விடக் கூடாது

என்று வள்ளுவர் கருதியுள்ளார்.''

பின்னர் பேசிய இ. சுந்தர மூர்த்தி அவர்கள் ''பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் படிக்க வேண்டும் என்று குறிப்பிடும் 6 நூல்களில் திருக்குறளையும் ஒன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார். இந்த உலகம் வள்ளுவர் உலகமாக மாற - வள்ளுவம் படிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

அடுத்துச் சொற்பொழிவாற்றிய டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள், ''எதற்கும் மூல காரணமாக அமைவது மனம், மனத்திலே மாசு உண்டு; அந்த மாசு நீங்குவது அறமாகிறது. மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்று குறிப்பிடுகிறார் வள்ளுவர். நூலாசிரியனை அவனது மனம் கொண்டுதான் நாம் பார்க்க வேண்டும். அந்த நிலைக்கு நம்மையும் உயர்த்திக் கொள்ள வில்லையென்றால் நாம் அதில் தோய முடியாது'' என்றார்.

பின்னர் உரையாற்றிய டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்:

''கால்டுவெல் அவர்களின் கருத்துப்படி திருவள்ளுவர் அரைப் பழம் தொன்மைவாய்ந்தவர். கி.மு.3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் வள்ளுவர் என மறைமலையடிகள் குறிப்பிட்டுள்ளார். அர்த்தசாஸ்திரம் என்னும்நூலில் 'மத்தளமும் பெண்களும் இரு புறமும் அடிக்கப்படுவர்' என்று குறிப்பிடுகிறார்; ஆனால் வள்ளுவர் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று வினவுகிறார். பெண்கள் எல்லாம் திருவள்ளுவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.''

டாக்டர் சங்கரராசு நாயுடு குறிப்பிட்டார்: ''அகரம் முதல என வள்ளுவர் துவக்கியிருப்பதில் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. எழுத்துக்கெல்லாம் முதலாகத் திகழும் அ என்னும் எழுத்தை மட்டும் அவர் குறிப்பிடவில்லை; தமிழ் எழுத்துக்களின் அமைப்பையே குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார். அகரம் என்னும் எழுத்தில் உள்ள அ உயிர் எழுத்து, க என்பது வல்லினம், ர என்பது இடையினம், ம் என்பது மெல்லினம் இந்த ஒரே சொல்லில் தமிழ் மொழியின் அமைப்பையே சுட்டிக் காட்டியிருக்கிறார். இதையேதான் கம்பரும் பின்பற்றி 'உலகம்' எனத் தொடங்கினார்; கம்பனுக்கும் வழிகாட்டியாக வள்ளுவர் திகழ்ந்திருக்கிறார்.''

நிகழ்ச்சித் தொகுப்பு

**தமிழ்ப்பித்தன்**

# உலகளாவிய உணர்வு

தமிழ்ப்பேரறிஞர்கள் தாங்கள் இயற்றிய நூல்களையெல்லாம் தமிழகத்திற்கு-தமிழ் மக்களுக்கு என்றில்லாமல் உலக மக்களுக்கென்றே படைத்திருக்கின்றனர். இவ்வுண்மையை அவர்கள் படைத்த படைப்புகளின் முதற்பாட்டில் - முதலடியில் - முதற் சொல்லாக உலகத்தை வைத்துச் செய்திருப்பதிலிருந்தே நன்கறியலாம்.

சேக்கிழார் பெரிய புராணத்தை 'உலகெலாம் உணர்ந்து' என்று தொடங்கினார்.

கம்பர் தமது இராமாயணத்தை 'உலகம் யாவையும்' எனத் தொடங்கியிருக்கிறார்.

நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையை 'உலகம் உவப்ப' என்றே தொடங்கினார்.

நாற்கவிராச நம்பி அகப்பொருள் நூலை 'மலர்தலை உலகத்து' எனத் தொடங்கினார்.

கபிலர் தமது அகவலை 'உலகத்தீரே, உலகத்தீரே!' என இரு முறை அழைத்துத் தொடங்கினார்.

இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தை 'அங்கண் உலகளித்தலால்' என்றுதான் தொடங்கியிருக்கிறார்.

வள்ளுவரும் திருக்குறளை 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்றுதான் தொடங்கினார்.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களும் தாம் இயற்றிய 'படுக்கைப் பிதற்றல்' என்னும் நூலில் 'உலகை நோக்குமின், உலகை நோக்குமின்' என்றே தொடங்கியிருக்கிறார்.

தமிழ்நாட்டுப் புலவர் பெருமக்களின் பரந்து விரிந்த மனப்பான்மையை – உலகளாவிய உணர்வை இப்பயன்பாடு காட்டுகிறது அல்லவா?

ஆதாரம் : தமிழின் சிறப்பு

தகவல் : கலவை பா. வரதன்



# ஊனமுற்றோர் தொழில் பயிற்சி

இல. இராசேந்திரன்

பார்வையற்ற முதியோர்க்கு எளிய முறையில் பொறியியல் தொழில் பயிற்றுவிக்கும் நிலையம் ஒன்று (Light Engineering project for Adult Blind) கிண்டியில் உள்ளது. தமிழக அரசு உதவியோடு நடப்பது இது.

கிண்டி தொழிற்பேட்டையில் ஒன்றாக உள்ள இந்த அமைப்பை நிர்வகித்து வருபவர் திருமதி நாகரத்தினம்அம்மையார்ஆவார். இவர், பூவிருந்தவல்லியில் உள்ள தமிழ்நாடு அரசு பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி-ரீஜனல் பிரய்ல் அச்சகம் ஆகியவற்றின் முதல்வரும் ஆவார்.

பார்வையற்ற முதியோர்க்கு எளிய முறையில் பொறியியல் தொழில் பயிற்றுவிக்கும் இந்த நிலையத்தில் இதுவரை 406 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரின் பயிற்சிக் காலம், ஆறுமாத காலமாகும்.

25 பேர் கொண்ட ஒவ்வொரு குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்த வகையில் இப்போது பயிற்சி பெறுவோர் 53வது குழுவினராவர். 1-3-81 முதல் 54வது குழுவினர் தமது பயிற்சியினைத் தொடங்குவார்கள்.

**கற்பிக்கும் கலைகள்**

பொருத்துதல் (Fitting), துளையிடுதல் (Drilling), இயந்திர சாதனங்களைச் சரிப்படுத்தல் போன்ற பணிகளில், பார்வைக் குறையுடைய அந்தப் பணியாளர்கள் பயிற்சி பெறுவதும் பணி புரிவதும் வியப்பூட்டுவதாக இருக்கிறது.

அந்த வேலைகளைக் கற்றுக் கொள்வதில், அவர்கள் மிக ஆர்வத்தோடு ஈடுபடுகிறார்கள். பார்வையற்ற நிலையிலும், இரும்பாலான அந்த ராட்சச இயந்திரங்களை இயக்குவதிலும், இயந்



துளையிடுதல்...

திர பாகங்களைச் செய்வதிலும் அவர்கள் காட்டுகின்ற வேகம்- தூர நின்று பார்க்கும் நாமே அச்சப்படும்படி உள்ளது.

பார்வையற்ற முதியோர்க்கு இவ்வகையில் பயிற்சி அளிக்கப் படும் ஆறு மாத காலமும், தமிழக அரசால், தங்குமிடமும் உணவும் இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் அவர்கள் காக்கி உடை மட்டுமே அணிய அனுமதிக்கப்படுகிறார்கள்.

இவை தவிர - இதர செலவு களுக்காக என அவர்கள் ஒவ் வொருவருக்கும் இரண்டு ரூபாய் பணம் தரப்படுகிறது.

பயிற்சி முடிந்ததும், இவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களைப் பதிவு செய்து கொள் ளுவதின் மூலம், எளிதில் வெளி யிடங்களிலும்வேலைவாய்ப்பைப் பெற முடியும்



துண்டித்தல்...

## ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையம் :

மத்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத் தலைமை இயக்ககத் தின் சார்பில் உடல் ஊனமுற் றோர் மறுவாழ்வு நிலையம் (Vocational Rehablitation centre for physically Handicapped) ஒன்று கிண்டியில் இயங்கி வருகிறது.

16 வயது முதல் 45 வயது வரை உள்ள - கை கால் ஊன முற்றோர், காது கேளாதோர் கண் பார்வையற்றோர் ஆகிய வர்கள் இந்த மறுவாழ்வு நிலையத்தில் சேர்த்துக் கொள் ளப்படுகிறார்கள்.

ஒரு கண் மட்டுமே பழுது பட் டோர் இங்கே சேர்த்துக் கொள் ளப்படுவதில்லை.

தொழில் மதிப்பீடு செய்தல், தொழில் திறமையை வளர்த்தல், அரசு மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் மூலம் தேவை யான உதவிகளைச் செய்தல், உடல் ஊனமுற்றோருக்கு மலி வான விலையில் உறுப்புகள், சாதனங்கள் செய்வதில் பயிற்சி அளிப்பது போன்ற பல பணிகள் இங்கே கவனிக்கப்படுகின்றன.

இங்கே சேர்க்கப்படுவோருக்கு உதவித் தொகை தங்கிட இலவச விடுதி, இலவச மருத்துவச் சோதனை ஆகியவைகளும் கூட உண்டு.



பேசவும் கேட்கவும் இயலாதோர் பின்னவும் தைக்கவும் கற்கின்றனர்

### தமிழக அரசு உதவி

வானொலி, தொலைக் காட்சி, துணிவெட்டுதல், தைத்தல், தச்சுத் தொழில், ஸ்கிரீன் பிரிண் டிங், பொறியியல் போன்ற துறை களில் இங்குள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த ஊனமுற்றோர் மறு வாழ்வு நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவோருக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகையாகத் தமிழ்நாடு அரசு மூலம் அளிக்கப் படுகிறது.

இங்கே இடம் பெற்றுள்ளஆண் பெண் இருபாலரின் தொழிற் பயிற்சி ஆர்வம், சகல உறுப்புக் களும் சரியாக இருப்பவர்களின் ஆர்வத்திற்கும் மேலானதாகவே இருக்கிறது என்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒன்றாகும்!





# தமிழ் ஆராய்ச்சியில் விஞ்ஞான முறை கண்டவர்

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் தமிழ்மொழியில் ஆராய்ச்சி செய்யாத நூல்களே கிடையா என்று துணிந்து கூறலாம். ஒவ்வொரு நூலையும் துருவி ஆராய்வதே இவருக்கு இன்பம் பயப்பதாக இருந்து வந்தது. இவர் தமிழ் ஆராய்ச்சியில் 'விஞ்ஞான முறை' கண்டவர். உலகத்திலுள்ள தலைசிறந்த இலக்கியங்களையெல்லாம் கற்று அறிவுக் கடலைக் கடந்தவர் இவர். தமிழ்ப் பேரகராதி அளித்த அறிஞர் என்று போற்றுதற்குரியவர்.

## இளமையில் தளிர்த்த தமிழ்

வையாபுரிப் பிள்ளை, தாமிரபரணி ஆற்றங்கரையில் திருநெல்வேலியை அடுத்த சிக்கல்நரசையன் கிராமத்தில் 1891ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் சரவணப் பெருமாள் பிள்ளை. தாயார் பிரம்மநாயகி. பேராசிரியரின் பாட்டனார் சங்கரலிங்கம் பிள்ளை, நல்ல தமிழறிஞர். இவர் தாமிரபரணிப் புராணம் பாடியுள்ளார். பேராசிரியரின் தந்தை தமிழிலும், வடமொழியிலும் சிறந்த புலமையடைந்து ஆங்கில அறிவும் பெற்றிருந்தார்.

இவ்வாறு தமிழ்ப் புலமை மிக்க பரம்பரையில் தோன்றிய வையாபுரிப் பிள்ளை, இளமையிலேயே தேவார திருவாசகப் பாடல்களை ஓதக் கற்றுக்கொண்டார். சமயத் தொடர்பான பல நூல்களையும் தாமே படித்துத் தமிழ் அறிவினை வளர்த்துக் கொண்டார்.

இவருடைய கல்வி, கணபதி வாத்தியார் ஆரம்பப்பாடசாலையில் தொடங்கியது. பின்னர் இந்துக் கல்லூரியில் (இப்பொழுது மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக்கல்லூரி) சேர்ந்து தமிழாசிரியர்கள் சிவராமப்பிள்ளை, எம். எஸ். சுப்பிரமணியக் கவிராயர் ஆகியோரிடம் தமிழ் கற்றார். இவருடைய தமிழாற்றல் மேலும் வளர ஆசிரியர்களும் ஊக்கமூட்டி வந்தனர். எப்.ஏ., வகுப்பில் படித்து வந்த நாட்களிலேயே இவர் கலித்தொகை முழுவதையும் பல பிரதிகளைக் கொண்டு ஒப்புநோக்கிப் படியெடுத்து வந்தார்.

பின்னர், சென்னையில் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ., வகுப்பில் தமிழில் மாகாணத்திலேயே முதலாவதாகத் தேறி, சேதுபதி தங்கப் பதக்கத்தைப் பெற்றார். சரித்திரத்தையும், பொருளாதாரத்தையும் இவர் பாடமாக எடுத்துக் கொண்டார். ஆர். கே. சண்முகம் செட்டியாரும், திருவிதாங்கூரைச் சேர்ந்த சுவாமிநாத பிள்ளையும் இவருடைய ஒருசாலை மாணாக்கராயிருந்தனர். அதன் பிறகு திருவனந்தபுரத்தில் சட்டக் கல்லூரியில் சேர்ந்து 1915ல் சட்டத் தேர்வில் தேறினார்.

## தமிழ்ப்பற்று :

திருவனந்தபுரத்தில் சிலகாலமும், திருநெல்வேலியில் சில காலமும் இவர் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வந்தார். ஆனால், அக்காலத்திலும் சங்க இலக்கியங்கள், கம்பராமாயணம் முதலியவற்றில் பெரிதும் ஈடுபட்டுக் கற்று வந்தார். திருவனந்தபுரத்தில் இருந்த காலத்தில் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, இசைச் செல்வர் இலக்குமணபிள்ளை, தமிழறிஞர் கே.என். சிவராஜபிள்ளை, நீதிபதி சேஷய்யரின் மருகர் கே.ஜி. சங்கரய்யர் முதலியோரும் வையாபுரிப் பிள்ளையுடன் சேர்ந்து சைவப் பிரகாச சபையில் கூடி தமிழ்நூல்களின் ஆராய்ச்சியில் திளைத்தனர். நெல்லையில் இருந்தபோது, டி.கே.சி,. வ.வே.சு. ஐயர், வேதநாயகம் பிள்ளை போன்ற மற்றும் பல அறிஞர்களின் நட்பு ஏற்பட்டது.

## தமிழுலகுக்கு அறிமுகம் :

சேரர் தலைநகராகிய கருவூர் பற்றி (புறநானூறு 13ஆம் செய்யுள்) எழுந்த விவாதத்தில் கலந்து கொண்டு வையாபுரிப் பிள்ளை எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை இவரைத் தமிழுலகுக்கும், யாழ்ப்பாணம் முதலிய கடல் கடந்த நாடுகளுக்கும் அறிமுகமாக்கியது. இக்கட்டுரை 'செந்தமிழில்' வெளி வந்தது. இவர் எழுதிய மற்றும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் 'செந்தமிழிலும்' 'தமிழர்நேசனி' லும் தொடர்ந்து வெளிவரலாயின.

## அகராதி அளித்த அறிஞர்:

சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பேரகராதி ( Tamil Lexicon ) வெளியிடத் தீர்மானித்து 1913ல் வேலை தொடங்கி, மந்தமாகவே நடந்து வந்தது. 1926ஆம் ஆண்டு பதிப்பாசிரியர் பதவியை வையாபுரிப் பிள்ளை ஏற்றார். அது முதற்கொண்டு இவ்வேலை சுறுசுறுப்பாக நடந்தேறியது. 10 ஆண்டுகளில் 7 தொகுதிகளாகப் பேரகராதி வெளிவந்தது.

## பதிப்பாசிரியப் பணி

திருவனந்தபுரத்தில் வழக்கறிஞராக இருந்த காலத்திலேயே சுந்தரம்பிள்ளையின் 'மனோன்

எஸ்.எஸ். இராமசாமி

மணீயம்' நாடகத்தை இரண்டாவது பதிப்பாகச் செம்மையாக வையாபுரிப் பிள்ளை பதிப்பித்தார். இதுவே பிள்ளையவர்கள் பதிப்பித்த முதல் நூலாகும். பின்பு, அகராதிப் பதிப்பு வேலையில் ஈடுபட்டிருந்தபோது அதற்கு ஆதார நூல்களான நாமதீப நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு முதலியவற்றைச் சீரிய முறையில் பதிப்பித்தார்.

1938 ஆம் ஆண்டில் அரிய ஆராய்ச்சி முன்னுரையுடன் இவர் பதிப்பித்த ''புறத்திரட்டு'' இவருடைய பதிப்பாசிரியர் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. 1929ஆம் ஆண்டு முதல் 1939ஆம் ஆண்டு வரை களவியற் காரிகை, துகில் விடுதூது, பணவிடுதூது, தினகர வெண்பா, குருகூர்ப்பள்ளு, திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா, மதுரைக் கோவை போன்ற சிற்றிலக்கியங்களை இவர் அழகுறப் பதிப்பித்தார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பலவற்றைப் பழைய உரையுடன் பதிப்பித்தார். இப்பதிப்பு வேலைகளின் போது அறிஞர் மு. அருணாசலம், புலவர் மு. சண்முகம் பிள்ளை ஆகிய இருவரும் உடனிருந்து உதவினர்.

### இலக்கியத் தொண்டு

1936ஆம் ஆண்டில் அகராதி வேலை முடிந்ததும், வையாபுரிப் பிள்ளை சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பொறுப்பேற்று 10 ஆண்டுகள் பலவகை ஆராய்ச்சிகளை ஒற்றுமைப்படுத்திக் கண்டார்.

இக்காலத்தில்தான் 'புறத்திரட்டு' பதிப்பிக்கப்பட்டது. காலவெள்ளத்தில் அழிந்துபோன குண்டலகேசி, வளையாபதி, முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களுக்கு இன்று தெரிய வந்திருக்கும் பாடல்கள் புறத்திரட்டின் மூலம்தான் தெரியவந்தன. திருந்திய பாடங்களும் விளங்கலாயின. புறத்திரட்டினையடுத்து இராமப் பய்யன் அம்மானை என்னும் வரலாற்று நூலையும் ஆராய்ச்சி முன்னுரையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

தமிழார்வமிக்க வ.உ. சிதம்பரம் பிள்ளை தொல்காப்பியம்-இளம்பூரணர் உரையை வெளியிட்டபோது, இது திருத்தமாக வெளிவர ஏடுகளை ஒப்புநோக்கி உடனிருந்து பதிப்பிற்குப் பெரிதும் உதவியவர் வையாபுரிப் பிள்ளை என்பதை நெருங்கிய நண்பர்கள் அறிவர்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் வெளிவந்த சங்க இலக்கியத்தை இரண்டு தொகுதிகளாக, பாடல்களை இயற்றிய புலவர்களின் வரிசைப்படி புதிய முறையில் வையாபுரிப் பிள்ளை பதிப்பித்தார். சீவகசிந்தாமணி, திருமந்திரம், தேவாரம் முதலான நூல்களை ஏடுகளுடன் ஒப்புநோக்கி சீரிய முறையில் மலிவுப் பதிப்பாக வெளியிட உதவியவர் வையாபுரிப் பிள்ளை என்பதைத் தமிழ்ப் பெருமக்கள் அறிவர்.

### ஆங்கில நூல்கள்

வையாபுரிப் பிள்ளை தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்ததோடு வடமொழி, மலையாளம், ஜெர்மன், பிரெஞ்சு முதலான பிறமொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார்.

ஆங்கிலத்தில்

History of Tamil Language and Literature

என்னும் நூலை பேராசிரியர் எழுதியுள்ளார். தமிழ்ப் பேரகராதிக்கு இவர் ஆங்கிலத்தில் எழுதிய History of Tamil Lexicography குறிப்பிடத்தக்கது. மற்றும் ஆங்கிலத்தில் Word study and Chronology in Tamil Literatare, Life in Ancient city of Kaviripumpattinam. The Age of Manickavasagar, Research in Dravidian Languages

கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

### கட்டுரைத் தொகுதிகள்

பேராசிரியரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனைத்தும் நூல்களாக வெளிவந்துள்ளன. தமிழர் பண்பாடு, தமிழின் மறுமலர்ச்சி, இலக்கிய தீபம், தமிழ்ச் சுடர் மணிகள், இலக்கிய உதயம் (2 பாகங்கள்), இலக்கியச் சிந்தனைகள், இலக்கணச் சிந்தனைகள், இலக்கிய மணிமாலை, கம்பன் காவியம், அகராதி நினைவுகள், காவிய காலம், சொற்களின் சரிதம், சொற்கலை விருந்து ஆகிய நூல்கள் பேராசிரியரின் ஆழ்ந்த ஆராய்ச்சிப் புலமையைப் புலப்படுத்துகின்றன.

இவர் கவிதைகளையும், ராஜி என்னும் நவீனத்தையும், சிறுகதைகளையும் (சிறுகதை மஞ்சரி) எழுதியுள்ளார்.

### கம்பனுக்கு ஆராய்ச்சிப் பதிப்பு

கம்ப இராமாயணத்திற்குச் ஆராய்ச்சிப் பதிப்பு வேண்டும் என்று பேராசிரியர் நீண்டகாலம் உழைத்த வந்தார். தமது இல்லத்திற்குக் 'கம்பன் நிலையம்' என்றே பெயர் சூட்டினார். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் 77 இராமாயணச் சுவடிகளைத் திரட்டி, நண்பர்கள் உதவியுடன் பாடபேதங்களையெல்லாம் குறித்து வைத்திருந்தார். பேராசிரியர் சீனிவாச ராகவன், பி.ஸ்ரீ., சா. கணேசன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இப்பதிப்பை வெளியிட முயற்சி செய்தார். பல இடர்ப்பாடுகளினால் இத்திட்டம் நிறைவேறாதது தமிழ் மக்களின் தவக்குறையே ஆகும்.

### அநந்தையில் அரும்பணி

1951ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித் துறைக்குத் தலைமை தாங்க பேராசிரியருக்கு அழைப்பு வந்தது. அதனை ஏற்று மூன்று ஆண்டுகள் அரும்பணியாற்றினார். பேராசிரியரின் ஆராய்ச்சி நெறியை இன்றும் அங்குள்ள அறிஞர்கள் பின்பற்றி வருகிறார்கள். தமிழ் ஆராய்ச்சித் துறையில் சிறந்து பணியாற்றி வரும் வி.ஐ. சுப்பிரமணியம், எஸ்.வி. சுப்பிரமணியம், மா. இளைய பெருமாள் ஆகியோர் பேராசிரியரிடம் பயிற்சி பெற்றனர்.

1953ஆம் ஆண்டில் பேராசிரியர் சென்னைக்கு மீண்டும் திரும்பியபோது, திருவனந்தபுரம் பொதுமக்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள். அவர்கள் வழங்கிய பாராட்டுரையில் ''இன்று கவி பாடித் தங்களைப் போற்ற கவிமணியில்லை; தங்கள்பெருமையை இசையில் மீட்டி இங்குப் பாட இசைச் செல்வர் இல்லை; தங்கள் ஆராய்ச்சித் திறனைக் கட்டுரையில் சிறப்பிப்பதற்கு இங்கே சிவராஜன் இல்லை; அன்புகலந்த எங்கள் புன்சொற்களையே பாராட்டுரையாக ஏற்றருள வேண்டும்'' என உள்ளன்போடு பேராசிரியரின் தமிழ்ப் பணியைப் போற்றினார்கள்.

### இந்துஸ்தான் டெலிபிரிண்டரின் சிறந்த செயல்பாடு

இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தயாரிப்பிலும், விற்பனையிலும் 1979-80—ஆம் ஆண்டில் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருந்தபோதிலும் இந்த ஆண்டில் 7,166 டெலிபிரிண்டர்களை இந்நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது. இதற்கு முந்திய ஆண்டில் 6,725 டெலிபிரிண்டர்களைத்தான் இந்நிறுவனம் உற்பத்தி செய்தது.

சென்னைக்குத் திரும்பிய பின்னரும் பேராசிரியரின் ஆராய்ச்சித் தொண்டு தொடர்ந்தது. 'தினமணிக் கதிரில்' இலக்கிய மண்டபம் என்ற தலைப்பில் கட்டுரைகளை எழுதிவந்தார். 1955-ஆம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் சங்கம், பேராசிரியரின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டும் வகையில் கேடயம் வழங்கி புகழ் மாலை சூட்டியது. அச்சமயத்தில் ஆளுநராக இருந்த திரு ஸ்ரீ பிரகாச விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

**பண்பு நலன்**

தம்முடைய சிறந்த தமிழ்ப் புலமையை யாருக்கும் எந்தச் சமயத்திலும் உதவும் சிறப்பியல்பு பேராசிரியரிடம் குடிகொண்டிருந்தது. தமிழ் கற்றவர் யாரும், எந்த நிலையினரும், எந்த நேரமும் இவரிடம் சென்று ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாம். எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்கும் அருங் குணங்களையுமுடையவர்பொறாமை என்பது சிறிதும் தலைகாட்டாத உள்ளம் அவருடையது. யார் எந்தப் பணி செய்தாலும் அது மேம்பட வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாக இருந்து வந்தது. அதற்குத் தம் அலுவல்களையும் பொருட்படுத்தாது மனமுவந்து உதவிபுரிந்து வந்தார்.

தம்மை வைதாரையும் மன்னித்து மறந்துவிடும்உயரிய பண்பட்ட உள்ளம் அவருக்குண்டு. பாடப் புத்தகத் தேர்வுக் குழுவில் இவர் பணியாற்றியபோது, நேர்மைக்குப் புறம்பாக இவர் நடக்காததால் பலர் இவர்மீது சாடியது பற்றிய பல நிகழ்ச்சிகள் உண்டு.

பெண்கள் தியாகத்தையும், அவர்கள் பெறும் அறிவு வளர்ச்சியையும் பொறுத்தே இருக்கிறது இந்தியாவின் விமோசனம்.

☆

பயிர் நிலத்தில் களர் ஏற்பட்டால் அது நல்ல நிலத்தைச் சாப்பிட்டு விடுகின்றது. அது எத்துணைத் தீமையோ, அதைவிட அதிகத் தீமையானது சாதிப் பிரிவினை என்னும் களர். அது மக்களைச் சாப்பிட்டு விடவும், பிரித்து வைக்கவும் செய்கிறது.

பிரார்த்தனை என்பது காலையின் திறவுகோல்; மாலையின் தாழ்ப்பாள்.

—காந்தியடிகள்.

**நாட்குறிப்பு**

இவர் தம் இளம் பருவ முதலே இடைவிடாது நாட்குறிப்பு எழுதி வந்திருக்கிறார். இரவைப் பகலாக்கி, பல ஆயிரக்கணக்கான நூல்களைப் படிக்கவும், நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரையவும், இலக்கியச் சொற்பொலிவுகளை நிகழ்த்தவும், ஓய்வு எடுத்துக் கொள்ளும் நேரத்தைக்கூடச் சிந்திக்கவும் பயன்படுத்தியதை இவருடைய நாட்குறிப்பு ஏடுகளின் மூலம் நாம் அறியலாம்.

**ஆராய்ச்சி நெறி**

விஞ்ஞான முறையில் அமைந்த பேராசிரியரின் ஆராய்ச்சி நெறியைச் சிறப்பாகக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். நூல்களின் காலத்தைத் திறமான புலமையுடன் அறுதியிட்டுக் கூறியவர் இவரேயாவார். இம்முடிவுகளை எல்லோரும் ஒப்புக் கொள்வதில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், அவர் விஞ்ஞான முறைப்படி வகுத்த வழியைத் தான் நாம் இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். உண்மையை அறிய வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாக இருந்தது, ''முன் கூட்டியே செய்து கொண்ட ஒரு முடிவுக்காக எ த விஷயத்தையும் மறைத்துத் திரித்து ஒடித்து, வளைத்து அவர் எழுதவில்லை'' என்பது உண்மையறிவை நாடும் அறிஞர்களுக்கு எளிதில் விளங்கும்..

வையாபுரிப்பிள்ளையின் தமிழ் ஆராய்ச்சி பற்றி கி. வா. ஜ. குறிப்பிட்டுக் கூறுவதாவது.

''விருப்பு, வெறுப்பு இல்லாமல் எதைச் சொன்னால் பெருமை குறைந்துவிடும் என்று எண்ணாமல், உள்ளதை உள்ளபடி ஆராய்வதற்கு ஒருவகைத் துறவு மனப்பான்மை வேண்டும். திரு எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களுக்கு இத்தகைய மனப்பான்மை இருந்தது.''

கால ஆராய்ச்சி மொழியாராய்ச்சி, சொல்லாராய்ச்சி முதலியவற்றில் மட்டுமே பேராசிரியர் ஈடுபட்டார் என்று முடிவு கட்டி விடுவதற்கில்லை. இலக்கியத் திறனாய்விலும் இவர் சிறந்து விளங்கினார். இவர் எழுதியுள்ள கட்டுரைச் சுரங்கத்திலே ஒளிரும் வைரங்களை நாம் அகழ்ந்தெடுக்கலாம்.

**உருவத் தோற்றம்**

அடக்கமான இயல்பு, முகத்தில் புன்சிரிப்பு, தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ள நாணுதல் ஆகிய நல்லியல்புகள் இவரிடம் உண்டு. இவரை நேரில் கண்டு உரையாடியவர்களுள் ஒருவரான கு. அழகிரிசாமி நயம்படத் தெரிவிப்பதாவது:

''அறிவுப்பரப்பில் மட்டுமல்ல உருவத் தோற்றத்திலும் அவரை அகத்தியரோடு ஒப்பிடலாம். பிள்ளையவர்கள் குள்ளமாகவே இருப்பார்கள்... வாமன அவதாரம் எடுத்த திருமால் ஓரடியால் உலகத்தை அளந்ததாகப் பழங் கதை கூறுகிறது. வையாபுரிப் பிள்ளை தமிழ் இலக்கியத்தின் பரப்பை மட்டுமன்றி அநேகமாக உலக இலக்கியத்தையுமே அளந்து விட்டார் என்று சொல்லலாம்''.

**முதலாயிரம் பதிப்பு:**

உடல் நலக் குறைவு காரணமாகப் பேராசிரியரின் ஆராய்ச்சி பணி என்றுமே தடைப்பட்டதில்லை. இவருடைய நண்பர் 'மர்ரே' ராஜம் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தைப் பாமரரும்படித்து இன்புறவேண்டும் என்ற அவாவினால் உந்தப் பெற்று பல ஏடுகளைப் பரிசோதித்து சந்தி பிரித்து அதனை மலிவுப் பதிப்பாக வெளியிடத் திட்டமிட்டார். புரட்சிகரமான இவ்வேலைக்குப் பேராசிரியர் தயங்கவில்லை. இதன் விளைவாக 'முதலாயிரம்' வெளிவந்தது.

**நூல் நிலையம்:**

பேராசிரியர் சிறந்த நூல்களையும், ஓலைச் சுவடிகளையும் திரட்டித் தம் நூல் நிலையத்தில் வைத்திருந்தார். தமிழ் இலக்கியங்களின் முதல் பதிப்புகள் கம்ப இராமாயணச் சுவடிகள், நிகண்டுகள், திருக்குறள், சங்க இலக்கியங்கள், இலக்கண நூல்கள் முதலியன இடம் பெற்றிருந்தன.

1960ஆம் ஆண்டின் இந்த நூல்களும், சுவடிகளும் கல்கத்தாவிலுள்ள தேசிய நூல் நிலையத்திற்குப் பேராசிரியரின் குடும்பத்தினரால் நன்கொடையாக வழங்கப்பட்டவை. இக்கருவூலத்தில் தமிழ் நூல்கள் 2943; ஆங்கிலம் பிரெஞ்சு, ஜெர்மன் மொழி நூல்கள் 1543; சமஸ்கிருதம் 113, மலையாளம் 16 உள்ளன.

இரத்தக் கொதிப்பினால் உடல் நலம் குன்றிய பேராசிரியர் 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி 17ஆம் நாள் அமரரானார். 'ஆராய்ச்சி மன்னர்' 'இலக்கிய கனவான்' 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்றெல்லாம் பத்திரிகை உலகம் பேராசிரியரைப்பாராட்டிப் புகழ் அஞ்சலி செலுத்தியது.

# ஆதி திராவிட மக்கள் மேம்பாடு பெற

## 1-7-77 முதல் 3

1. சென்னையில் உள்ள அரசு கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி மாணவ-மாணவியர் விடுதிகளில் உணவுக்காகச் செலவிடப்படும் தொகை மாதம் ரூ. 65-லிருந்து ரூ. 80 ஆகவும், பிற இடங்களில் ரூ. 55-லிருந்து ரூ. 65 ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது.
2. உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கான அரசு விடுதிகளில் உணவுக் காகச் செலவிடப்படும் தொகை மாதம் ரூ. 40-லிருந்து ரூ. 45 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
3. 60 விடுதிகள் புதிதாகத் திறக்கப் பட்டுள்ளன.
4. ஆண்டொன்றுக்கு இரண்டு கட்டிடங்கள் வீதம் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா ரூ. 4 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.
5. அரசு விடுதிகளுக்கு நல்ல கட்டிடங்கள் புதிதாக தாட்கோமூலம் கட்டப்பட்டு வருகின்றன.
6. பள்ளி இறுதித் தேர்வில் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவ-மாணவி யருக்கு ரூ. 300 தனித் தகுதி மான்யமாக வழங்கப்படுகிறது.
7. ஆதிதிராவிடர் மற்றும் ஆதிவாசிகள் நலத் தொடக்கப்பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் ஆதிவாசி மாணவர்களுக்கு இப்போது வழங்கப்படும் ஒரு ஜோடி சீருடையுடன் கூடுதலாக ஒரு ஜோடி சீருடை வழங்க ஆணையிடப் பட்டுள்ளது இதேபோன்று இத்துறையி னால் நடத்தப்படும் நடுநிலைப் பள்ளி களில் ஆறு முதல் எட்டு வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், ஆதிவாசி மாண வர்களுக்கு இதுவரை சீருடை வழங்கப் படாமல் இருந்த நிலையில் தற்போது இரண்டு ஜோடி சீருடைகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இரண்டு ஜோடி சீருடைகளும் வருட ஆரம்பத்தி லேயே வழங்க தற்போது ஆணையிடப் பட்டுள்ளது.
8. இரண்டு ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகவும், இரண்டு நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும் ஏழு உயர்நிலைப்பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப் பட்டுள்ளன.
9. 296 இளநிலை ஆசிரியர் பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக உயர்த்தியும் 33 தமிழ்ப் பண்டிதர்கள் பதவிகள் 33 நடுநிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தியும் ஆணையிடப்பட்டுள்ளது.
10. அரசு உதவித் தொகை பெற்று நடத்தப் படும் தனியார் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர் ஒவ்வொரு வருக்கும் மாதம் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் உதவித் தொகையினை ரூ. 25-லிருந்து, சென்னை நகரம்-மாவட்ட மற்றும் வட்ட தலைநகரங்கள் ஆகிய இடங்களுக்கு ரூ. 35 ஆகவும், பிற இடங்களுக்கு ரூ. 30 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
11. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் ஆதிவாசி மாணவர்களுக்குப் பெற்றோ ரின் வருமானத்தை பாராமல், 6-ம் வகுப்புமுதல் 10-ம் வகுப்புவரை இலவச மாக புத்தகங்கள் வழங்குவதுடன், சிறப்புக் கட்டணத்தைப் பள்ளிகளுக்கும் தேர்வுக் கட்டணத்தை அரசுத் தேர்வு இயக்குனருக்கும் நேரடியாகச் செலுத்தப் படுகிறது. இதற்கு ரூ. 3000 என இருந்த ஆண்டு வருமான வரம்பு நீக்கப் பட்டுள்ளது. தவிர 6 முதல் 10-ம் வகுப்புவரை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 3000-க்கு உட்பட்டிருந்தால், உண்டி உறையுள் தொகை வழங்கப்படுகிறது.
12. 1978-79-ல் கடன் உபகாரச் சம்பள மாக வழங்கப்பட்ட தொகை ரூ. 29.35 இலட்சம் மட்டுமே. இத்தொகை 1979-80-ல் 36.98 இலட்சமாக உயர்ந் துள்ளது.
13. சட்ட பட்டதாரிகள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு உதவியாக புத்தகங் கள், மேஜை, நாற்காலிகள் வாங்குவ தற்கு ரூ. 500-மானியமாகவும், பதிவுக் கட்டணம், அறை வாடகை செலுத்து வதற்கு ரூ. 750 கடனாகவும் வழங்கப் பட்டு வந்தது. 1980-81 முதல் மேற்படி மானியத் தொகை ரூ. 500-ல் இருந்து ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
14. தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு மாதம் ரூ. 45 வீதம் உதவித் தொகை வழங்கப் பட்டு வந்தது. 1-8-80ல் இருந்து இவ் வுதவித் தொகை ரூ. 55 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
15. அனைத்திந்திய பணிக்கான தேர்வில் வெற்றி பெறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதிதிராவிட பழங்குடி மற்றும் அட்ட வணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மாணவருக்கு ரூ. 1000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் முன்னோடிப் பயிற்சி நிலையம், சென்னையில் பயிற்சி பெறாது. தனியாக தேர்வு எழுதி வெற்றி பெற்று அகில இந்தியப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு வருமானவரம்பு கருதாமல் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது.
16. வருமான வரம்பின்றிக் கல்லூரிப் படிப்புக் கட்டணச் சலுகை 1977-78-ம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. மேலும் இந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு, மெட்ரிக் குக்கு மேற்பட்ட படிப்புகளுக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 9000-க்கு உட் பட்டு இருந்தால் மத்திய அரசு உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. மத்திய அரசு உபகாரச் சம்பளத்துக்குத் தகுதியற்ற ஆதிதிராவிடர் இந்து பழங்குடி மாணவர் களுக்கும், மற்றும் ஆதிதிராவிட கிறிஸ்தவ மாணவர்களுக்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வரு மானம் ரூ. 3000-க்கு உட்பட்டு இருந் தால் மாநில அரசு உபகாரச் சம்பளமும் வழங்கப்படுகிறது.
17. அறிவுக் கூர்மையுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு, கல்வி உதவித் தொகை ஆதிதிராவிடர் மாணவிகள், ஆதிதிராவிடர் கிறிஸ்தவ மாணவிகள் பழங்குடி மாணவர், மாணவியர் ஆகி யோருக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத் திலும் இருந்து இரண்டு ஆதிதிராவிடர் இந்து மாணவர்கள் இரண்டு ஆதிதிரா விடர் இந்து மாணவிகள் இரண்டு பழங் குடி மாணவர்கள், இரண்டு பழங்குடி மாணவிகள், இரண்டு ஆதிதிராவிட கிறிஸ்தவ மாணவர்கள் மற்றும் இரண்டு ஆதிதிராவிடர் கிறிஸ்தவ மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த மாணவருக் கான உதவித் தொகை பெறுவார்கள். இவ்வுதவித் தொகை பெறுவதற்கு வரு மான வரம்பு இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆதிதிராவிடர், இந்து மாணவர், ஒரு ஆதிதிராவிடர் இந்து மாணவி ஆகியோருக்கு காந்தி நினைவு சிறப்பு உதவித் தொகையும், ஒரு ஆதிதிராவிட கிறிஸ்தவ மாணவன், ஒரு ஆதிதிராவிட கிறிஸ்தவ மாணவி, ஒரு பழங்குடி மாணவர், ஒரு பழங்குடி மாணவி ஆகியோருக்குத் தகுதி வழி வகை உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித் தொகை பெறுவதற்கு வருமான வரம்பு இல்லை.
18. பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கறவை மாடுகள் வாங்குவதற் கென தரப்படும் நிதியுதவி ரூ. 500 லிருந்து ரூ. 1500 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
19. தொழில்களுக்கு வட்டியில்லா கட னுதவித் திட்டத்தின் கீழ், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வாங்கவும், பெட்ரோல் வியாபாரத்திற்காகவும் கடன் வழங்கப்பட்டுள்ளது. தீப்பெட்டித் தொழிற்சாலை அமைக்கவும், கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் ஆதிதிராவிடர்கள் பொருளாதார மேம்பாடு அடைந்திட தமிழ்நாடு ஆதி திராவிட வீட்டு வளர்ச்சிக் கழகத்தில் அபிவிருத்திப் பிரிவு ஒன்றினை ஏற் படுத்த தமிழக அரசு ஆணையிட் டுள்ளது. இவ்வாரியம் ஆதிதிராவிடர்கள் மேம்பாடு அடைந்திடவும் அவர்களுக்கு நிதி உதவி அளித்திடவும், அதற்கான பொறுப்புறுதியை அளித்திடும் வகை யிலும் இயங்கும். மத்திய அரசிடமிருந்து இதற்கான நிதி உதவி 49:51 என்ற விகிதத்தில் பெறப்படும். நடப்பு ஆண்டில் இவ்வாரியத்திற்கு 1 கோடி ரூபாயை அளிக்க தமிழக அரசின் மூல தனமாக ஒதுக்கியுள்ளது
20. இதுவரை (30-11-80 முடிய) ரூ. 7.96 கோடி செலவில் 3.47 இலட்சம் வீட்டு மனைகள் வழங்க 21932.18 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 1979-80-ல் மட்டும் ரூ. 84.56 இலட்சம் செல வில் 27068 மனைகள் அடங்கிய 1624.01 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளன.



# அரசு அளிக்கும் சலுகைகள்

## 31-12-80 வரை

21. வீட்டு மனைகள் முதலியன கையகப் படுத்தும் பணியினை விரைவுபடுத்துவ தற்குப் புதிய சட்டம் இயற்றப்பட் டுள்ளது. இது 24-9-1979-லிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

22. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வீடுகள் கட்டப்பட்டு ஆதிதிராவிடர்களுக்கு இல வசமாக வழங்கப்படுகிறது. தாட்கோ மூலமாக அதிகப்படியான வீடுகளை ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டித்தர வேண்டுமென அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி 207 ச.அடி பரப்பளவுடன் ஒவ்வொரு வீடும் ரூ. 4400 மதிப்பீட்டில் கட்டிடப் பொருள் கள் மற்றும் விலை ஏற்றத்தினால் 15% அதிகச் செலவுடனும் மலைப் பிரதேசங் களில் 50% அதிகச் செலவுடனும் 1979-80 மற்றும் 1980-81ம் ஆண்டிற் கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கள் கட்ட அரசு உத்திரவிட்டுள்ளது. (இதில் 10% நிர்வாகச் செலவும் அடங் கும்) 1980-81-ம் ஆண்டில் இத்திட்டத் திற்காக ரூ. 2.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23. நகராட்சிகளில் வேலைசெய்யும் துப்புரவுப் பணியாளர் நகராட்சிக்குச் சொந்தமான வீடுகளில் குடியிருந்தால் அவர்கள் வேலையிலிருக்கும் வரை வாடகை தரவேண்டியதில்லை என ஆணையிடப்பட்டுள்ளது.

24. தீண்டாமை ஒழிப்புக்காக சேவை செய்த சமூக நல ஊழியர்களின் சேவையைப் பாராட்டி சான்றிதழ்கள் 133 நபர்களுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

25. குடிதண்ணீர் கிணறு தோண்ட அனு மதிக்கப்பட்ட செலவு உச்சவரம்புத் தொகை ரூ 5000-லிருந்து ரூ. 6000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

26. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் கருவிகளும் சாதனங்களும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பைப பாரா மல் தொழிற்கருவிகளும், சாதனங்களும் ஆதிதிராவிடர் மலைவாழ் மக்கள் மற்றும் ஆதிதிராவிடர் மதம் மாறிய கிறித்தவர்களுக்கும் நிதி ஒதுக்கீட்டிற் குட்பட்டு இலவசமாக வழங்க ஆதி திராவிட பழங்குடி மக்கள் நல இயக்குன ருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

27. கன்னியாகுமரி மாவட்டத்திலும், திரு நெல்வேலி மாவட்டத்திலுள்ள செங் கோட்டை வட்டத்திலும் சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர் களுக்காக சலவைத் துறைகள் கட்டப் படுகின்றன.

28. ஏழை ஆதிதிராவிடர்களின் (ஆதிதிராவி டர்கள், ஆதிவாசிகள் மற்றும் ஆதிதிரா விட சமூகத்திலிருந்து கிறிஸ்தவ சமூகத் திற்கு மதம் மாறியவர்கள்) எவரேனும் இறந்துவிட்டால் அவரது ஈமக் கடன் களைச் செய்ய ரூ. 50 நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் 1978-79 ஆண்டு முதல் செயல்படுத்தப்படு கிறது. 1978-79 ஆண்டு ரூ. 2,87,000 செலவிடப்பட்டது. 5740 நபர்கள் பயனடைந்தனர். 1979-80-ல் இதற் கென ரூ. 18.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1980-81-ல் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஆனால் செலவினம் மிக அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

29. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப் பட்டவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங் கள் செயல்படுத்தப் படுகின்றன.

30. குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தினை தீவிரமாகச் செயல்படுத்த ஏற்கனவே உள்ள ஆறு இயங்கும் காவலர் படை தவிர மேலும் ஏழு இயங்கும் காவலர்படை கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு செயல்படுகிறது.

31. குடிமை உரிமை பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக மண்டல காவல் துறை அதிகாரி ஒருவரை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

32. கலப்புத் திருமணம் புரிந்து கொண்ட தம்பதியர்களுக்கு வழங்கப்படும் சலுகை களை பன்மடங்கு அதிகரித்து ஆணை யிடப்பட்டுள்ளது. ரூ. 4000 அவர்கள் பெயரில் வைப்புத் தொகையாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் போடப் படுவதுடன், ரொக்கமாக ரூ. 300ம் தங்கப் பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகிறது.

33. ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் 150 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப் பட்டு செவ்வனே செயல்பட்டு வருகின்றன. நடப்பு நிதி ஆண்டிலும் (1980-81) 50 குழந்தைகள் காப்பகங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

34. பழங்குடியினரின் மேம்பாட்டுக்கென துணைத் திட்டம் தீட்டப்பட்டு சிறப்பான திட்டங்களுக்காக 1977-78-ல் ரூ. 144 இலட்சமும், 1978-79-ல் ரூ. 168.84 இலட்சமும் செலவிடப் பட்டுள்ளது. 1980-81-ம் ஆண்டில் இப்பணிகளைத் தொடர்ந்து செயல் படுத்துவதற்கான நிதி ஒதுக்கிடு ரூ. 347 இலட்சமாக உயர்த்தப்படடுள்ளது.

35. ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டுக்காக அரசின் ஒவ்வொரு துறையின் நிதி ஒதுக்கீட்டிலும் 18 விழுக்காட்டுக்குக் குறையாமல் நிதி ஒதுக்கி சிறப்பு கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



Advt



# 'தமிழக மாநிலக் குடும்ப நலத் திட்ட முதல்வர் நிதி' முதலமைச்சர் வேண்டுகோள்!

இந்திய மாநிலங்களில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியில் தமிழ் நாடு மேற்கொண்டுள்ள பணிகள் மிகச் சிறப்பாக அமைந்து சிறப்பிடம் வகிக்கின்றன என்பதை நான் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். அரசுத் துறையும், தனிப்பட்ட தொண்டு நிறுவனங்களும், சமுதாய ஊழியர்களும், ஒருங்கே இணைந்து மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாகவே தான் இந்த ஒப்பற்ற சாதனையை நம்மால் எய்த முடிந்துள்ளது.

இந்திய நாட்டின் பொருளாதார வளமும், முன்னேற்றமும், குறிப்பாகத் தமிழகத்தின் பொருளாதார வளமும், முன்னேற்றமும் நம்முடைய குடும்ப நலத் திட்டப் பணிகள் தொடர்ந்து பெறுகின்ற வெற்றியையே பெரிதும் சார்ந்து இருக்கிறது. **''நலமிக்க குழந்தைகளே நாட்டின் செல்வங்கள்''** என்போம். அவர்களது எதிர்கால வாழ்க்கை ஒளிமிக்க தாக இருக்க உரியன செய்வது நம் கடமையாகும். இத்தகையதொரு சூழ்நிலையில், அவர்கள் எதிர்கால வளமைக்காக, விரிவான பல்வகைப்பட்ட பயன்நோக்குடைய திட்டங்களைச் செயற்படுத்தும் பொருட்டு, தமிழக மாநிலக் குடும்ப நலத் திட்ட முதல்வர் நிதி அமைக்கப்படுகின்ற செய்தியை நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். குடும்ப நலத்திட்டத்தைச் செயல்படுத்துகின்ற வகையில், கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்கிறவர்களுக்குக் கூடுதல் ஊக்க உதவித் தொகை வழங்குதல், குடும்ப நலத் திட்டம் குறித்துப் பிரச்சாரம் செய்தல் முதலிய இவ்வகைப் பணிகளுக்கென்றே முக்கியமாக இந்நிதி செலவிடப்படும்.

இந்நிதிக்கு நன்கொடை வழங்க விழைவோர் காசோலைகளாகவோ, உறுதிக் காசோலைகளாகவோ, 'தமிழக மாநிலக் குடும்ப நலத் திட்ட முதல்வர் நிதி' என்னும் கணக்கில் மருத்துவப் பணிகள் குடும்பநல இயக்குநர், சென்னை-8 என்ற முகவரிக்கு அனுப்பலாம். அல்லது அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட குடும்பநல-தாய்-சேய் நல அலுவலரின் முகவரிக்கு அனுப்பலாம். இந்நிதிக்கு வழங்கப்படுகின்ற நன்கொடைகள் அனைத்தும் வருமானவரி விதிப்பிலிருந்து முழுவரி விலக்கு அளிக்கப்படுகிறது.

தமிழகத்தில் வாழும் வள்ளன்மை மிக்க அனைவரும் 'தமிழக மாநிலக் குடும்ப நலத் திட்ட முதல்வர் நிதி' என்னும் பெயரில் அமைந்துள்ள இந்நிதிக்குத் தாராளமாக வாரி வழங்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.



# உலகத் தமிழ் மாநாடு தந்த உணர்ச்சிப் பெருக்குகள்!



நானிலம் முழுவதும் நான் மாடக் கூடலில் வந்து குவிந்து விட்டதோ என்னும் ஐயத்தை எழுப்பிய அருந்தமிழ் மாநாடு அன்னைத் தமிழுக்கு அளவற்ற நன்மைகளை அளித்துள்ளதை அனைவரும் அறிவர். அவற்றுள் ஆட்சிமொழி குறித்த ஒரு சில செய்திகளை இங்கே நினைவுகூர அவாவுகின்றேன்.

''பேருந்து'' என்னும் சொல் நன்கு பழகிவிட்டதை நாம் அறிவோம். எனினும் சிலர் இன்றுங் கூட '' Bus '' என்று சொல்வது எளிதாக உள்ளதே, அதை ஏன் மாற்றவேண்டும்?'' என்று வினவி வருவதைப் பார்க்கின்றோம். ''பேருந்து'' என்னும் சொல் பெருந்தொல்லை தருவதாக அவர்கள் நினைக்கின்றார்கள். பெரிய உந்து என்னும் முறையில் ''பேருந்து'' என்னும் சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இதை நன்கு உணராமல் சில ஊர்களில் ''பேரூந்து நிலையம்'' என்று எழுதி வைத்துள்ளார்கள். இத் தகைய பிழைகளை அறவே நீக்குதல் வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை.

உலகத் தமிழ் மாநாட்டுப் பணிகளில் பேருந்துகள் பெரும் பங்கு கொண்டன. விழா நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றவர்களையும், விழாக்கோலம் பூண்டிருந்த மதுரையம்பதியைக் கண்டு மகிழக் கடுகி வந்தோரையும், ஏற்றிக்கொண்டு பேருந்துகள் சுழன்று சுழன்று நடமாடிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக மிளிர்ந்தது. பேருந்துகளில் எழுதப் பெற்றிருந்த தமிழ்ச் சொற்கள் தனிப் பொலிவுகளைப் பெற்றன. ''உலகத் தமிழ் மாநாடு, சிறப்புப் பேருந்து'' என்னும் சொற்கள் காண்போர் உள்ளங்களைக் கவர்ந்து நின்றன. ''பேருந்து'' என்னும் சொல்லைப் பயன்படுத்துவதில் பெருந்தயக்கம் பூண்டிருந்த நண்பர்களுக்கு விடையளிக்கும் வகையில், ''சிறப்புப் பேருந்துகள்'' சிறந்த பணியாற்றுகின்றன. Bus இனிமேல் போதும், ''பேருந்து'' என்னும் சொல்தான் இனிய தமிழ்ச் சொல், அதனையே அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்பதை உலகத் தமிழ் மாநாடு உறுதிசெய்து விட்டது! உலகோர்க்கு அறிவித்துவிட்டது!

special bus என்பது ''சிறப்புப் பேருந்து'' என்று ஆகியுள்ளது. ''பேருந்து என்று சொல்வதற்கு ஏன் தயங்குகின்றீர்கள், அது சிறப்பாக அமைந்துள்ளதே'' என்று அறிவிப்பதைப் போன்று சிறப்புப் பேருந்துகள் வீதிகள் தோறும் விறுவிறுப்பாய்ச் சென்றன!

கோ. முத்துப்பிள்ளை

முதலாவது உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றபோது Delegate என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு அழகான தமிழ்ச் சொல் ஒன்றை அந்த மாநாட்டைக் கூட்டியவர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். அந்த அழகிய தமிழ்ச் சொல், அதன் பிறகு, ஏறக்குறைய மறந்தே போய் விட்டது என்று கூடச் சொல்லலாம். ஆனால் அது மீண்டும் மதுரையில் உலா வந்தபோது உள்ளம் பூரித்தது. ஆம், நான் ''பேராளர்'' என்னும் பேரெழில் வாய்ந்த சொல்லைத்தான் குறிப்பிடுகின்றேன்! Representative என்னும் ஆங்கிலச் சொல்லைச் ''சார்பாளர்'' என்று மொழி பெயர்க்கின்றோம். இந்தச் சொல்லையே Delegate என்னும் சொல்லிற்கும் பயன்படுத்திச் சிலர் குழப்பம் விளைவிக்கின்றனர். delegate என்னும் ஆங்கிலச் சொல்லை அப்படியே பயன்படுத்த வேண்டுமென்று அவாவுற்ற சிலர், சரியான உச்சரிப்பு தெரியாமல் இடருற்றதை நான் நேரில் கேட்க நேர்ந்தது. சிலர் ''டெல-கேட்'' என்று உச்சரித்தனர்! வேறு சிலர் ''டிலி-கேட்' என்று உச்சரித்தனர்! ''பேராளர்'' என்னும் சொல்லை உச்சரிக்கும்போது இத்தகைய இடர்ப்பாடுகள் ஏற்படுவதற்கு எட்டுணையும் வாய்ப்பில்லை என்று எண்ணும்போது எத்துணை மகிழ்ச்சியாக உள்ளது!

''பேராளர்'' என்னும் பெயரைப் பற்றி நண்பர்கள் சிலரிடம் கருத்துக் கேட்டபோது, அவர்கள் ''இது எப்படிப் பொருந்தும் ?'' என்று கேட்கத்தான் செய்தனர். ''பேராளர்'' என்னும் பெயரைப் பயன்படுத்த நம் ஊராளர் உவந்து முன்வராவிடினுங்கூட, உலகாளர் அச்சொல்லை அழகுற மொழிந்து முழக்கிச் சென்றுவிட்டனர்! பிற நாட்டினர் எடுத்துக் கூறிய பின்னரே, நம் பெருமையை நாம் உணர்தல் வாடிக்கை தானே!

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வசதியான பெருந்துகளில் பேராளர்களாகிய நாங்கள் மதுரையில் பயணம் செய்யும் வாய்ப்பினைப் பெற்றோம். ''பேராளர்கள்'' என்று பெரிய எழுத்துக்களில் அச்சிடப் பெற்றிருந்த தாள் அந்தப் பெருந்துகளில் ஒட்டப்பட்டிருந்தது. பெருந்துவின் பக்கமாக வருவார் போவாரெல்லாம் ''பேராளர்கள்'' பேராளர்கள்'' என்று பெருங் கிளர்ச்சியோடு பேசிச் சென்றனர். அப்போது ''கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்'' என்னும் தாயுமானவரின் பாட்டு மனத்திற்கு ஓடி வந்தது.

**சிற்றினம் சேராமை என்னும் அதிகாரத்தில் உள்ள 10 குறள்களில்-7 குறள்களை 'மனம்' என்னும் சொல்லை வைத்துத் துவக்குகிறார் வள்ளுவர்.**

**திருக்குறளார் முனுசாமி**

அன்று மதுரை மாநகரிலே மணிவாசகப் பெருமான் முழக்கிய ''பேராளன்'' என்னும் சொல், பன்னாட்களாக மறந்து போய், அது மீண்டும் உலகத் தமிழ் மாநாட்டிலே மணிவாசகரின் மதுரையம்பதியிலே மீண்டும் ஒலிக்கத் தொடங்கியபோது, உண்மைத் தமிழ் உள்ளங்களெல்லாம் உவகையால் துள்ளி விளையாடின.

''பாரார், விசும்புஉள்ளார்,
பாதாளத்தார், புறத்தார்,
ஆராலும் காண்டதற்கு அரியான்; எமக்கு எளிய பேராளன்''

என்று பாடினார் வாதவூரடிகள். மணிவாசகரின் மனத்திற்கிசைந்த பெருந்தகைதான் ''பேராளன்''. அந்தச் சொல், அழகிய 'தமிழ்ச் சொல், இன்று எல்லையில்லா இன்பத்தைக் கூட்டுவித்தது கூடல் நகரிலே. பேராளர்களை நினைவூட்டிய, பேராளர்களைப் பெருமைப்படுத்திய, மதுரை மாநகரில் நடைபெற்ற மாநாடு மனத்தில் பசுமையூட்டி மகிழ்ச்சியைப் பெருக்குகின்றது.

''வணக்கம்'' என்னும் மிகப் பழைய தமிழ்ச் சொல்லை, அண்மை ஆண்டுகளிலேதான் தமிழர்கள் மீண்டும் போற்றி மகிழத் தலைப்பட்டுள்ளார்கள். ஆங்கிலத்தில் Good morning, Good afternoon, Good evening, Good night என்றெல்லாம் சொல்லும் வழக்கம் இருந்துவருகின்றது. ஆனால் தமிழிலே சொல்லும் போது, பொழுதுகளையெல்லாம் குறித்துக்கொண்டிராமல், பொதுவாக ''வணக்கம்'' என்று சொன்னாலே போதுமென்று நாம்கருதுகின்றோம். good morning, sir என்று சொல்ல விரும்பும்போது ''வணக்கம் சார்'' என்று பலரும் சொல்லுவதைக் கேட்கின்றோம்! ''சார்'' என்னும் சொல்லை விடுத்து ''ஐயா'' என்னும் சொல்லை எடுத்தாள, போதுமான பழக்கம் இன்னும் ஏற்படவில்லை. ஆனால் ஆர்வமிகுந்தோர் ''வணக்கம் ஐயா'' என்று வாயார, நெஞ்சார வணக்கம் தெரிவிக்கும்போது, நம் உள்ளம் நெகிழ்ந்து விடுவதைக் காணுகின்றோம்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் ''வணக்கம்'' என்னும் சொல்லைக் கனிவுடன் மொழிந்து மகிழ்ந்தனர். பிற நாட்டு நல்லறிஞரோடு அளவளாவி மகிழ்வதற்கான அரிய வாய்ப்பினை வழங்கியது இந்த மாநாடு. வெள்ளைக்காரர்கள் எவ்வளவுதான் தமிழ் படித்திருந்தாலும், உரையாடும்போது ஆங்கிலத்தில்தான் அவர்களால் எளிதாக உரையாட முடியும் என்னும் தவறான எண்ணத்தை நாம் கொண்டுள்ளோம். இந்த எண்ணம் என் மனத்திலும் படிந்திருந்தது. ஆகவே வெள்ளைக்காரர் ஒருவரோடு உரையாடலைத் தொடங்கும் முகத்தான் good morning என்று கூறினேன். அவர் புன்னகை பூத்த முகத்துடன் ''வணக்கம்'' என்று சொன்னார். அத்துடன் அவர் நிற்கவில்லை. ''எனக்குத் தமிழ் நன்றாகத் தெரியுமே'' என்று தொடர்ந்து பேசினார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! ''நாம் என்றுமே பின்தங்கியவர்கள் தான்'' என்று எண்ணத் தோன்றியது! மேடைகளில் பேசிய-போதும், வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் ''வணக்கம்'' என்னும் சொல்லை வாரி வாரி வழங்கினர். நம்முடைய உச்சரிப்பும் அவர்களுடைய உச்சரிப்பும் வேறுபடுவது இயல்பேயாகும். அவர்களின் பேச்சு, தளர்நடை மழலையர் பேச்சுபோல், இனித்தது. ''வணக்கம்'' என்னும் சொல்லை அவர்களின் பேச்சு முறையிலேயே ''வணக்——கம்'' என்று உச்சரித்தபோது, மல்லிகை மணம் கமழ்வது போல, மாநாட்டுப் பந்தல் முழுவதும் ''கம்-ம்-ம்-'' என்ற மணம் வீசியது. அது மட்டுமல்ல; இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் மாநாட்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு தம்முடைய பேருரையை, ''உலகத் தமிழ் மாநாட்டுக்கு வணக்கம்'' என்று அழகு தமிழிலேயே கூறி, தொடங்கினார். அதைக் கேட்ட அங்குக் கூடியிருந்த இலட்சக் கணக்கான மக்களின் இதயங்களில் எல்லாம் ''வணக்கம்'' ஆனந்த நடனமாடியது!

''தமிழ்மொழி மென்மையான மொழி, ஆகையால் வன்மை நீர்மையவான கட்டளைச் சொற்களைத் (command words) தமிழில் அமைக்க இயலாது'' என்று பலரும் பேசுவதை நான் அவ்வப் போது கேட்டுள்ளேன். ''ஏன் முடியாது'' என்னும் வினா எழுந்து கொண்டே இருக்கும். இந்தப் பொருள் குறித்து, காவல் துறையைச் சேர்ந்த உயர் அலுவலர் ஒருவர், ஏற்கெனவே சிந்தித்து, நன்கு ஆராய்ந்து, அருமையான அழகு தமிழ்ச் சொற்களை

உருவாக்கியிருப்பதை உலகத் தமிழ் மாநாட்டில் நான் கண்டு களித்தேன். தில்லியில் தமிழ் நாடு சிறப்புக் காவலர் 2 - ஆம் அணியின் துணைத் தளவாயாகப் பணியாற்றிவரும் இந்த அலுவலர் திரு. ச. இராசவேலு அவர்கள் ஆட்சிமொழி குறித்த கருத்தரங்கில் உரையாற்றி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார். அவர் ஆக்கியுள்ள சொற்கள் அனைத்தும் நல்ல தமிழ்ச் சொற்களாக, தூய தமிழ்ச் சொற்களாக, அமைந்திருந்த எழிலை எண்ணி எல்லோரும் மெய்சிலிர்த்தனர். அவர் ஆக்கியுள்ள சொற்கள் ஒரு சில வற்றை இங்கே குறிக்கின்றேன்.

| | |
|---|---|
| Attention | =நிமிர்ந்து நில் |
| Stand-at-ease | =தளர்ந்து நில். |
| Stand-easy | =ஓய்ந்(து) நில். |
| Fall-in | =அகம் சேர் |
| Fall-out | =புறம் போ |
| Eyes-right | =வலம் பார் |
| Eyes-left | =இடம் பார். |

இவை எத்துணை இனிமையாகவும் எளிமையாகவும் அமைந்துள்ளன. அவர் ஆக்கியுள்ள தமிழ்ச் சொற்களை, ஆங்கிலச் சொற்களின் ஒலிகளைப் போலவே, அவர் ஒலித்துக் காட்டியபோது, தமிழ் உள்ளங்களெல்லாம் பூரிப்படைந்தன. ''இஃதன்றோ தமிழ் வளர்ச்சி'' என்று எடுத்துப் பேசி எல்லோரும் இறும்பூதெய்தினர்.

திரு. இராசவேலு அவர்கள் தமிழ்நாடு சிறப்புக் காவலரின் துணை கொண்டு, தாம் ஆக்கியுள்ள சொற்களைச் செய்ம்முறைப்படுத்தியும் காட்டினார். Left, right; Left, right என்னும் சொற்களுக்குப் பதிலாக 'இடம் வலம்', 'இடம், வலம்' என்னும் சொற்கள் வானில் இடிமுழக்கம் செய்தன.

இவற்றையெல்லாம் கேட்டுத் திளைத்த மாநாட்டுப் பேராளர்கள் ''காவல் துறையின் கட்டளைச் சொற்கள் மட்டுமல்ல. எந்தத் துறைக்கு எந்தச் சொல் தேவையாயினும் அந்தச் சொல்லை அழகு தமிழிலேயே அமைக்க முடியும்'' என்று உளந்திறந்து பேசினர். ''தமிழில் முடியுமா'' என்று கேட்பவர்கள் இனிமேல் தமிழ்நாட்டில் யாருமே இல்லை என்றும் முடிவு செய்தனர்!

ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டிற்குத் தனி மதிப்புக் கொடுக்கின்றனர். ஆட்சி மொழியில் கூட இரு நாடுகளுக்குமிடையே ஒரு சீர்மை (uniformity) நிலவ வேண்டுமென்று பேராவல் பூண்டுள்ளனர். ஒரு சில மொழி பெயர்ப்புகளைப் பொறுத்த வரையில், இரு நாடுகளுக்கு மிடையே வேறுபாடுகள் காணப்படுவது தெரிய வந்தது. எடுத்துக் காட்டாக Middle school என்னும் பெயரை ''நடு நிலைப் பள்ளி'' என்று நாம் மொழி பெயர்க்கின்றோம். ஆனால் ஈழத்திலே இதனை ''இடை நிலைப் பள்ளி'' என்று வழங்குகின்றார்கள். Department என்னும் சொல்லை ''துறை'' என்று நாம் வழங்குகின்றோம். ஆனால், அவர்களோ ''திணைக்களம்'' என்று குறிக்கின்றார்கள். உயர்நீதிமன்ற நீதிபதியை நாம் ''நீதியரசர்'' என்று அழைக்கின்றோம். ஆனால் அவர்களோ உச்ச நீதிமன்ற நீதிபதியைக் குறிப்பிடும்போதுதான் ''நீதியரசர்'' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். இந்நிலையை நீடிக்கவிடாமல், ஒரு சீர்மை காண வேண்டுமென்பதில் அவர்களின் துடிப்பு தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. இதனை உணர்ந்து கொண்ட தமிழ்நாட்டுப் பேராளர்களாகிய நாங்கள் திருடனுக்குத் தேள்கொட்டியது போல திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தோம். ''நம் நாட்டிற்குள்ளேயேகூட ஒரு சீர்மை ஏற்படவில்லையே. விரைந்து செயலாற்ற வேண்டுமே'' என்று மனத்திற்குள்ளேயே பேசிக் கொண்டோம்.

கொஞ்சும் தமிழை விஞ்சுகின்ற மொழி வேறு எதுவுமே இல்லை என்று சொன்னால், அது மிகையாகாது.



## விழுப்புரத்திலிருந்து தமிழ்ஜோதி!

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, விழுப்புரம் தமிழ் இளைஞர் நற்பணி மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தமிழ் ஜோதியைத் தொடர் ஓட்டமாகக் கொண்டு வந்தார்கள். திருக்குறள் கருத்தரங்கின் தலைவர் திருக்குறளார் முனுசாமியிடம் (6-1-81ல்) வழங்கினார்கள்.

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்! உயர்ந்த தரம்! நியாயமான விலை! இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை—600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# நூல் நயம்

(இந்தப் பகுதிக்கு நூல்கள் அனுப்புவோர், இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.—ஆசிரியர்.)

## தமிழர் நாட்டு விளையாட்டுகள்

**ஆசிரியர்:** இரா. பாலசுப்பிரமணியம்

**வெளியீடு:** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600 020.

**விலை ரூ. 14** **பக்கங்கள்: 330**

தமிழர் வாழ்க்கையில் விளையாட்டுகள் பெரும் இடத்தைப் பெறுகின்றன. பிஞ்சுப் பருவ முதல், வயது முதிர்ந்த நிலை வரை நாட்டுப் புறங்களில் பல்வேறு வகையான விளையாட்டுகள் உள்ளன. அவற்றை ஆய்வு செய்து சிறப்பான நூலாக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

ஆடவர் விளையாட்டு, மகளிர் விளையாட்டு, சிறுவர் விளையாட்டு, சிறுமியர் விளையாட்டு, சிறுவர் சிறுமியர் விளையாட்டு என விளையாட்டுகளை வகைப்படுத்தி மிக விரிவாக ஆய்வு நடத்தியிருக்கிறார் ஆசிரியர். கள ஆய்வும் நடத்தி நாட்டுப்புறப் பகுதிகளில் விளையாடப்படும் விளையாட்டுகளை ஒன்று கூட விடாமல் மிக விரிவாக எழுதியிருப்பது பாராட்டுக்குரிய செயல். இந்நூலைப் படிக்கும் போது ஒரு நவீனத்தைப் படிப்பது போன்று இருக்கிறது.

உளவியலை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுகளையும் எடுத்துக் காண்பித்திருக்கிறார். அடுத்தவர்களிடம் வீண் அரட்டை அடிக்காமல் தாய்மார்கள் தங்களது பொழுதை நல்லவகையில் செலவிடுவதற்குரிய வகையில் நமது நாட்டுப்புற விளையாட்டுகள் உள்ளன என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார். இந்த விளையாடல்களில் பலவற்றை நாமும் சிறுவயதில் விளையாடியுள்ளோம் என்பதை நினைவு கூரச் செய்கிறார். படிப்பவர் தமது பிஞ்சுப் பருவ நிகழ்ச்சிகளைத் திரும்பிப் பாராமல் இருக்க முடியாது. வரைபடங்களின் வாயிலாக விளையாட்டுகள் விளக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

மொத்தத்தில் இந்நூல் தமிழர் நாட்டு விளையாட்டுகளை எடுத்துச் சொல்வதுடன் தமிழகத்தின் நாட்டுப்புறப் பாடல்களையும் எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது. தமிழர்களின் வாழ்வியல் குறித்து வெளிவந்துள்ள ஆய்வு நூல்களில் இது தனி இடம் பெறுகிறது.

5வது உலகத் தமிழ் மாநாட்டைஒட்டி உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடுகளான ஐந்து நூல்களை மதுரையில் (8-1-81) மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் வெளியிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.



## தமிழர் ஆடைகள்

**ஆசிரியர்:** டாக்டர் கே. பகவதி

**வெளியீடு:** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600 020.

**விலை ரூ. 16** **பக்கங்கள்: 430**

தமிழர்கள் ஆடையைக்குறித்து மிகப்பழங்காலத்திலேயே அறிந்து வைத்திருந்தனர். தமிழகத்திலே உருவாக்கப்பட்ட மெல்லிய ஆடைகளை கிரேக்கம், ரோமாபுரி போன்ற நாடுகள் ஒரு காலத்தில் மிக விருப்பமுடன் வாங்கி அணிந்திருக்கின்றன. அத்தகைய ஆடைகள் தமிழர் வாழ்வில் பெற்ற-பெற்றுள்ள சிறப்பை எல்லாம் செம்மையாக ஆய்வு செய்து நூலாக்கியிருக்கிறார் ஆசிரியர். தொல்காப்பியம் முதல் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு வரையுள்ள இலக்கியங்களில் குறிப்பிட்ட சில இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து அவை உணர்த்தும் ஆடைகளை அடிப்படையாக வைத்து இந்த நூல் மாளிகையை அமைத்திருக்கிறார் ஆசிரியர்.

'வரலாற்றை உணர்வதற்கு உதவும் பல்வேறு மூலங்களில் ஆடையும் ஒன்று' என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதும், 'தட்பவெப்ப நிலையின் காரணமாகவும் மான உணர்ச்சியின் காரணமாகவும் ஆடை அணிந்தபோதிலும் அழகுணர்ச்சியின் காரணமே தலையாயது' என்றும் தெரிவித்திருப்பது உண்மையின் படப்பிடிப்பாகத் தெரிகிறது.

ஆடை அணியும் வழக்கம் எவ்வாறு வந்தது - தமிழர் எத்த

கைய ஆடைகளை எல்லாம் அணிந்தனர்-எந்தெந்தப் பருவத்துக்கு ஏற்றவாறு ஆடை அணி பூண்டனர் என்பதை எல்லாம் நுணுகி ஆய்ந்து இந்த நூலை அளித்திருக்கும் ஆசிரியரின் ஆய்வுத் திறனைப் பாராட்டுவது தகும்.

ஆடை குறித்து கலைச்சொல் அகராதி - ஆடைகுறித்துள்ள பழமொழிகள், அவற்றிற்கிணையான ஆங்கிலப் பழமொழிகள், நம்பிக்கைகள், இலக்கியத்தில் ஆடை பயின்றுள்ள வரிக்ள் ஆகியவற்றைத் தொகுத்து மிகச் சிறப்பான முறையிலே வழங்கியிருப்பதைக் கண்ணுறும்போது ஆசிரியரின் பேருழைப்பு நமக்குத் தெளிவாகிறது. சாதனையைச்செய்து தமிழ்மொழிக்குத் தக்க தொண்டு செய்திருக்கிறார் நூலாசிரியர் எனில் அது மிகையானதன்று

### தமிழர் கண்ட மனம்

ஆசிரியர்: கரு. நாகராசன்

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600 020.

விலை ரூ. 9 பக்கங்கள்: 216

மனம் படைத்தவன்தான் மனிதன். மனம் என்பது கண்ணால் காண முடியாதது,

நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் ஆகிய பெயர்கள் மனத்தைக் குறிக்க உதவுகின்றன. இவை யாவும் ஒரு பொருள் குறிக்கும் சொற்களென்றாலும்கூட - குறிப்பில் வேறுபாடுகள் உண்டு. இந்தக் கருத்தை ஆய்ந்து அருமையான நூலாகத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

நற்றிணை புறநானூறு, அப்பர் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திவ்ய பிரபந்தம், கம்பராமாயணம், தாயுமானார் பாடல்கள், திருவருட்பா, பாரதியார் கவிதைகள் ஆகிய 10 இலக்கியங்களை அளவுகோலாக வைத்துக் கொண்டு அவற்றில் நெஞ்சம், உள்ளம், சிந்தை ஆகிய சொற்கள் பயன்படுத்தப் பெற்றிருக்கும் விதத்தைத் தெளிவாக விளக்கியிருக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது.

விளக்கங்களும் அவற்றிற்குரிய இலக்கியச் சான்றுகளும் விரிவாகவும் பொருத்தமாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சொல்லாராய்ச்சி, மொழி ஆராய்ச்சி, உளப்பாங்கு ஆராய்ச்சி ஆகியவற்றின் பெட்டகமாகத் திகழ்கிறது இந்நூல்.

தமிழர்கள் உளநூல் அறிந்தவர்கள் என்றும் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் உள்ள உணர்வையே வலியுறுத்துகின்றன என்றும் சொல்லப்படும் கருத்துக்கள் உண்மையானவையே என்பதற்குச் சான்றுதரும் இவ் ஆய்வு நூல்—மனம் படைத்த அனைவரும் படிக்க வேண்டிய அரும் நூல்.

### தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்

ஆசிரியர்: டாக்டர் க. காந்தி

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை—600 020

விலை: ரூ. 16 பக்கங்கள்: 418

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி என்று தமிழினம் இலக்கியங்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் தொன்மை வாய்ந்தவர்கள் என்று ஆய்வாளர்கள் நிறுவியுள்ளார்கள். தமிழர்களிடையே பழங்காலத்தில் இருந்து வந்த பழக்கம், வழக்கம், நம்பிக்கை, மரபு ஆகியவை பலப்பல. அவை எவ்வாறு தோன்றின என்பதையும் நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை போன்ற இலக்கியங்களில் எல்லாம் அவை எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் ஆராய்ச்சி நோக்குடன் நூலாக வடித்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.


தமிழரசு
சந்தா விவரம்
ஓர் ஆண்டு ரூ 12
அரை ஆண்டு ரூ 6


தமிழகத்தில் இருந்து வந்த மடலேறுதல், சிலம்பு கழி நோன்பு, ஏறு தழுவுதல் போன்ற பழக்கங்களும் மன்னனின் பிறந்த நாள் விழா, இந்திர விழா ஆகியவற்றைக் கொண்டாடும் வழக்கங்களும் இம்மை, மறுமை, சுவர்க்கம் - நரகம் ஆகிய நம்பிக்கைகளும், கால காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை இலக்கியங்களின் வாயிலாகவும் நடைமுறைச் செயல்களின் வழியாகவும் நிறுவியுள்ள ஆசிரியரின் திறமை பாராட்டுக்குரியது.

இந்நூலை, தமிழகத்தின் வரலாறு - தமிழ்ச் சமுதாயத்தின் வரலாறு என்றுகூடக் குறிப்பிடலாம். கருத்துக் கருவூலம் இந்நூல்.

### தமிழக நாட்டுப்புறக் கலைகள்

ஆசிரியர்: டாக்டர் ஏ. என். பெருமாள்

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை—600 020

விலை: ரூ. 10 பக்கங்கள்: 208

தமிழகத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. என்னதான் நவீனமயமான கலைகளுக்கு வரவேற்புத் தந்தாலும் - பழங்கலையை மறந்து விடாமல் போற்றி - காப்பாற்றி - வளர்த்து வருகிறது. 35 எம். எம்., 70 எம். எம்., சினிமாஸ்கோப் என்றெல்லாம் திரைப்படக்கலை வளர்ச்சி பெற்று வரும் இந்த நாளிலும் கரக ஆட்டம் என்றால் ஓடோடிச் சென்று காணக் கூடிய மக்கள், தமிழகத்தில் இருக்கின்றனர். கரகம், சிலம்பம் போன்ற நாட்டுப்புறக் கலைகள் அழிந்து போகாமல் நின்று நிலவி, மக்களை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன. இந்த உண்மையை எடுத்துக் காட்டியிருக்கிறார் நூலாசிரியர். கரகம், காவடி, புரவியாட்டம், சிலம்பம்போன்ற நாட்டுப்புறக் கலைகளின் தோற்றம் குறித்தும் அவற்றின் செயற்பாடு குறித்தும் விரிவாக ஆய்வு நடத்தி அற்புதமான நூலாக யாத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

சமூகக் கலைகள், சமயக் கலைகள், வழிபாட்டுக் கலைகள், தொன்ம விளக்கக் கலைகள் இப்படி இவற்றை வகைப்படுத்தி விளக்கியிருப்பது பாராட்டுக்கு உரியது. ஒவ்வொரு கலையையும் குறித்துப் படிக்கும்போது, அந்தக் கலை நிகழ்ச்சியைக் கண்ணால் பார்ப்பது போன்ற உணர்வு நமக்கு ஏற்படுகிறது.

பின் இணைப்பு என்னும் பகுதியில் 67 வகை நாட்டுப்புறக் கலைகளை அட்டவணையிட்டு, இனம், பாகுபாடு ஆகியவற்றை வகுத்துத் தொகுத்துத் தந்திருப்பதும்—பல இடங்களில் புகைப்படங்களை இணைத்திருப்பதும் போற்றுதலுக்குரியன.

'தமிழரசு' இதழில் தொடர் கட்டுரையாக வந்தது என்ற பெருமை இந்நூலுக்கு உண்டு. தமிழக நாட்டுப்புறக் கலைக்கு ஆதாரமாக விளங்குகிறது என்ற சிறப்பும் இதற்கு உண்டு!

—புலவர் தமிழ்ப்பித்தன்



# இந்தியாவிலேயே சிறந்த என்.சி.சி மாணவி!

மாமூலன்

அட்டை சொல்லும் கட்டுரை

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு—

தேசிய மாணவர் படைகளின் அனைத்து இயக்ககங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் தமிழ்நாடு தேசிய மாணவர் அணி முன்னணியில் நின்று வெற்றி வாகை சூடி வீர முதன்மை வெற்றிக் கொடியைப் பெற்ற பொழுது நடைபெற்ற பாராட்டு விழாவில் பாராட்டுரை வழங்கிய மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் குறிப்பிட்டார்கள் :

''எதிர்காலத்திலும் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழக மாணவர்கள் முதல் வரிசையில் நிற்க வேண்டும் என்ற நிலையை நாம் உருவாக்கி வர வேண்டும்.

'' நம்முடைய மாணவர்கள் பெற்ற வெற்றி நமக்கு மட்டும் சொந்தம் அல்ல. நாட்டு மக்களுக்கும் நாட்டு வாழ்வுக்கும் சொந்தமானதாகும்.

''இந்திய மாணவர்கள் மத்தியில் முன்வரிசையில் நிற்பவர்கள் தமிழர்கள் என்று சொல்லும் அளவுக்கு வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம்.

தொடர்ந்து தமிழகம் எதிலும் முன்னின்று தகுதி சேர்த்து தமிழ்ப் பண்பை-தமிழ்நாட்டுப் பண்பைப் பாதுகாத்துத் தர வேண்டும்''

இவ்வாறு முதல்வர் அவர்கள் எடுத்துரைத்ததை கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழகத்து மாணவியர் உண்மையாக்கி காட்டியிருக்கிறார்கள்.

டில்லியில் குடியரசு நாள் அணிவகுப்பை ஒட்டி நடைபெற்றிடும் தேசிய மாணவர் படை முகாமில் 1979ம் ஆண்டில் சென்னை ராணி மேரிக் கல்லூரி மாணவியான செல்வி சிவகாமசுந்தரியும் 1980ம் ஆண்டில் சென்னை எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி மாணவி. செல்வி சாரதா ராமச்சந்திரனும் 1981-



ஆம் ஆண்டில் சென்னை எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி மாணவியான செல்வி எஸ். சுந்தரியும், தேசிய மாணவர் படையில் அனைத்து இந்தியாவிலும் சிறந்தப் பயிற்சி படைஞராக (All India Best Cadet -Senior wing ) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

கடந்த இரண்டுஆண்டுகளாகத் தொடர்ந்து எஸ். ஐ.ஈ. டி.கல்லூரி மாணவிகளே இந்தியாவில் சிறந்த என். சி. சி. மாணவியாக தேர்ந் தெடுக்கப் பட்டிருப்பது, அக்கல்லூரிக்கு பெருமைக்குரிய செய்தியாகும்.

**செல்வி எஸ். சுந்தரி**

சென்னைவித்யோதயா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படித்த சுந்தரி பள்ளியில் படிக்கும் பொழுதே விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கியுள்ளார். மாநில அளவுப்போட்டிகளில் பள்ளி விளையாட்டுக் குழுவுக்கு தலைமை தாங்கியுள்ளார். செல்வி எஸ். சுந்தரியின் தந்தை மத்திய அரசு பொதுப்பணித் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற இஞ்சினியர். எஸ். வி. சர்மா, தாய் திருமதி ஜானகி.

எஸ். ஐ. ஈ. டி. கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி. எஸ். ஸி. (வேதியியல்) வகுப்பில் படிக்கும் சுந்தரி, கல்லூரியில் சேர்ந்த பிறகுதான் என். சி. சி. யில் சேர்ந்தார்.

இம்முறை தாம் சிறந்த மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்படுவோம் என்று முதலில் இவர் எதிர் பார்க்கவில்லை. ஆனால் அங்கு சீனியர் டிவிஷன் மாணவியர்களுக்கு நடைபெற்ற போட்டியில் அத்தனையிலும் முதன்மையாக வந்து சிறந்த மாணவியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



இந்தப் போட்டிக்கு ஒவ்வொரு கல்லூரியிலிருந்து சிறந்த என். சி. சி. மாணவர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிலிருந்து சிறந்த மாணவ மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிலும் சிறந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டு அனைத்து இந்தியப் போட்டியில் பங்கேற்கின்றனர்.

பதினாறு மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். எல்லா போட்டிகளிலும் அதிக பாயிண்ட் எடுத்தவரே அனைத்து இந்தியாவிலும் சிறந்த பயிற்சிப் படைஞராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

## பெருமை மிக்க தமிழ்நாடு என்.சி.சி.

தமிழ்நாடு தேசிய மாணவர்ப்படை இயக்ககம் பெருமை மிக்கதாக விளங்கி வருகிறது. தேசிய மாணவர்ப்படைகளுக்கான இயக்ககங்கள் அமைக்கப்பட்டவுடன், 1964-ஆம் ஆண்டுக்குப்பிறகு அனைத்து இயக்ககங்களுக்கான வீர முதன்மை வெற்றிக்கொடி அளிக்கப்பட்டு வருகிறது.

நமது தமிழ்நாடு - புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்கம் இதுவரை எட்டுமுறை, முறையே 1968, 1971, 1973, 1974, 1975, 1977, 1978, 1980 ஆகிய ஆண்டுகளில் வெற்றிவாகை சூடி, வீர முதன்மை வெற்றிக்கொடியைப் பெற்றுள்ளது. இயக்ககம் என்ற அமைப்பு உருவாகுவதற்கு முன்பே 1962-லும் தமிழ்நாடு அணியினர் வெற்றி பெற்றுள்ளனர்.

பங்கேற்ற பதினாறு ஆண்டுகளில் இதுவரை ஒன்பது முறை தமிழ்நாடு அணி வெற்றிவாகை சூடியுள்ளது போற்றிப் பாராட்டற்குரிய செயலாகும்.

இவ்வாண்டு நடைபெற்ற குடியரசு நாள் முகாமில் விளையாட்டுப்போட்டிகளில் ஏற்பட்ட புள்ளிக்குறைவால் முதலிடத்தைப் பெறுவதில் தமிழ்நாடு என். சி. சி. அணியினருக்குத் தடை ஏற்பட்டது எனினும், இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

ஆனாலும், உடற்பயிற்சியில் முதலிடம் அகில இந்திய சிறந்த சீனியர் டிவிஷன் பெண்கள் பயிற்சிப் பிரிவில் (எஸ். சுந்தரி) முதலிடம், துப்பாக்கி சுடுவதில் சீனியர் டிவிஷன் பெண்கள் பிரிவில் (ராஜலட்சுமி) முதலிடம், துப்பாக்கி சுடுவதில் ஜூனியர் பிரிவில் (பி. சபீதா)முதலிடம், எல்லா இயக்ககங்களுக்குமிடையே ஹோம் நர்சிங்கில் சீனியர் பிரிவு பெண்களுக்கான போட்டியில் (ஆர். பமீலா) முதலிடம் என்று ஐந்து முதல் பரிசுகள்.

இத்துடன் ஐந்து இரண்டாவது பரிசுகள், ஐந்து மூன்றாவது பரிசுகள், இரண்டு நான்காவது இடம் என்று வெற்றி பெற்று வந்துள்ளனர்.

பெருமைமிக்க இந்த வரலாற்றைத் தமிழ்நாடு என்.சி.சி. அணி தொடரும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு.



சென்னை எஸ். ஐ. ஈ. டி. கல்லூரியின் மாணவியானசெல்வி சாரதா ராமச்சந்திரன் கடந்த ஆண்டில் என். சி. சி. சீனியர் டிவிஷனில் சிறந்த பயிற்சிப் படைஞராகத் தேர்ந்தெடுக்கப் டார் இவ்வாண்டு அதே கல்லூரி யின் மாணவியான செல்வி சுந்தரி அனைத்து இந்தியாவிலும் சிறந்த என். சி. சி. மாணவியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார். இது குறித்து அக்கல்லூரி முதல்வர் திருமதி ராஜம் கிருஷ்ணன் கூறி னார்.

''தொடர்ந்து எங்கள் கல்லூரி மாணவியரே சிறந்த என். சி. சி. மாணவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது எங்களுக்குகிடைத்த நல்வாய்ப்பு என்றே சொல்லலாம் இப்படி தொடர்ந்து எங்களுக்குப் பரிசு கிடைக்கக் காரணம், எங்கள் பயிற்சி ஆசிரியையின் கடுமையான உழைப்புதான் கார ணம். மாணவியரின் ஒத்துழைப் பும் உண்டு என்றாலும் முழுமை யான காரணம், எங்கள் பயிற்சி ஆசிரியையின் உழைப்பு என்பதை எங்கள் மாணவியரே ஒப்புக் கொள்கின்றனர்.

எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி வர லாற்றுத்துறைப் பேராசிரியரும் என். சி. சி. பயிற்சி ஆசிரியரு மான செல்வி ஞானமணி அவர்கள் கூறினார்: ''எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி, என்.சி.சி.யில் 100 மாணவியர் உள்ளனர். எங்கள் மாணவியரின் வெற்றிக்கு காரணம் கடுமையான உழைப்பு தான். தொடர்ந்து இந்த வெற் றியை தக்க வைத்துக் கொள்ளு வோம் என்ற நம்பிக்கை எங்களி டம் இருக்கிறது. அடுத்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்படும் மாணவிய ருக்கு இப்பொழுதே பயிற்சி அளிக்கத் தொடங்கியுள்ளோம்.'' என்று.

மிகுந்த ஆர்வத்துடன் சொல் லும் அவர் போன்றோர் கடுமை யாக உழைத்து பயிற்சி அளிக்கும் பொழுது சிறந்த மாணவியர் உரு வாக முடியும் என்பதை செல்வி ஞானமணியின் குரலில் தெரியும் நம்பிக்கை நமக்கு உணர்த்து கிறது.

சிறந்த என். சி. சி. மாணவி யாக தேர்ந்தெடுக்கப்படுகிறவர் இந்தியத் தலைமை அமைச்ச ரிடம் பரிசு பெற்றார். 'இதனால் தமிழ்நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படைக்கு சுழற் கோப் பையும் கிடைக்கிறது.

மாநிலத்தில் சிறந்த என்.சி.சி. மாணவிக்கு உரிய பதக்கமும் ரூ. 300 மதிப்புள்ள பத்திரமும் மறு ஆண்டுக்கு சம்பள உதவிப்பண மாக ரூ. 1200 அளிக்கப்படுகிறது

கடந்த ஆண்டு முதல் இளை ஞர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் சிறந்த என். சி. சி. மாணவி கனடா நாட்டுக்கு அனுப்பப்படு கிறார். அங்கு மூன்று மாதம் தங்கி வரலாம்.

இத்தகைய நல்வாய்ப்பையும் செல்வி சுந்தரி பெற்றுள்ளார். தமது முயற்சியாலும் உழைப்பா லும் இந்தியாவிலேயே சிறந்த என். சி. சி. மாணவியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு புகழ் குவித் துள்ள செல்வி சுந்தரியை நாமும் பாராட்டுவோம்!

## இரண்டாவது பரிசு

தேசிய மாணவர் படையில் அனைத்து இந்தியாவிலும் ஆண்கள் சீனியர் டிவிஷனில் சிறந்த பயிற்சிப் படைஞர் போட்டியில் இரண்டா வது இடத்தை பெற்றிருக்கிறார். லயோலா கல்லூரி மாணவரான சிவராம் செல்வகுமார்.

விமானப்படைப் பிரிவில் பயிற்சி பெற்றுள்ள இவர், வாரண்ட் ஆபீசர் என்ற பொறுப்பில் என். சி. சி. யில் பணியாற்றுகிறார்.

ஏர்க்காடு மான்ஃபோர்டு பள்ளியில் படித்த இவர், இப் பொழுது லயோலா கல்லூரியில் பி. ஏ. (பொருளாதாரம்) இரண் டாம் ஆண்டில் படித்து வரு கிறார். இவரது தந்தை ஆர். காளியப்பன் ஐ.பி.எஸ். அலுவலர் ஆவார்.

பள்ளியில் படிக்கும்பொழுது என். சி. சி. ராணுவப் படைப் பிரிவில் பயிற்சி பெற்ற இவர். ஏன் கல்லூரியில் சேர்ந்தவுடன் விமானப்படை பயிற்சி பிரிவில் சேர்ந்தார் என்று வினவியபோது 'விமானம் ஓட்டப் பயிற்சிபெற்று வருகிறேன் அதனால்தான்' என் றார்.

சிவராம் செல்வகுமாருக்கும் இளைஞர் பரிவர்த்தனை திட்டத் தின் கீழ் கனடா நாட்டுக்குச் சென்று வர வாய்ப்பு உள்ளது.

# குறைந்த அளவு நீரினால் ஏற்படும் நீர்ப்பாசனப் பிரச்சினைக்குத் தீர்வு:

# வோட்டா

## ஸ்ப்ரிங்க்ளர் ஸிஸ்டம்.




வோட்டா ஸ்ப்ரிங்க்ளர்ஸ். கட்டுறுதி மிக்கது. நம்பகமானது. பராமரித்தல் எளிது. சிறு வயல் களுக்கும், பெரு நிலப்பரப்புகளுக்கும் நீர்ப்பாசனம் செய்ய மிகவும் சிறந்தது. மண்ணின் தன்மை, நில அமைப்பு, விதைக்கும் பயிர், என்றிவ்வாறான பலவும் கருத்திற் கொண்டு, அதிக விளைச்சல் பெறும் வகையில் ஸ்ப்ரிங்க்ளர் ஸிஸ்டத்தைச் சரிவர பயன்படுத்தும் முறையை, வோல்டாஸ் தொழில் அறிஞர் உங்களுக்குப் போதிப்பர். வோட்டா ஸ்ப்ரிங்க்ளர் உபயோகிப்பதால் 50% கூடுதல் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கிறது; விளைச்சலும் இருமடங்கு ஆகிறது.

வோட்டா ஸப்மெர்ஸிபிள் பம்ப்புடனும் உபயோகிக்கக் கூடியது வோட்டா ஸ்ப்ரிங்க்ளர்ஸ்.

உங்களது நீர்ப்பாசனத் தேவைகளுக்கேற்ப நாங்கள் வழங்குவன: கேட்டெட் பைப், பெர்ஃப்-ஓ-ரெய்ன், டிரிப் இரிகேஷன் ஸிஸ்டம் ஆகியன; இக்கருவிக் கலங்களுடன், இவற்றைப் பயன்படுத்தும் முறைக்கான தொழில் நுட்பத்தை, எமது பயிற்சி பெற்ற தொழிலறிஞர் உங்களுக்குக் கற்பிப்பர் — இலவசமாக.

வோட்டா கருவிக்கலங்களுடன், வோல்டாஸ் நிறுவனத்தின் புகழ்பெற்ற விற்பனைக்குப் பிந்தைய சேவையின் பயனும் உங்களுக்குக் கிடைக்கும்.

வோல்டாஸ் அளிக்கும் விதவிதமான நீர்ப்பாசனக் கருவிக்கலங்கள் :



வோட்டா ஸ்ப்ரிங்க்ளர் இரிகேஷன் ஸிஸ்டம்.



வோட்டா பெர்ஃப்-ஓ-ரெய்ன் இரிகேஷன் ஸிஸ்டம்.




வோட்டா டிரிப் இரிகேஷன் ஸிஸ்டம்.



வோட்டா கேட்டெட் பைப் இரிகேஷன் ஸிஸ்டம்.





வோட்டா லிஃப்ட் இரிகேஷன் ஸிஸ்டம்.

HTB-VOL-6027-A

**வோல்டாஸ் — விளைச்சல் பெருகிட விளைச்சல் சிறந்திட**

**வோல்டாஸ் லிமிடெட்**
ஆக்ரோ-இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்ஸ் டிவிஷன்,
52, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை 600 001.



உடல் ஊனமுற்றோருக்குப் பேருதவி புரிவதில் தமிழக அரசு பலவகையிலும் முனைந்து செயல்பட்டு வருகிறது.

சென்னை, சாந்தோமில் உள்ள "அரசினர்-பார்வையிழந்த மகளிர் மறுவாழ்வு இல்லம்" அதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இங்கே புடவை, துண்டு, வேட்டி, போர்வை போன்றவற்றிற்கான நெசவுத் தொழிலும், சாக்பீஸ், சாக்பீஸ் பெட்டி செய்வதும் பார்வையற்ற பாவையருக்குக் கற்பிக்கப்படுகின்றன. இவ்வாறான பயிற்சியளிப்பதற்காக மூன்று ஆசிரியர்களை நியமித்திருக்கிறது அரசு

இந்தப் பார்வையிழந்த மகளிர் மறுவாழ்வு இல்லத்தில் நெசவுப் பிரிவில் 15 பேரும், சாக்பீஸ்


பார்வை இழந்தாலும் பாகில் கவனம்...

# பார்வையிழந்த பாவையர் பணிபுரியும் இல்லம்!

ராஜ்


சாக்பீஸ் செய்தல்...

பெட்டி செய்திடும் பிரிவில் 15 பேருமாக ஆக மொத்தம் 30 பேர் பயிற்சிக்காலம் முடிந்து பணியாற்றி வருகிறார்கள் இப்போது !

இந்தத் தொழிலில் அவர்கள் ஆறு மாதத்திலிருந்து ஒன்பது மாதம் வரை பயிற்றுவிக்கப்படுகிறார்கள். பயிற்சிக்காலத்தில் ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

இங்கே, பார்வையற்ற மகளிர் தத்தமக்குரிய தறிகளில் அமர்ந்து நூலிழைப் பரவலின் எல்லையறிந்து தறிபோடுவது வியப்புக்குரியதாக இருக்கிறது. பயிற்சி ஆசிரியர்கள், அவர்கள் நெசவை அவ்வப்போது கண்காணித்தவாறிருக்கிறார்கள். இங்கே நெய்யப்படும் உருப்படிகள் கோ-ஆப்-டெக்ஸ் மூலம் வாங்கிக் கொள்ளப்படுகின்றன. இவர்களது வேலைக்குத் தக்கபடி கூலி தரப்படுகிறது. சாக்பீஸ் பிரிவில் பணியாற்றுவோரால் கொஞ்சம் சுறுசுறுப்பாகப் பணியாற்ற முடிகிறது. இந்தப் பிரிவில் பணியாற்றிடும் ஒரு பார்வையற்ற பெண் 100 குரோஸ் சாக்பீஸ் தயாரித்தால், அதற்கான தினக் கூலியாக நாலரை ரூபாய் தரப்படுகிறது.

தங்குமிடம், சாப்பாட்டு வசதியெல்லாம் கூட, இந்தப் பார்வையற்ற மகளிர் மறுவாழ்வு இல்லத்தில் அரசு மூலமே செய்துதரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



சாக்பீஸ் பெட்டி செய்தல்...

மிகக் குறுகலான இடம். அடுத்தடுத்துத் தறிகள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும், யார் எந்தத் தறியில் அமர்வது என்று கூறப்பட்டு, கூறுபவர் கைநொடியைக் கவனித்தவாறே வேறெங்கும் இடித்துக் கொள்ளாமலும், தவறிச் செல்லாமலும் பார்வையற்ற பாவையர் சென்றமர்வது, நெசவுத்துணியில், இடம் பார்த்து வண்ண நூல்களை இழையோடச் செய்வது ஆகியவை அவர்களுடைய அனுபவ அறிவின் கூர்மையைக் காட்டுவதாக இருக்கின்றன.

பார்வையற்ற பாவையரே பணிபுரியும் இந்த இல்லம், பார்வையுள்ளோராலெல்லாம் பரிவோடு நோக்கி அன்பு காட்டத்தக்கதாக விளங்குகிறது.



## தமிழ்நாட்டில் விவசாயிகள் நலக்குழு அமைப்பு

வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட "விவசாயிகள் நலக்குழு" ஒன்றை மாநில அளவில் அமைக்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழுவின் துணைத் தலைவராக வேளாண்மைத்துறையின் ஆணையாளர் மற்றும் செயலாளர் இருப்பார். விவசாயத்தின் நிபுணத்துவம் பெற்றோரும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

விவசாயிகள் நலனுக்கென நடைமுறைப் படுத்த வேண்டிய திட்டங்கள் பற்றியும், விவசாயப் பொருட்களின் உற்பத்தி விலைக்கேற்ப சீரான விலை நிர்ணயம் செய்வது பற்றியும் இக்குழு ஆலோசனை கூறும்.

மாவட்டங்களிலும் இதுபோன்ற குழுக்கள், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்படும்.

# 1981 மக்கள் கணக்கெடுப்பின் குறிக்கோள்!

இந்திய மக்கட் கணக்கெடுப்பு பிப்ரவரி மாதம் 9-ந் தேதியன்று நாடு முழுவதும் தொடங்கியுள்ளது. பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இப்பணி நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் புள்ளி விவர சேகரிப்பில் ஒரு முக்கிய அம்சமாகும்.

மார்ச் முதல் தேதியன்று நம் நாட்டின் மக்கள் தொகை எவ்வளவு என்பதும், மக்களின் பொருளாதார மற்றும் சமூக சம்பந்தப்பட்ட பல தகவல்களும் இக்கணக்கெடுப்பின் மூலம் நமக்குத் தெரியவரும்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது நம் நாட்டைப்பொருத்தவரை ஒரு புதிய முயற்சி அல்ல; இப்பணி நூறு ஆண்டுகளுக்கும் மேலாகச் சீரிய முறையில் நடைபெற்றுவந்துள்ளது. இப்பொழுது நடைபெறவிருக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நம் நாடு விடுதலை அடைந்தபின், நான்காவதாக நடைபெறும் கணக்கெடுப்பாகும்.

திறமையான நிர்வாகம் மற்றும் திட்டங்களுக்குத் தேவையான விவரங்களை மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து பெறுகிறோம். நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக நாம் வகுக்கும் பல்வேறு சமூக, பொருளாதாரத் திட்டங்களுக்கு இவ்விவரங்களே அடிப்படையாகும். சரியான விவரங்கள் இருந்தால்தான், அரசின் நிதியினைப் பல்வேறு திட்டங்களுக்குச்செவ்வனே, முக்கியத்திற்கேற்ப, ஒதுக்கீடு செய்யமுடியும். பாராளுமன்றம், மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கான தொகுதிகளைவரையறுக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் கிடைக்கும் விவரங்கள் உதவுகின்றன. இக் கணக்கெடுப்பின் மூலம் நாடு, மாநிலம், மாவட்டம், நகரம் மற்றும் கிராம ரீதியில் விவரங்கள் வெளியிடப்படுகின்றன.

தற்சமயம் நடைபெறவிருக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், இரண்டு முக்கிய அட்டவணைகள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. 'குடும்ப அட்டவணை'யில் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றிய விவரங்களும் 'தனி நபர் சீட்டில்' ஒவ்வொரு நபரைப் பற்றிய விவரங்களும் பூர்த்திச் செய்யப்படும். வீடற்ற மக்களின் கணக்கெடுப்பு ஒரே நாளில், அதாவது, பிப்ரவரி 28-ஆம் தேதியன்று நடைபெறுகிறது.

குடும்ப அட்டவணையின் மூலம் சேகரிக்கப்படும் விவரங்கள் வீட்டைப் பற்றியதாகவும், குடிநீர், மின்சாரம் போன்ற வசதிகள் பற்றியதாகவும் இருக்கின்றன. மேலும், நிலஉரிமை, வீட்டுமனை மற்றும் நிலக்குத்தகை ஆகியவை பற்றிய விவரங்களும் இதன் மூலம் சேகரிக்கப்படும்.

தனிநபர் சீட்டில் வழக்கமாகக் கேட்கப்படும் இனம், வயது, தாய்மொழி, மதம் பற்றிய விவரங்களோடு பள்ளி அல்லது கல்லூரி சென்று கல்வி பயில்பவர்களைப் பற்றிய விவரங்களும் உள்ளன. ஒருவர் ஈடுபட்டுள்ள வேலை பற்றியவிவரங்களும், பிரதான தொழில் மட்டுமின்றி வேறு ஏதேனும் வேலையில் ஈடுபட்டிருந்தால் அதைப் பற்றிய விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன. வறுமையும் வேலையின்மையும் இன்று நம்மை எதிர்நோக்கியிருக்கும் மிகப் பெரிய பிரச்சனைகளாகும். முதன் முறையாக இக்கணக்கெடுப்பில் வேலையின்றி அல்லல்படும் ஆயிரக்கணக்கான நபர்களைப் பற்றிய விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன. இவை, தமிழ் நாட்டில் நாம் மேற்கொள்ளவிருக்கும் பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று குடியேறுதல், இனவளர்ச்சி போன்ற விவரங்கள் ஒரு சில பகுதிகளில், மாதிரி அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. இவை மக்கட் தொகை ஆராய்ச்சி, குடும்ப நலத் திட்டங்கள் போன்ற பணிகளுக்குப் பெரிதும் உதவும்.

நீங்கள் தரும் விவரங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும். அவைகள் சட்டம் அல்லது நிர்வாகம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படமாட்டாது. இதற்கு சென்சஸ் சட்டமே வழி செய்கிறது. சரியான முழுமையான விவரங்களை அளிப்பதே சிறந்த மக்கட்தொகை கணக்கெடுப்பின் குறிக்கோளாகும்.



# உபரியாக செலுத்திய வரியை திரும்பக் கோருங்கள்

**நீங்கள் உபரி வருமான வரி செலுத்தியிருந்தால் உபரித் தொகையைத் திருப்பிப் பெற முடியும் முக்கியமாக நீங்கள் :-**

கீழ்க் காணுபவற்றின் மூலம் வருவாய் பெறுபவராக இருந்தால் :—

* டிவிடென்ட்
* வட்டி
* வருவாயிலிருந்தே வருமான வரிப் பிடித்தம் செய்யப்படும் வேலை

மேலும், உங்களது மொத்த ஆண்டு வருமானம், வரி விதிப்புக்குட்படக் கூடிய குறைந்தபட்சத் தொகையைக் காட்டிலும் குறைவானதாக இருந்தால், ஃபாரம் எண் 30ல் வருவாயிலிருந்தே பிடித்தம் செய்யப்பட்ட தொகையைத் திருப்பிப் பெற விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

ஆயினும், பணம் திருப்பிப் பெறக் கோரப்படுவதற்குரிய கணக்கீடு ஆண்டின் கடைசி நாள் முடிந்து, இரண்டு வருடங்களுக்குள், பணத்தைத் திருப்பிப் பெறுவதற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விட வேண்டும். ஒரு எடுத்துக்காட்டு — கணக்கீட்டாண்டு 1980—81 (1979—80ல், வருவாயிலிருந்தே பிடித்தம் செய்யப்பட்ட வரித் தொகை)க்கான வரி திருப்பிப் பெறுவதற்கான விண்ணப்பம், 1983 மார்ச் 31 அல்லது அதற்கு முந்தின தேதியில் சமர்ப்பித்துவிடப்பட வேண்டும்.

குறிப்பு :- உங்களது வருமானம், வரிக்குரியதல்லவெனில், வருமானத்திலிருந்து வரிப் பிடித்தம் செய்யப்படாமலிருப்பதற்காக, உங்கள் வருமான வரி அதிகாரியிடமிருந்து சான்றிதழொன்றையும் கோரலாம்.

வெளியிட்டவர் :

**டைரக்டர் ஆஃப் இன்ஸ்பெக்ஷன்,**
(ரிசர்ச், ஸ்டாடிஸ்டிகல் & பப்ளிகேஷன்)
இன்கம்—டாக்ஸ் டிப்பார்ட்மென்ட்,
நியு டில்லி - 110001.

—டிஏவிபி 80/411

மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

# சேலம் மலைவாழ் மக்கள் வாழ்வு செழித்திட...

சூ. ர. கருப்பண்ணன், ஐ.ஏ.எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சேலம் மாவட்டம்.

கலை வளமும் மலை வளமும் மிக்கது சேலம் மாவட்டம். இன்முகம் காட்டும் மக்கள், இயற்கை எழில் கொஞ்சும் இடங்கள். கலை நுணுக்கம் மிக்க கைத்தறி, சேலம் இரும்பாலை, செழித்து வரும் பலவித உலோகத் தொழில்கள் இரசாயனத் தொழில்கள், தின்னத் தெவிட்டாத தீஞ்சுவை மாங்கனி, உழவர் பெருமக்களை உச்சிக்கு உயர்த்தி விடும் குச்சிக்கிழங்கு, சர்க்கரை ஆலை, நூற்பாலைகள், சிமெண்ட் ஆலை, காகித ஆலை, தனி மனித வாழ்க்கைக்கும் சரி, குடும்ப வாழ்க்கைக்கும் சரி, நாட்டின் தொழில் வளத்திற்கும் சரி அடிப்படையாகத் திகழும் மின்சாரம் உற்பத்தியாகும் மேட்டூர் நீர்த்தேக்கம் முதலியவற்றால் சேலத்தின் புகழ் ஓங்கி நிற்கிறது.

இயற்கை அமைப்பால் இன்னொரு வகையிலும் சேலம் பெருமை பெற்றுத் திகழ்கிறது. இதமான சூழ்நிலைகளும் பதமான பருவ நிலைகளும், மிதமான குளிரும் கொண்டு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகளுக்குக் குறைவில்லாத மலை வளம் பெற்ற மாவட்டமாகவும் சேலம் திகழ்கிறது. அன்றாட வாழ்க்கையில் அலுத்துக் களைத்தவர்கள், அலுவல் அல்லது தொழில் பிரச்னைகளில் உள்ளச் சோர்வு கொண்டவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டு உடலையும் உள்ளத்தையும் புதுக்கிக் கொண்டு புத்துணர்ச்சியோடு மீள்வதற்கு இந்த மலைப்பகுதிகள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. பணம் படைத்தவர்கள்தான் இப்படிச் சென்று வர முடியும் என்பது இல்லை. நடுத்தர மக்களும் ஏழைய எளிய மக்களும்கூட இயற்கை எழிலைக் கண்டு மகிழ்ந்து புதிய திடமும் தெம்பும் பெற்று மீள முடியும். அந்த வகையில் இந்த மலைகளுக்குச் சென்று வருவதற்குச் செலவு மிகவும் குறைவே. மக்கள் பெறும் மனநிறைவோ மிக அதிகம்.

சேலம் மாவட்டத்தின் ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சைமலை, அரநூத்து மலை ஆகிய ஐந்து முக்கியமான மலைப் பகுதிகள் உள்ளன. ஏர்க்காடு சேர்வராயன் மலையில் 67 கிராமங்களில் 16,823 பேரும், கொல்லிமலையில் 14 கிராமங்களில் 23,799 பேரும், கல்ராயன் மலையில் 16 கிராமங்களில் 16,038 பேரும், பச்சைமலையில் 18 கிராமங்களில் 5,109 பேரும் அரநூத்து மலையில் 13 கிராமங்களில் 5,128 பேரும் மலைவாழ் மக்கள் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இவர்கள் சமுதாயத்தில் சகல வசதிகளும் மறுக்கப்பட்டு, அந்நிய ஆட்சியாளரால் புறக்கணிக்கப்பட்டு, ஜாகீர்தார்கள் பாளையக்காரர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு, பலபேர் கொத்தடிமைகளாக வாழ்ந்து வந்தவர்கள். நாட்டின் சுதந்திரத்தைத் தொடர்ந்து மலைவாழ் மக்களின் வாழ்க்கையில் விடிவெள்ளி அரும்பிற்று. எனினும் விடிவு ஏற்பட்டு விடவில்லை. அதற்காகத் திட்டமிட்டு, படிப்படியே முன்னேற்றம் காண சுதந்திர அரசுகள்-மத்திய அரசும் மாநில அரசும்—முனைந்து செயல்பட்டு வருகின்றன. இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய திட்டம், ''ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் நலத் திட்டம்'' ஆகும். இந்தத் திட்டம் சேலம் மாவட்டத்தின் ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன்மலை, பச்சைமலை, அரநூத்துமலை ஆகிய ஐந்து மலைகளில் 1976-77ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.



சமவெளிகளிலிருந்து சுற்றுலா விரும்பிகளாக வரும் மக்கள் அனுபவிக்கும் வசதிகளில் ஒரு சில வசதிகள்கூட மலைவாழ்மக்கள் பெற்றிருப்பது இல்லை. இந்தப் பரிதாபகரமான நிலையை உடனடியாசப் போக்கவும், மலைப் பகுதிகளில் மறுமலர்ச்சி வாழ்க்கையினைத் தோற்றுவிக்கவும் ''ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் நலத்திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் 1976-77ல் ரூ. 5.30 லட்சமும், 1977-78ல் ரூ. 33.80 லட்சமும் 1978-79ல் ரூ. 33.58 லட்சமும், 1979-80ல் ரூ. 44.10 லட்சமும் செலவிடப்பட்டன. இந்தப் பணிகள் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் ஓரளவுக்கு உதவியிருப்பது கண்கூடு.

இந்த நான்காண்டுக் காலத்தில் இந்த ஐந்து மலைப்பகுதிகளிலும் பச்சிளங் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொள்ளவும், பிஞ்சுப் பருவத்திலேயே படிப்பின்மீது ஆர்வத்தைத் தூண்டி விடவும் பாலர் பள்ளிகள் 25 ஆரம்பிக்கப்பட்டன. பாலர் பள்ளிகள் எட்டுக்குக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. வளர்ந்த குழந்தைகள் தங்கிப் படிக்கும் உறைவிடப் பள்ளிகள் ஆறு திறக்கப்பட்டன. இந்தப்பள்ளிகளில்கல்வி போதனை, உணவு, உறைவிடம் முதலிய எல்லாமே இலவசமாக வழங்கப்படுகின்றன.

மலைவாழ் மக்களின் ஏழ்மை நிலையினையும் அவர்களது அறியாமையினையும் பயன்படுத்திக் கொண்டு, லேவாதேவிக்காரர்களும் இடைத்தரகர்களும் மலையில் விளையும் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, கீழே கொண்டு வந்து அவைகளை அதிக விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம் சம்பாதித்து வந்தார்கள். அவர்களை நீக்கவும், மலைவாழ் மக்களின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாய விலை கிடைக்கவும், உபயோகிப்பாளர்கள் ஏமாற்றப்படாமல் இருக்கவும் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்று சொல்லப்படும் 'லேம்ப்' சொசைட்டிகள் நான்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை நன்கு செயல்பட்டு, மலைவாழ் மக்களுக்குப் பெரும் பயன் அளித்து வருகின்றன. இந்தச் சங்கங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இப்பொழுது குடியிருப்பு மனைகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், அத்தியாவசியப் பண்டங்களும், அன்றாடத் தேவைப் பொருள்களும் மலைவாழ் மக்களுக்கு நியாயமான விலையில், வேண்டும்பொழுது கிடைத்திட வகை செய்யப்பட்டுள்ளது. நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ளது போலவே, மலைப் பகுதிகளிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு, ஐந்து மலைகளிலும் 104 கடைகள் செயல்பட்டு வருகின்றன.

மலைவாழ் மக்களுக்கு நல்ல சுகாதார வசதிகளும் மருத்துவ வசதிகளும் கிடைக்கச் செய்ய அரசு அரும்பாடுபட்டு வருகிறது. ஏர்க்காட்டில் வாழவந்தியிலும், கொல்லிமலையில் வாழவந்தி நாட்டிலும் ஏற்கெனவே ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது கல்ராயன், பச்சைமலை ஆகிய மலைகளில் மருத்துவ நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊர்தியில் குடிசைப் பகுதிகளுக்கே சென்றுநோயாளிகளைப் பரிசோதித்துச் சிகிச்சை செய்யும் நடமாடும் மருத்துவக் குழுக்களும் மலைவாழ் மக்களுக்குப் பணியாற்றுகின்றன. பேறுகாலத்தின்போது, மலைவாழ் பெண்களுக்கு உடனடி மருத்துவ உதவி கிடைப்பதற்கு அனுசரணையாக, பச்சைமலையில் மலைவாழ் பெண்கள் 13 பேருக்கு. பேறுகால மருத்துவம் பார்ப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மலைப் பகுதி கிராமங்களுக்கு மின் வசதி மற்றும் குடிநீர் வசதி கிடைக்கச் செய்வதில் முனைந்து செயலாற்றப்பட்டது. மின்வசதி 40 கிராமங்களுக்கும், குழாய்க் கிணறு வசதி 26 கிராமங்களுக்கும் கிடைத்தன. மேலும் பல கிராமங்களுக்கு இவ்வசதிகள் கிடைக்கச் செய்யப்படும்.

மலைவாழ் பெண்களுக்கு இலவசமாகத் தையல் பயிற்சி அளிக்க கல்ராயன்மலை, ஏர்க்காடு, கொல்லிமலை ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் நடைபெறுகின்றன. பட்டு வளர்ப்பதில் 45 குடும்பங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மற்றொரு துணைத் தொழிலாகத் தேனீ வளர்த்துத் தேன் எடுப்பதில் ஈடுபடுவதற்காக, 1650 தேனீப் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. மானிய விலையில் ஆடு, மாடுகள், உழவுமாடுகள் பழச் செடிகள் முதலியனவும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் ஆடுகள் 3,340, கோழிகள்



1,310, பன்றிகள் 1,480, கறவை மாடுகள் 4,630ம், உழவு மாடுகள் 400ம் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் பழச்செடிகள் 1,147 ஏக்கருக்கும், விதைகள் 8,589 ஏக்கருக்கும்வழங்கப்பட்டிருக்கின்றன; இரசாயன உரம் 3,662 மெட்ரிக் டன்னும், விவசாயக் கருவிகள் 5,262 விநியோகம் செய்யப்பட்டுள்ளன.



கல்ராயன் மலையில் 10 கிலோ மீட்டர் தார்ச் சாலை போடப்பட்டது. பச்சைமலையில் 10 கிலோமீட்டர் தார்ச் சாலை போட்டு முடியும் தறுவாயில் உள்ளது. சிறுபாசனத் திட்டங்கள் 15 கடந்த நான்காண்டுகளில் ஐந்து மலைப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டன.

1980-81ஆம் ஆண்டுக்கு, 'ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் நலத்திட்ட''த்திற்கு மொத்தம் ரூ. 71.21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை இந்த நிதியாண்டில் என்ன என்ன காரியங்களுக்குச் செலவிடப்பட்டு வருகிறது என்பதைப் பார்ப்போம்.

மலைப்பகுதிகளில் மண் வளத்தைப் பாதுகாப்பதற்காக ரூபாய் 2.85 இலட்சமும், கால்நடை வளர்ச்சிக்கு ரூ.6.03 இலட்சமும், மின் வசதிக்கு ரூ.3 இலட்சமும், சாலை வசதிக்கு ரூ.30 இலட்சமும் பட்டு வளர்ப்புக்கு ரூ. 5.74 இலட்சமும், வன வளர்ப்புக்கு ரூ. 3.50 இலட்சமும், மருத்துவ வசதிக்கு ரூ. 3.17 இலட்சமும், விவசாயத் திட்டத்திற்கு ரூபாய் 3.55 இலட்சமும் பாசன வசதிக்கு ரூ. 2.19 இலட்சமும், உறைவிடப் பள்ளிகள் 2 ஆரம்பிக்க ரூ. 40 ஆயிரமும் பாலர் பள்ளிகள் 20 திறக்க ரூ. 3 இலட்சமும், கொல்லிமலையில் மூலிகைப் பண்ணை அமைக்க ரூ. 2.85 லட்சமும், கிராமக் குடிநீர் திட்டத்திற்கு ரூ. 4.93 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 71.21 இலட்சம் செலவிடப்படும்.

இந்தத் திட்டங்களைச் சீராகவும் செம்மையாகவும் செயல்படுத்துவதில், தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் சுறுசுறுப்புடன் பணியாற்றி வருகின்றனர். இவையனைத்தும் நிறைவேறினால், மலைவாழ் மக்களின் வாழ்க்கைத்தரம் இன்னும் உயரும் என்பதில் ஐயமில்லை. எனினும் செய்யப்பட வேண்டிய காரியங்களைக் கருதிப் பார்க்கின்றபொழுது, மன நிறைவுக்கோ, மெத்தனத்திற்கோ இடம் வைக்காமல் மேலும் முடுக்கிப் பணியாற்ற வேண்டும் என்பது தெளிவாக விளங்குகிறது. அந்தத் தொலை நோக்கு இலட்சியத்தை நோக்கி, சேலம் மாவட்டம், மலைவாழ் மக்களின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டு, மாபெரும் பொறுப்புணர்ச்சியோடு அயராது உழைத்து வருகிறது.



'மொழி பெயர் தேயம்' என்று நமது தாய் மொழி தமிழ் வழங்கிடாத இடங்களை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அத்தகைய 'மொழிபெயர் தேயங்'களில் தமிழ் மொழி வளர்ந்திட நமது தமிழ்நாடுஅரசு பல்வேறு உதவிகளை அளித்து வருகிறது.

அந்த மொழி பெயர் தேயங்களில் ஒன்றான திருப்பதியில் அமைந்துள்ள திரு வேங்கடன் பல்கலைக் கழகம் தீந்தமிழை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் செயல் பட்டு வருகிறது. அதன் பணியை விளக்குகிறது இந்தக் கட்டுரை

# திருவேங்கடத்தில் வளரும் தீந்தமிழ்!

மாமூலன்

ஆந்திர மாநிலம், 1953ஆம் ஆண்டு அக்டோபர் முதல்நாள் அமைக்கப்பட்டவுடனேயே ராயலசீமா பகுதி மக்களுக்காக ஒரு பல்கலைக் கழகம் அமைக்கத் திட்டமிட்டார்கள். அதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப திருப்பதியில், 'ஸ்ரீவேங்கடேஸ்வரா பல்கலைக் கழகம்'' 2-9-1954-ல் தொடங்கப் பெற்றது.

திருப்பதியில் தொடங்கப் பெற்ற திருவேங்கடவன் பல்கலைக்கழகம் வெள்ளி விழாவைக் கொண்டாடி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

திருப்பதியில் உள்ள இப்பல்கலைக் கழகத்தோடு இணைந்துள்ள பல கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்றுவிக்கப்படுகின்றது. இப்பல்கலைக்கழகத்திலுள்ள தமிழ்த் துறை, இன்று தமிழாராய்ச்சியை ஊக்குவித்து அரும்பணிகளை ஆற்றி வருகிறது.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் தெலுங்கு தமிழிலக்கிய ஒப்பியல் ஆய்வும் சமய நூல் ஆராய்ச்சியும் முதலிடம் பெறுகின்றன.

தெலுங்கு தமிழ் இலக்கிய வரலாற்றிலும் வைணவ இலக்கியத் தத்துவ நூல் வெளியீட்டிலும் இப்பொழுது திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஈடுபட்டுள்ளது.

இங்கு ஆராய்ச்சி செய்து இதுவரை 9 பேர் எம். பில். பட்டம் பெற்றுள்ளனர். எம். பில். பட்டத்திற்கு 7 பேர் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், பேராசிரியர் டாக்டர் பொன். சௌரிராசனார், டாக்டர் தேவசங்கீதம், டாக்டர் கடிகாசலம் போன்றவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்கள்.

இப்பொழுது இந்தப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் பதிவு செய்து கொண்டு டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்து வருபவர்கள் திருவாளர்கள் என். தர்மா ரெட்டி, டி.மோகனரங்கசாமி, ஆர். ராஜகோபாலச்சாரி, பி. சி. குழந்தை, கே. ரங்கசாமி, வி. எஸ். திருமாவளவன், டி. செல்வன், ஏ. ஜெகதீசன், ஆர். மானுவல், ஏ. ஆறுமுகம் பிச்சை முகமது, பி. சண்முகம், எல். எச். கந்தசாமி, எஸ். உலக



நம்மாழ்வார்



மாணிக்கவாசகர்



நம்மாழ்வார் மாணிக்கவாசகர் கருத்தரங்கினை மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

நாதன் எஸ். முத்துசாமி, என். கிருபானந்தன், சிலம்பொலி சு. செல்லப்பன் ஆகியோர் ஆவர்.

முன்பு இப்பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சி செய்பவர்கள், வெளியிலிருந்துகொண்டு ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட வாய்ப்புஅளிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது இங்கு தங்கியே ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும் என்று விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில், 'வேமண்ணாவும் திருவள்ளுவரும்', 'தெலுங்கு தமிழ் இலக்கியத்தில் கண்ணப்ப நாயனார்', 'அன்னமையா - ஆழ்வார் பாடல்கள்' முதலிய தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

இங்கு தமிழ்த் துறையில் நடைபெறும் கருத்தரங்குகளில்மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் ஆகியோர் பங்கேற்றிருக்கின்றனர்.

அண்மையில், திருவேங்கடத்தில் நிகழ்ந்த தென்னிந்திய தெய்வத் தமிழ்க் கருத்தரங்கான நம்மாழ்வார் மாணிக்கவாசகர் கருத்தரங்கில் அறிஞர் பெருமக்கள் பலர், தமிழ்நாட்டிலிருந்தும் கருநாடகத்திலிருந்தும் கேரளத்திலிருந்தும் வந்து கருத்துரை வழங்கினார்கள்.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் பொன். சௌரிராசனார் பெரும் முயற்சியில் நிகழ்ந்த இந்தக் கருத்தரங்கை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்:

''திருவேங்கடத்தில் பல்வகையாலும் தமிழ் வளர்த்து வரும், திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை பாராட்டுக்கு உரியது.

தமிழ்நாடு அரசு மொழிபெயர் தேயமாக விளங்கும் இடங்களில் தமிழ்வளர இயன்ற உதவிகளைச் செய்து வருகிறது. இனியும் செய்யும். தாய்த் தமிழை வளர்ப்போரின் தன்னலங் கருதா தொண்டைப் பாராட்டும்''

மேலும் அமைச்சர் அவர்கள் கருத்தரங்கின் பணி சிறந்து விளங்கிட வாழ்த்தினார். திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையிலிருந்து ஒய்வு பெற்ற டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி அமைச்சர் பாராட்டினார்.

இக் கருத்தரங்குக்குத் தலைமை தாங்கிய துணை வேந்தர் பேராசிரியா இராமசர்மா மில்டன் முதலான உலகச் சமய இலக்கியச் சான்றோர் அனைவரும் கண்ட காட்சி ஒன்றே என்று விளக்கினார்.

பிற்பகல் தெலுங்கு மலையாளம், கன்னட மொழியில் பயின்றுவரும் இந்து சமய இலக்

நம்மாழ்வார் மாணிக்க வாசகர் கருத்தரங்கில் ஒரு காட்சி!





மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திருக்குறள் கருத்தரங்கில் உரையாற்றும் காட்சி.

கியச் சான்றோர் தம் பாடல்களுடன் நம்மாழ்வார் மாணிக்கவாசகர் பாடற் கருத்துக்கள் ஒப்பிட்டு ஆயப்பெற்றன. இந்த அமர்வில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தெலுங்குப் பேராசிரியர் திரு. கோதண்டராமய்யா திருவேங்கடவன் பல்கலைக் கழகச் சமஸ்கிருதப் பேராசிரியர் திரு. ஆர். ஸ்ரீகிருட்டிண சர்மா, கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் திரு கே. சுப்பிரமணியம், பெங்களூர்ப் பல்கலைக் கழகக் கன்னடப் பேராசிரியர் திரு சித்தானந்த மூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர். பல்கலைக் கழகக் கிழக்கியல் நிலைய இயக்குநர் டாக்டர் எஸ். சங்கரநாராயணன் தலைமை தாங்கினார். தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி 'நம்மாழ்வார் மாணிக்க வாசகர்' பாடல்களில் உருக்கம்' என்னும் பொருள் பற்றித் தனிச் சொற்பொழிவொன்று ஆற்றி முதல்நாள் அமர்வினை நிறைவு செய்தார். மறுநாள், 'நம்மாழ்வார் மாணிக்கவாசகர்' பாடல் நலங் குறித்த முற்பகல் பிற்பகல் அமர்வுகளுக்கு முறையே பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரும், பேராசிரியர் சு. வெள்ளைவாரணனாரும் தலைமை தாங்கினர். கடலூர் திரு தி. கி. நாராயணசாமி நாயுடு, பேராசிரியர் டி. ஞானசுந்தரம், பூஆர் கே. வேங்கிடசாமி ரெட்டியார், பேராசிரியர் முத்து சண்முகம், பேராசிரியர் மெ. சுந்தரம், துணைப் பேராசிரியர் செ. உலகநாதன் ஆகியோர்பங்கேற்று ஆய்வுக் கட்டுரை வழங்கினர்.

கடைசி நாளன்று இருபெருஞ் சமய இலக்கியச் சான்றோர் உலகுக்கு வழங்கியருளிய மெய்ப் பொருள் குறித்த அமர்வுகள் இரண்டு நிகழ்ந்தன. முறையே டாக்டர் வி. வரதாச்சாரி (French Institute of Indology) மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சைவசித்தாந்தத் துறைத் தனி அலுவலர் திரு க. வச்சிரவேலு முதலியார் அவர்களும் தலைமை ஏற்று வழிகாட்ட திரு கே. எஸ். இராமாநுசாச்சாரியார், காஞ்சீபுரம் திரு டி. ஏ. கிருஷ்ணமாச்சார்யார், திரு கே. சீனுவாச வரதன் (திருவேங்கடவன் பல்கலைக் கழகக் கிழக்கியல் நிலையம்), உசுமானியாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் துரை சிங்கார வேலனார், பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி, திருச்சிற்றம்பலம் திரு மு. அருணாசலம் அவர்கள் ஆகியோர் பங்கேற்று ஆய்வு உரை நிகழ்த்திச் சிறப்பித்தனர்.

மிகச் சிறப்பு வாய்ந்த இந்தக் கருத்தரங்கம் போன்றவைமொழி பெயர் தேயங்களில் நிகழ்வதால் நம் செந்தமிழ்மொழியின்அருமையினை மற்ற மொழியினரும் உணர்ந்திடும் வாய்ப்புகள் மிகுந்துள்ளன.

திருவேங்கடவன் பல்கலைக் கழகம் போன்று தமிழ் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் அருந்தொண்டு ஆற்றிவரும் அமைப்புகளின் முயற்சிகளை ஊக்குவிப்பதும் பாராட்டிப் போற்றுவதும் நம் கடமையாகும்.

## பல்கேரியாவில் தமிழ்மொழி பயிற்றுவிக்கத் திட்டம்

பல்கேரியாவில் விரைவில் தமிழ், பாலி மற்றும் இதர சில இந்திய மொழிகளின் வகுப்புகள் துவக்கப்படும். சோபியா பல்கலைக் கழகத்தில் இவ்வகுப்புகள் நடத்தப்படும். இங்கு ஏற்கனவே இந்தி மற்றும் சம்ஸ்கிருத வகுப்புகள் நடத்தப் படுகின்றன.

புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் நூல்களை பல்கேரிய மொழியில் மொழி பெயர்க்கும் திட்டமும் உள்ளது. இதற்கான வேலைகள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும், அது தற்போது தீவிரப்படுத்தப்படும் என்றும் பல்கேரிய கலாச்சார அமைச்சர் மேடமி எல். ஜிவ்சோவா கூறினார்.

# அரசின் அறிவிப்புகள் - ஆக்கப்பணிகள்

**1—2—81**

பின்தங்கிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு வாரியம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

**3—2—81**

கூட்டுறவு வங்கிகளில் அடகு வைக்கப்படும் நகைக்கடன் மீது வசூலிக்கப்படும் வட்டி குறைக்கப்படும் என்று மாண்புமிகு சட்ட-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

தமிழகத்திலுள்ள அனைத்துக் குடிசைகளுக்கும் மின்சார விளக்குகள் போடப்படும் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

**6—2—81**

எட்டையபுரத்திலுள்ள பாரதிமணி மண்டபத்தை அரசு எடுத்துக் கொண்டு சிறப்பாகப் பராமரிக்கும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

திருச்சி அருகே ரூ. 32 கோடி செலவில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்.

**7—2—81**

தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 120 ஊராட்சி ஒன்றியங்களில் 'தன்னிறைவுத் திட்டம்' அமல்படுத்தப்படும். 90 கோடி ரூபாய் இதற்காகச் செலவிடப்படும். இதன் மூலம் 40 ஆயிரம் கிராமங்கள் பயன் அடையும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு பி. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

பஸ்கள், லாரிகளுக்கு வழங்கும் தேசிய பர்மிட்களில் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யுமாறு தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் தெரிவித்தார்.

**9—2—81**

சென்னை பிராட்வே பகுதியிலுள்ள கொத்தவால்சாவடியை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் 'கோயம்பேட்டிற்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது என்று சட்டப்பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். ராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்.

சிறு விவசாயிகளுக்கு, செல்வந்தர்களாக உள்ள விவசாயிகள், கடந்த 3 ஆண்டுகளில் கடன் கொடுத்து சிறுவிவசாயிகளின் நிலங்களை அபகரிக்கும் நோக்கத்துடன் அதிகத்தொகைக்கு எழுதி வாங்கியிருக்கிறார்கள் என்றும், அந்தக்கடனையெல்லாம் ரத்து செய்வதன் மூலம் சிறு விவசாயிகளை அரசு காப்பாற்றும் என்றும் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக மேலவையில் அறிவித்தார்.

**10—2—81**

நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் தங்களால் பள்ளிகளை நடத்த முடியவில்லை என்றால் அதை அரசுக்கு எழுதித் தெரிவித்தால், அரசு அந்தப்பள்ளிகளை ஏற்று நடத்த தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று மேலவையில் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

அரசுப்பேருந்துக் கழகங்கள் சிறப்பாகப் பணியாற்ற ஆலோசனைகளைக் கூற சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு விரைவில் அமைக்கப்படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் தெரிவித்தார்.

கோவில் அர்ச்சகர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கும் சாத்தியக்கூறை ஆராய்வது பரிசிலனையில் உள்ளது என மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம் வீரப்பன் அவர்கள் அறிவித்துள்ளார்.

உணவு விடுதிகளில் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்களின் விலைகளைத் திட்டவட்டமாக நிர்ணயிப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது

லர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

**11—2—81**

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது சம்பந்தமாக ஒரு புதிய சட்டம் கொண்டு வர இருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தை 2 ஆண்டுக் காலத்திற்கு அரசே ஏற்று நடத்த வகை செய்யும் சட்டம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்டது.

**12—2—81**

தமிழ்நாட்டில் சமையல் எண்ணெய்த் தட்டுப் பாட்டைப் போக்கிட ரூ. 6 கோடி செலவில் எண்ணெய் ஆலை ஒன்று நிறுவ அரசு யோசித்துள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் தெரிவித்தார்.

9 இலட்சத்து 15 ஆயிரம் விவசாயிகளுக்கு தமிழக அரசு 73 கோடி ரூபாய் தொகைக்கு கடனைத் தள்ளுபடி செய்து இருக்கிறது. வேறு எந்த மாநில அரசும் இந்த அளவுக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்ததில்லை என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

தொகுப்பு : ஜி. ஆனந்தன்.



## தமிழ் ஆண்டு, திங்கள், நாள் குறியீடாகப் பயன்படுத்தப்படவேண்டும் !

3-5-1980ல் கோவை பேரூரில் கூடிய தமிழகப் புலவர் குழு திருவள்ளுவர் ஆண்டையும் தமிழ்த் திங்களையும் நாள் குறியீடாக அரசு அலுவல்களில் நடைமுறையில் கொள்ளுமாறு ஒரு மனதாகத் தீர்மானம் இயற்றி அதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை வேண்டியது.

தமிழகப் புலவர் குழுவின் இத்தீர்மானத்தை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்தது. மத்திய அரசு வெளியிடும் கடிதங்களில் கிருஸ்துவ ஆண்டுக்கு நேரான தேவநாகரி ஆண்டு, திங்கள் நாள் குறியீடாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேற்கண்ட நடைமுறையைப் பின்பற்றும் வகையில், தமிழக அரசு வெளியிடும் அனைத்து அலுவலக ஆணை, கடிதங்கள், செய்தி, மற்றும் ஏனைய வெளியீடுகளிலும் உடனடியாக கிருஸ்தவ ஆண்டுடன், தமிழ் ஆண்டு, திங்கள், நாள், மற்றும் திருவள்ளுவர் ஆண்டையும் பயன்படுத்த வேண்டுமென தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## தமிழக குடிநீர்த் திட்டங்களுக்கு உலக வங்கி உதவி !

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தலைவர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களுடன் உலக வங்கி தெற்கு ஆசிய குடிநீர்த் துறையைச் சார்ந்த திரு பெர்னார்ட் கிளமண்ட் அவர்களும் திரு ஜமீல் சோபர் அவர்களும் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட உள்ள குடிநீர்த்திட்டங்களைப் பற்றி விவாதித்தார்கள். அதன்படி, கோவை மற்றும் 31 பேரூராட்சிகளுக்கும், சேலம், மேட்டூர் ஆத்தூர் மற்றும் பல பேரூராட்சிகளுக்கும் மதுரை, — வைகை திட்டத்திற்கும் மற்றும் 32 சிறிய பேரூராட்சிகளின் திட்டங்களுக்கும் ரூ. 77 கோடியும், மற்றும் 15 நகரங்களில் குறைந்த செலவிலான சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்த ரூ. 6 கோடியும் பெறுவதற்கான பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெற்றன. இந்த ஆண்டின் இறுதியில் இதற்கான வேலைகள் துவக்கப் படும். இதன் மூலம் வடிகால் திட்டங்கள் அதிக அளவில் நிறைவேற்ற உதவும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.